

மத்ஹபுகளை பின்பற்றுவது ஏன்?

الأئمة الأربعة

الإمام الأعظم أبو حنيفة النعمان بن ثابت

الإمام مالك بن أنس

الإمام محمد بن إدريس الشافعي

الإمام أحمد بن حنبل رضي الله عنهم

மௌலவி
அல்ஹாஜ் M.A. ஷைகு ஹுஸைன் பாகவி

பொருளடக்கம்

முதற் பதிப்பு : ஹிஜ்ரீ 1412,
ஜமாதுல் ஆகிர் 27,
கி. பி. 1992. ஜனவரி 3.

ஹதியா : ரூ. 15-00

சென்னையில் இந்நூல் கிடைக்குமிடம் :-
M. A. ஷேக் ஹுஸைன்,
C/o ஒலிம்பிக் மேச்சிங் டிரஸ்ஸஸ்,
128. ஆற்காட் ரோடு,
வடபழனி, சென்னை-26.

மேல் அட்டை அச்சிட்டோர்
லஷ்மி பாரதி பிரஸ்.

அச்சிட்டோர் :
சௌதரி பிரிண்டர்ஸ்,
வடபழனி கோயில் தெரு,
சென்னை-26.

பொருளடக்கம்

“ஜமா அத்துல் உலமா” மாத இதழின் ஆசிரியர் கண்ணியத்திற்குறிய அபுல் ஹஸன் ஷாதலி ஹழ்ரத் தாமத் பரகாதுஹூம் அவர்கள் மனமுவந்து வழங்கிய

மதிப்புரை

தென்காசி வடகரை மௌலானா மௌலவீ அல்ஹாஜ் எம்.ஏ ஷைகு ஹுஸைன் பாகவீ அவர்களால் தொகுத்து எழுதப் பெற்ற “மத்ஹபுகளைப் பின்பற்றுவது ஏன்?” என்ற ஆதாரப் பூர்வமான நூலைஆதிமுதல் அந்தம் வரை படித்துப் பார்த்தோம். பெரும் உழைப்புக்குப் பின் அநேக நூல்களை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப் பெற்ற இந்நூலுக்கு நமது வாழ்த்துக்களை வழங்குகிறோம். அல்லாஹு தஆலா மௌலவீ ஷைகு ஹுஸைன் சாஹிப் அவர்களுக்கு சிறந்த நற்கூலிகளை வழங்குவானாக, ஆமீன்.

சமீப காலத்தில் சிலர், தங்களுக்கு அல்லாஹ் வழங்கிய அற்ப சொற்ப அறிவுகளைப் பெரிதாக எண்ணிக் கொண்டு, மனம் போன போக்கில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தில்—பிரகாசத்தில் இருந்ததின் காரண மாக சஹாபாக்கள் இறையருளைப் பெற்றனர். உலக மக்களின் நல்வாழ்த்துக்கு என்றும் உரித்தானவர்களாக இருந்தனர்; இருக்கின்றனர்.

ஸஹாபாக்களை அடுத்து : அவர்களைப் பின் பற்றிய வர்கள் தாபியீன்கள், அவர்களைப் பின்பற்றியவர்கள் தபஉத் தாபிஈன்கள்.இவர்கள் நபியவர்களின் நல்வாக்கால் சிறப்புப் பெற்றனர். இந்த இரண்டு தலைமுறைகளில்

பொருளடக்கம்

அனைத்து மக்களாலும் போற்றப்படும் நான்கு இமாம் களும் சேர்ந்து விடுகின்றனர். இஸ்லாத்தின் எழில் மிகுந்த போதனைகளை மாற்ற—திருத்த— முஸ்லிம்களைப் பிளவு படுத்த முயன்ற பல்வேறு கூட்டங்களை அல்லாஹு தஆலா வின் அருளால் முறியடித்து, இஸ்லாத்தின் தூய போதனை களை நிலை நிறுத்தியவர்கள் கண்ணியத்திற்குறிய "இமாம் களே" யாவார்கள். முழு உலகமே இதை ஏற்றிருக்கிறது. கண்ணியத்திற்குறிய இமாம்கள் சாட்டையாலடிக்கப் பட்டும் நஞ்சூட்டப்பட்டும் சிறைச்சாலைகளில் அடைக்கப் பட்டும் அக்கால அரசர்களால் சித்திரவதைச் செய்யப் பட்டனர். அனைத்துக் கொடுமைகளையும் அன்பு, சகிப்புத் தன்மையுடன் ஏற்று, சத்திய இஸ்லாத்தின் கொள்கைகளை அனைவரிடமும் பரப்ப அவர்கள் எடுத்துக் கொண்ட உழைப்பு கொஞ்ச நஞ்சமல்ல! இமாம்களின் கண்ணியத்திற் குறிய சிஷ்யகோடிகள் புரிந்த தியாகமும் அளவிட்டுக் கூற இயலாது.

ஆனால் சில குழப்பவாதிகள், நான்கு இமாம்கள் இஸ்லாத்திற்கு ஆற்றிய அரும்பணிகளை மறுத்து, முஸ்லிம் களையே இமாம்கள் வழி கெடுத்துவிட்டார்கள் என்று பொய்யுரைத்து, எங்களுக்கு இமாம்கள் தேவையில்லை, எவர்களையும் நாங்கள் பின்பற்றமாட்டோம்! என்று எழுதி யும் பேசியும் வருகின்ற அவர்கள் மௌலானா மவ்தூதி அவர்களின் வாக்கியங்களை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இமாம்களை எதிர்ப்பவர்கள் முஸ்லிம் களை சின்னா பின்னாமாக்கத் தூண்டுபவர்களே யாவர். இவர்கள் விஷயத்தில் முஸ்லிம்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நான்கு இமாம்களைவிட தங்களை பெரிய அறிவுள்ளவர்கள் என்று கர்வங் கொண்டு திரிகின் றனர். இவர்களுக்கு நல்லறிவு ஏற்பட அல்லாஹு தஆலா அருள் புரிவானாகவும். ஆமீன்.

இமாம்களின் சேவைகள் பற்றி ஜமாஅத்தே இஸ்லாமி யின் ஸ்தாபகர் அபுல் அஃலா மவ்தூதி அவர்கள் "இது

பொருளடக்கம்

தான் இஸ்லாம்'' என்ற நூலில் அழகுபடக் கூறியிருப்பதை படித்துப் பாருங்கள்.

''குர்ஆன், ஹதீஸ் கட்டளைகளை நன்கு சிந்தித்த மார்க்கப் பெரியார்கள், பொது மக்களின் சௌகரியத்திற் காகத் தெளிவாகவும், விரிவாகவும் மார்க்கச் சட்டங்களை தொகுத்து அளித்திருக்கிறார்கள். அவையே ''ஃபிக்ஹு'' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் குர்ஆனில் உள்ள நுட்பங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாது. சுயமே ''ஷரீஅத்'' கட்டளை களைத் தெரிந்து கொள்ளும் அளவு ஒவ்வொருவரிடமும் போதிய ஹதீஸ் ஞானமில்லை. இதனால் எந்த மார்க்கப் பெரியார்கள் வருஷக்கணக்காக உழைப்பு, சிந்தனை, ஆராய்ச்சிக்குப் பின் ஃபிக்ஹு சட்டங்களைத் தொகுத்திருக் கிறார்களோ அவர்களுடைய நன்றிக்கடனிலிருந்து உலக முஸ்லிம்கள் ஒரு போதும் விடுபடவே முடியாது. அவர் களுடைய உழைப்பின் விளைவாகத் தான் இன்று கோடிக் கான முஸ்லிம்கள் சிரமம் இல்லாமல் ஷரீஅத்தைப்பின் பற்றிக் கொண்டு இருக்கிறார்கள். யாருக்கும் இறைவன், இறைத்தூதர் ஆகியோருடைய கட்டளைகளைத் தெரிந்து கொள்வதில் எத்தகைய கஷ்டமும் ஏற்படுவதில்லை.''

நமது நாட்டிலுள்ள குழப்பவாதிகள். நான்கு இமாம் களை மட்டும் குறைகூறுவதோடு நின்றுவிடவில்லை, முஸ்லிம் சமுதாய மக்களால் போற்றப்பட்டுக் கொண்டிருக் கும் ஸய்யிதினா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானீ, அனைத்துமக்களின் உள்ளங்களிலும் அல்லாஹுதஆலாவை நினைவு படுத்தும் தத்துவ, அறிவுலக மேதை இமாம் கஜ்ஜாலீ ரஹ்மதுல்லாஹி அலைஹிமா,மற்றும் வலிமார்கள் யாவரையும் விமர்சனம் செய்வதில் தங்களின் தவறான அணுகு முறைகளைக் கையாண்டு வருகின்றனர். இன்னும் இஸ்லாமிய ஃபிக்ஹு சட்ட நூல்கள், திருக்குர்ஆன் தப்ஸீர்கள், ஹதீஸின் விரிவுரைகள், மெய்ஞானக் கருவூலங்

களான தஸவ்வுப்Fபுடைய நூல்கள் ஆகியவைகளையும் குறை கூறுவதில் முன்னிலையில் இருக்கின்றனர். மார்க்க அறிவுகளைப் புகட்டும் அரபிமத்ரஸாக்களை அழித்துவிட வேண்டுமென்றும், அம்மத்ரஸாக்களில் இடம் பெற்றுள்ள கிதாபுகளை அழித்துவிட வேண்டும் என்று கூறித்திரிகின்றனர். எதை எடுத்தாலும் குதர்க்கம் புரிவதே அவர்களின் கொள்கையாக ஆகிவிட்டது. இத்தகையவர்களின் விஷயத்தில் முஸ்லிம்கள் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

மத்ஹபுகளை பின்பற்றுவது ஏன்? என்ற இந்த நூல் எங்கும் பரவி அதன் மூலம் மக்கள் பயனடையவும் இன்னும் பல நூல்களை இவர்கள் இயற்றிடவும் அல்லாஹு தஆலா அருள் புரிவானாக, ஆமீன்.

தங்களின் எல்லாரின் துஆவை விரும்பும்
மௌலவீ அபுல் ஹஸன் ஷாதலி

26-6-1412
2-1-1992

பொருளடக்கம்

கண்ணியத்திற்குரிய மௌலானா முஹம்மது அலி சாபூனீ ஹழ்ரத், உஸ்தாது பி குல்லியதிஷ் ஷரீஅதி, வத்திராஸாத்தில் இஸ்லாமிய்யா ஜாமிஆ உம்முல் குரா — மக்கத்துல் முகர்ரமா) அவர்கள் தங்களின் "அல் ஹதியுன் நபவிலியுஸ் ஸஹீஹ், பீ ஸலாத்தித் தராவீஹ்" என்ற நூலில் கூறுகின்றார்கள்.

வாலிபர்களே!

இஸ்லாமியர்களுக்கு குறிப்பாக வாலிபர்களுக்கு நான் கூறுகின்றேன்; சத்தியம் நிரந்தரமானது. அதுவே அல்லாஹு தஆலாவின் திருப்திக்குறியது.

மனோ இச்சையை பின்பற்றுவதும்பிரபலத்தை நாடுவதும் சத்தியமல்ல; உண்மையல்ல.

எனவே, நாம் ஒன்றாக, ஒற்றுமையாக ஒரே அணியில் இருப்பது நமது முயற்சியாக இருக்க வேண்டும். நாம் பிரிவதை அல்லாஹு தஆலா எச்சரிக்கை செய்து, ஒற்றுமையாக இருக்குமாறு பணிக்கிறான்.

மேலும் நீங்கள் யாவரும் (ஒன்று சேர்ந்து) அல்லாஹு தஆலாவுடைய (வேதமாகிய) கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக்கொண்டு) நீங்கள் பிரிந்து விடவேண்டாம்.

(அல்குர்ஆன் : 3-103)

மேலும், அல்லாஹு தஆலா, தர்க்கம் செய்வதையும் பிரிவினை இவை போன்றதைப் பற்றி எச்சரிக்கை செய்கின்றான்.

எவர்கள் தங்களிடம் தெளிவான சான்றுகள் வந்த பின்னரும் தங்களுக்குள் (கருத்து) வேறுபட்டுப் பிரிந்து

போனவர்களைப் போல நீங்களும் ஆகிவிட வேண்டாம். இத்தகையோருக்குத்தான் (மறுமையில்) மகத்தான வேதனையுண்டு. (அல்குர்ஆன் : 3-105)

நீங்கள், அல்லாஹு தஆலாவுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டு (உங்களுக்குள் ஒற்றுமையாயிருங்கள் உங்களுக்குள் தர்க்கித்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறாயின் நீங்கள் தைரியத்தை இழந்து உங்கள் வலிமை குன்றிவிடும். ஆகவே நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹு தஆலா பொறுமையாளர்களுடன் இருக்கிறான். (8-46)

இஸ்லாமிய மக்களே! வாலியர்களே! நீங்கள் ஜமாஅத்தையும் ஜமாஅத்துடன் இருப்பதையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். தவறான கொள்கையுடையவர்களை விட்டும், முஸ்லிம்களின் ஜமாஅத்தை புறக்கணிப்பவர்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான் :

நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும், எவன், (அல்லாஹு தஆலாவுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து, **விசுவாசிகளின் வழியில்லாததில் செல்கின்றானோ** அவனை, நாம் அவன் செல்லும் (தவறான) வழியிலே செல்லவிட்டு (பின்னர்) அவனை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது, செல்லுமிடங்களில் மிகக் கெட்டது. (4-115)

ஓநாய், ஆடுகளில் தனித்துவிடப்பட்டதையே தின்று விடும். எனவே ஜமாஅத்தைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அல்லாஹு தஆலாவின் உதவி ஜமாஅத்தின் மீதே இருக்கிறது. எவன் இத்தகைய ஜமாஅத்தைப் புறக்கணித்து விடுவானேயானால், அதனால் அவன் மட்டும் நரகில் வீசப் படுவான்.

முஸ்லிம்களே! வாலிபர்களே! வீண் வதந்திகளையும், தர்க்கம் புரிவதையும் விட்டுவிடுங்கள், ஏனெனில் இவை

பொருளடக்கம்

இந்த உம்மத்தை அழித்துவிடும். நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நேர்வழி கொடுக்கப் பெற்ற கூட்டம் தர்க்கம் செய்ததாலே வழிகெட்டனர்." என்று கூறியபின் இறைவசனத்தை ஓதிக் காட்டினார்கள். (வீண்) விதண்டாவாதற்காக அன்றி உம்மிடம் அவர்கள் அவரை உதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. (43-59) (திர்மிதீ இப்னு மாஜா, முஸ்னத் அஹ்மத்)

மேலும் நபியவர்கள் கூறினார்கள்; உங்களுக்கு முன் உண்டானவர்கள் அல்லாஹு தஆலாவின் வேதத்திலே தர்க்கம் செய்ததாலே அழிந்தனர் (நூல் : முஸ்லிம்)

முஸ்லிம்களே! வாலிபர்களே!

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஆய்வு செய்த இமாம் களையும், உண்மையான உலமாக்களையும் பற்றிப் பிடித்து கொள்ளுங்கள். ஏனென்றால் அவர்களே மார்க்கத்தில் குறிப்பிடக்கூடிய தகுதியுடையவர்கள்.

மனோ இச்சைக்காக குழப்பம் செய்வோர் தங்களின் பிரபலத்திற்காக அவ்வாறு செயல்படுகின்றனர். அவர்களை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் இக்குழப்பக் கூட்டம். மிகச் சிறந்த இமாம்கள் உருவாக்கிய சட்டங்களை செல்லாததாக ஆக்குவதற்காகவும், மத்ஹபின் மூலம் மார்க்கத்தைப் பின்பற்றுவது வழிகேடு என்றும் கூறி உங்களை அவர்களின் தவறான கொள்கையில் விழச் செய்ய இவ்வாறெல்லாம் செயல்படுகின்றனர். இத்தகையவர்களின் செயல்கள் இறை வசனங்களுக்கு முற்றிலும் முரணான தாகும்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்; நீங்கள் அறிந்து கொள்ளாமலிருந்தால் கற்றோரிடம் கேட்டறிந்து கொள் ளுங்கள். (என்று நபியே! கூறுங்கள்) (16-43)

விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹு தஆலாவுக்கு வழிப் பட்டு நடங்கள். (அவ்வாறே அல்லாஹு தஆலாவுடைய)

தூதருக்கும், உங்கள் அதிகாரிகளுக்கும் வழிபட்டு நடங்கள். (4-59)

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஆய்வு செய்து சட்டங்களை உருவாக்கிய இமாம்கள் "நேர்வழியின் தீபங்கள்" ஒளி, பிரகாசமுடையவர்கள்.

நான் சத்தியமிட்டுக் கூறுகிறேன். அறிவு ஞானத்தால் அனைத்துப் பகுதிகளையும் சூழ்ந்து கொண்ட இமாம் அபூஹனீபா, மதீனாவின் இமாம் மாலிக், மக்காவின் இமாம் ஷாபியீ, இன்னும் இமாம் அஹ்மது (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) ஆகிய இவர்கள் முன்னோர்களில் மிகச் சிறந்தவர்கள்; தீன், ஷரீஅத்தில் நமது முன்னோடிகள்; இத்தகைய தீனோர்கள் இல்லாமலிருந்தால் நாம் யாரைப் பின் பற்றுவது??....

அல்லது குழப்பக் கொள்கையுடையவர்களையா நாம் பின்பற்றுவது!! எனது வாலிபக் கூட்டமே! சட்டங்களை கையாள்வதில் அவசரம் காட்டாதீர்கள். அறிவு-ஞானம் பிக்ஹு சட்டங்கள் இவைகளை அறிந்து கொள்வதில் அவசரம் காட்டாதீர்கள். இவைகள் "மார்க்கம்" ஆகும். ஆகையால் இவைகளை எங்கிருந்து, எத்தகையவர்களிடமிருந்து கையாள்கிறீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். எனவே அதற்குரிய தகுதியுடையவர்களிடமே அவைகளைப் பெற வேண்டும்.

ஹழ்ரத் ஜுஹ்ரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இந்த அறிவு-ஞானம், தீன் மார்க்கமாகும். எனவே உங்களின் தீனை எத்தகையவர்களிடமிருந்து கையாள்கிறீர்கள் என்பதை எண்ணிப்பாருங்கள்.

எனவே, வாலிபர்களே! தங்களின் சுயநலத்திற்காக வேண்டி குழப்பம் விளைவிப்பவர்களை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் இக்குழப்பக் கூட்டம், மிகச்சிறந்தவர்களான இமாம்களை குறை கூறுவதிலே

பொருளடக்கம்

முழுமையாக ஈடுபட்டுள்ளனர். நான் பயப்படுவதெல்லாம். அறிவு—ஞானமில்லா காலத்தில் நாம் வாழ்கிறோம். ஆகையால் இக்குழப்பவாதிகளின் கொள்கையால் நீங்கள் வழி தவறி விடக் கூடாது.

இஸ்லாமிய நெறிமுறைகளை குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் ' மத்ஹபாக'' உருவாக்கித் தந்த இமாம்களே நமக்கு போதுமாகும். இதை விட வேறு வழி நமக்குத் தேவை இல்லை.

எனவே, இப்பூமியில் கிழக்கிலிருந்து மேற்கு வரை முஸ்லிம்கள் தராவீஹ் தொழுகை 20 ரக்அத்துகள் தொழுகின்றார்களே அதுவே சரியான வழியாகும். இதையே ஹதீஸும் அறிவிக்கிறது. இதன் அடிப்படையில் இமாம்கள் வாழ்ந்தனர். இஸ்லாமிய சமுதாயமும் ஸய்யிதுனா ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலம் முதல் இன்று வரை ''தராவீஹ் 20 ரகஅத்துகளே'' என்பதின் மீது ஒன்றுபட்டுள்ளனர். இது நபிமொழிக்கு மாற்றமானது அல்ல ஏனெனில் இது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ''எனது வழிமுறையையும், நேர்வழியிலுள்ள வழிகாட்டக்கூடிய கலிபாக்களின் வழிமுறைகளையும் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்'' என்ற உத்தரவை செயல்படுத்துவதாகும்.

எனவே, இவை (மத்ஹபு முறை) முஸ்லிம்களை ஒற்றுமையாக இருப்பதற்குரியவைகளாகும். ஆகையால் தான் முன்னுள்ள உலமாக்கள் அனைவரும் இதன் அடிப்படையில் ஒன்றுபட்டனர்.

ஸல்லல்லாஹு அலா ஸய்யிதினா முஹம்மதிவ் வ அலா ஆலிஹி வ அஸ்ஹாபி அஜ்மஈன்.

பொருளடக்கம்

بإسمه تعالى شانه

முன்னுரை

அல்ஹம்து லில்லாஹ்! அனைத்துப்புகழும் அல்லாஹு தஆலாவுக்கே சொந்தம். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத் தார்கள்; உத்தம சஹாபாக்கள், இமாம்கள், அவ்லி யாக்கள் நம் அனைவரின் மீதும் அல்லாஹு தஆலாவின் சாந்தியும் கருணையும் என்றென்றும் உண்டாகட்டுமாக, ஆமீன்.

அல்லாஹு தஆலா, தனது அடியார்களுக்கு; குறிப் பாக இஸ்லாமிய மக்களாகிய நம்மவர்களுக்கு மிகப் பெரிய அருள் புரிந்தான். மேலும், நம்மீது முழுபாசமுள்ள ரஸு லாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், புனிதமான குர்ஆன் ஷரீஃபையும் தந்து அருள்புரிந்தான்.

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் நன்கு ஆய்வு செய்து ஷரீஅத் சட்டங்களை தெளிவுபடுத்தித் தந்த நான்கு இமாம்களையும் தந்து அருள்புரிந்தான்.

குர்ஆன் ஷரீஃபுக்கு விளக்கமாக நபியவர்கள் வாழ்ந்து காட்டினார்கள். சஹாபாக்கள் தங்களுக்கிடையில் ஏற் பட்ட பிரச்சினைகளுக்கு நபியவர்கள் மூலம் விளக்கம் பெற்றார்கள். நபியவர்களின் சொல், செயல், ஆமோ தித்தது. இவைகளுக்கு ஹதீஸ் என்று கூறப்படும்.

நபியவர்களின் காலத்திற்குப்பின், சஹாபாக்கள் தங்களுக்கிடையில் ஏற்பட்ட புதிய பிரச்சினைகளுக்கு குர்ஆன், ஹதீஸ் மூலம் தெளிவான விளக்கம் காணாவிட் டால் அவ்விரண்டையும் ஆய்வு செய்து கியாஸ் அடிப் படையில் தீர்வு கண்டார்கள்.

சஹாபாக்கள் காலத்திற்குப்பின் பிரச்சினை பெரு கியது. அப்பொழுது தான் அல்லாஹு தஆலாவின் அருள் பெற்ற நான்கு இமாம்கள் குர்ஆன் ஹதீஸ் அடிப்படை யில் ஆய்வு செய்து அளித்த தீர்ப்பின்படி விடைகாணப்

பொருளடக்கம்

பட்டது. இவர்களுக்குப் பின் இஸ்லாமிய சமுதாயம்; குர்ஆன், ஹதீஸ், அடிப்படையில் இமாம்கள் காட்டிய வழியின் பிரகாரம் இஸ்லாமிய கடமை, செயல்முறைகளைச் செய்யத்துவங்கியது. இன்றுவரை, இன்ஷா அல்லாஹ் உலகம் உள்ள வரை இவ்வாறே இஸ்லாமிய சமுதாயம் ஷரீஅத்தைப் பின்பற்றும். ஆனால், சில குழப்பவாதிகள் இந்த நேரான, சரியான வழியை தவறு என்று கூறி குழப்பம் விளைவிக்கின்றனர். இத்தகையவர்கள், குர்ஆன் ஹதீஸ்களில் சிலதை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி, உண்மை நிலையை மறைத்து குழப்புகின்றனர். எதுவரை என்றால், சில ஹதீஸ்களையும், உத்தம சஹாபாக்களையும் குறை கூறத் துணிந்து விட்டனர். இவர்களைப் போன்ற இவர்களின் முன்னோர் இவ்வாறே குழப்பம் விளைவித்து மாண்டுபோனர். எனவே இத்தகைய குழப்பவாதிகளின் சூழ்ச்சியிலிருந்து ஒவ்வொரு முஸ்லிமும் உஷாராக விலகி இருக்க வேண்டும் என்பதற்காகவும், தக்லீத்—ஒரு இமாமின் மூலம் இஸ்லாத்தைப் பின்பற்றுவது சரியானது தான் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்நூலை அல்பிக்ஹு அலல் மதாஹிபில் அர்பஆ, அல் கர்னுல் இஷ்ரூன். பத்ஹுல்பாரீ, மிர்காத், இஜ்திஹாத் அவர் தக்லீத் பதாவா மஹ்மூதிய்யா, பதாவா ஹதீதிய்யா இஃலா உஸ் ஸுனன், ஹகீகத் பிக்ஹு, இவை போன்ற இன்னும் ஆதாரப்பூர்வமான பல கிதாபுகளைப்பார்வையிட்டு, உலமாக்கள் மூலம் தெளிவு பெற்று எழுதியுள்ளேன்.

ஆனால் சிலர், இஸ்லாமிய மக்களிடையே நூதன முறையில் குழப்பம் விளைவிக்கின்றனர்; அனைவரும் அவரவர் குர்ஆன், ஹதீஸைப் பார்த்து அமல் செய்ய வேண்டும் என்றும், நான்கு இமாம்கள் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கிய வழியைப் பின்பற்றக் கூடாது என்றும் கூறுகின்றனர். ஆனால் இத்தகையவர்கள் தங்கள் தலைவரின் கொள்கை என்னவென்று அறியாத அறிவிலியாக உள்ளனர்.

பொருளடக்கம்

தக்லீதை—மத்ஹபை மறுப்போர் கண் விழித்துப் பார்க்க வேண்டும். இதோ! அவர்களின்....அபுல் அஃலா மவ்தூதி சாஹிப் அவர்கள் இதுதான் இஸ்லாம் என்ற நூலில் கூறுகின்றார்: (5ஆம் பக்கம் பார்க்க)

ஆனால், குழப்பம் விளைவிப்போர் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு, மறு பகுதியை மறைத்துக் கொண்டு அதன் முழுமைக்கு மாற்றமாக நஞ்சுக் கருத்துகளை வெளிப் படுத்துகின்றனர். அவர்களின் இயற்கையான இக் குணத் தின் அடிப்படையில் இந்நூலிலும் சிலதை மறைத்து,சிலதை எடுத்து அதில் குறை என்று கூறி குழப்பம் விளைவிக்க முற் படுவர். எனவே, இந்நூலை முழுமையாக படிப்பவர், அறிஞர் மூலம் தான் மார்க்கத்தை அறிந்து அமல் செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்வர். எனவே மார்க்கத் தின் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கியவர்கள் நான்கு இமாம்களே! என்பதையும் அறிந்து கொள்வர்.

எனவே இன்றைய காலத்தில், நேரான வழியில் சென்று அல்லாஹு தஆலாவை அடைய விரும்புவோர், குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் வாழ்ந்த சஹாபாக்களை யும், அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த தாபியீன்களையும் அவர்களைப் பின்பற்றி வாழ்ந்த இமாம்கள் வழிகளையும் பின்பற்றி நடக்கவேண்டும்.

அல்லாஹு தஆலாவின் பேரருளால் இந்நூலை மக்க ளுக்கு பயன் அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் நீண்ட காலம் முயற்சி செய்து உருவாக்கி யுள்ளேன். இதில் ஏதாவது குற்றம் குறை காணும் உல மாக்கள் எமக்கு அறிவித்தால் அதை மறு பதிப்பில் திருத்திக் கொள்வதோடு நன்றியுள்ளவனாகவும் இருப்பேன்.

யா அல்லாஹ்! இந்நூல் மக்கள் பயன் பலன் பெறும் நூலாக ஒப்புக் கொள்வாயாக. ஆமீன்.

இஸ்லாமிய ஊழியன்
M.A. ஷேக் ஹுஸைன்

பொருளடக்கம்

பொருளடக்கம்

பொருளடக்கம்

மத்ஹபுகளைப் பின்பற்றுவது ஏன்?

இஸ்லாமிய ஷரீஅத் சட்டம் குர்ஆன், ஹதீஸ் மூலம் தெளிவுப்படுத்தப் பட்டுள்ளது. இதற்கு ''நஸ்'' என்று கூறப்படும்.

நஸ் இருவகை உண்டு:

1) முதஆரிழா—வெளிப்படையில் ஒன்றுக்கொன்று மாறுபட்டது.

2) முதஆரிழா இல்லாதது—வெளிப்படையில் ஒன்றுக் கொன்று மாறுபாடு இல்லாதது.

முதஆரிழா இருவகை:

1) நஸ்ஸில் எது முந்தியது, எது பிந்தியது என்று அறியப்பட்டிருக்கும்.

2) எது முந்தியது எது பிந்தியது என்று அறியப்படாம லிருக்கும்.

மேலே கூறப்பட்ட 1, நஸ், 2, முதஆரிழா இல்லாதது. 3, எது முந்தியது எது பிந்தியது என்று அறியப்பட்டது. இவைகளில் எப்பிரச்சினையும் இல்லாததால் அனைவரும் அவைகளை கண்டிப்பாக பின்பற்றியாக வேண்டும்.

ம—2

பொருளடக்கம்

ஆயத், ஹதீஸ் இவைகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துடையவையாக இருந்து, ஒன்று முந்தி வந்தவை: இரண்டாவது பிந்தி வந்தவை என்று அறியப்படும் போது பிந்தியதை எடுத்துக் கொள்ள வேண்டும். முந்தியதை விட்டுவிட வேண்டும். இரண்டாவது-பிந்தியவைக்கு (அரபு பாஷையில்) நாஸிக்—மாற்றியவை என்றும் முந்தி முதலாவது வந்தவைக்கு மன்சூக்—மாற்றப்பட்டவை என்றும் கூறப்படும்.

ஆகையால் பிந்தி வந்தவை அறியப்பட்டிருப்பதால் அவைகளை ஏற்று நடப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.

இதையும்கூட எல்லோராலும் அறிய முடியாது மார்க்க சம்பந்தமான கல்வியிலே திறமை வாய்ந்த அறிஞர்களால் மட்டுமே முடியும். இவர்களையே இமாம்கள் என்று கூறுகின்றோம். ஆகையால் இதற்கும் கண்டிப்பாக இமாம்களையே பின்பற்ற வேண்டிய அவசியமேற்படும்.

இறைவசனம் இதை உறுதிப்படுத்துகிறது. அல்லாஹு தஆலா கூறுகின்றான்

(அல்லாஹு தஆலா) தான் விரும்பியவர்களுக்கே (கல்வி) ஞானத்தைக் கொடுக்கின்றான்: ஆதலால், எவர் (கல்வி) ஞானம் கொடுக்கப்படுகின்றாரோ அவர், நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்று விடுவார். ஆயினும் (இந்த ஞானக்கல்வியைக் கொண்டு) அறிவாளிகளைத் தவிர (மற்றெவரும்) உணர்ச்சி பெறமாட்டார்கள்.

(2-269)

இவ்வசனத்திற்கு: ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள், குர்ஆன் மூலம் பிக்ஹுவை அறிவது: அதிலுள்ள மாற்றியது, முஹ்கம், முதஷாபிஹ்,

ஹரீப், முந்தியது, பிந்தியது, ஹலால், ஹராம் எவை என்று அறியக்கூடிய ஆற்றலை அல்லாஹுதஆலா தான் நாடியகளுக்கே கொடுத்துள்ளான், என்று கூறுகின்றார்கள்.

மேலும் அனேக தப்ஸீர் விரிவுரையாளர்களும் இது போன்ற விளக்கங்களையே கூறியுள்ளனர்.

(நூல் : தப்ஸீர் குர்துபீ இப்னுகதீர்)

மேலும், நஸ் (குர்ஆன்-ஹதீஸ்) மூலம் தெளிவாக விளங்கப்படாதவை. 2, நஸ்ஸில் முதஆரிழா—வெளிப்படையில் ஒன்றுக்கொன்று மாறுபாடாக தெரிந்தவை. 3, எது முந்தியது பிந்தியது என்று அறியப்படாமல் உள்ளவை. ஆக இவைகளில் ஓர் அறிஞரின் கூற்றை நம்பியே ஆக வேண்டும். இவைகளை நான்கு இமாம்களே நன்கறிந்தவர்கள். ஆகையால் இஸ்லாமிய சமுதாயம் இப்பிரச்சினைகளில் நான்கு இமாம்கள் காட்டிய வழியை தக்லீத்—பின்பற்றி நடக்க வேண்டும்.

தக்லீத் அவசியமான பின் கூறப்பட்ட மூன்று வகையான 1, நஸ் மூலம் தெளிவாக உறுதிப்படுத்தப்படாமல் உள்ளவை.இதை அறிந்து கொள்ள அறிவு—ஞானம் தேவை. பிந்திய இரண்டான 1,முதஆரிழா—வெளிப்படையில் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. 2, எது முந்தியது பிந்தியது என்று அறியப்படாமல் உள்ளவை. இவை ஒவ்வொன்றிலும் எது "சரியானது" என்று குறிப்பாக்குவது அவசியமாகும். ஆகவே இம்மூன்றிலும் 1, அறிவு ஞானம். 2, எது சரியானது என்று குறிப்பாக்குவது என்பதை ஆய்வு மூலம் தான் அறிந்து அமல் செய்யமுடியும். இந்தத் தகுதி நான்கு இமாம்களுக்கு மட்டுமே உண்டு என்று அனைத்து அறிஞர் பெருமக்களாலும் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

ஆய்வு : அனைவராலும் முடியுமா?

1, நஸ் மூலம் வெளிப்படையில் உறுதிப்படுத்தப்படாமல் உள்ளவை, 2, முதஆரிழா, வெளிப்படையில் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை 3, எது முந்தியது பிந்தியது என்று அறியப்படாமல் உள்ளவை இவைகளில் ஆய்வு செய்வது என்பது அனைவராலும் முடியாது. இதற்கு ஆதாரமாக அல்லாஹுதஆலா கூறுகின்றான்: அல்லாஹுதஆலாவின் தூதரிடமும் இன்னும் அவர்களில் (ஆய்வு செய்யக் கூடிய) அதிகாரிகளிடமும் (மட்டும்) தெரிவித்தால் அதிலிருந்து ஊகிக்கக்கூடிய அவர்கள் (அதன்) உண்மையை நன்கறிந்து (தக்க நடவடிக்கைகளை எடுத்துக்) கொள்வார்கள். (4-83)

அல்லாஹுதஆலா இவ்வசனத்தில் ''உலுல் அம்ரு'' என்று சிலரை மட்டுமே கூறியுள்ளான். எனவே ஆய்வு செய்வது என்பது அனைவராலும் முடியாது என்பதற்கு இவ்வசனமே சான்றாகும்.

சில யுத்தங்களின் போது நயவஞ்சகர்கள் (முனாபிக்) முஸ்லிம்களுக்கு நஸ்டம் வந்ததாக வதந்தி பரப்பினார்கள். இதுஅவர்களின்பழக்கமாகவே இருந்தது.அதுபோன்றுஉஹது யுத்தத்தின் போது நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இறந்து விட்டதாகவும் பரப்பினார்கள். இதை சாதாரண சஹாபாக்கள் நம்பவும் செய்தனர். அல்லாஹுதஆலா இதை எச்சரிக்கை செய்வதற்காக இவ்வசனத்தை இறக்கினான். ஒரு வசனம்ஏதாவது ஒரு காரணத்திற்காக இறங்கினாலும் அதில் கூறப்பட்ட சட்டம் பொதுப்படையானதாகும்.

பொருளடக்கம்

எனவே உங்களுக்குத் தெரியாததை சரியாக விளங்காமல் பரப்பி விடாதீர்கள். அதை, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயிரோடு இருந்தால் அவர்களிடம் கூறுங்கள். அவர்களுக்குப்பின் நிர்வாகப் பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கூறுங்கள். அந்த அதிகாரிகளே ஆய்வுத்திறமையுள்ளவர்களாக இருந்தால் ஆய்வு செய்து அவ்விஷயத்தின் நலவு தீமைகளை எடுத்துக் கூறுவார்கள்.

அவர்களிடத்தில் ஆய்வுத்திறமை இல்லாவிட்டால் ஆய்வாளர்களிடம் விபரத்தைக் கூறி இவ்விஷயத்தில் ஆய்வு செய்து நலவு, தீமையைக் கூறுங்கள் என்று சொல்லி அவர்களின் ஆய்வைப் பெற்று செயலாற்றுவார்கள்.

எனவே தெரியாத விஷயங்களை அதுபற்றி தெரிந்த ஆய்வாளர்கள் மூலம் தெளிவு பெற்று செயலாற்ற வேண்டும் என்ற கருத்தை இவ்வசனம் தெளிவுப்படுத்துகிறது.

மேலும் "ஆய்வாளர்கள்" என்று ஒரு குழுவினர் இருக்கின்றனர் என்பதையும் இவ்வசனம் ஊர்ஜிதப்படுத்துகிறது. இந்த ஆய்வாளர்களைத்தான், நாம் இமாம்கள் என்று கூறுகின்றோம். அவ்வாறு பிரசித்தி பெற்றவர்களே நான்கு இமாம்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திற்குப் பின் எத்தனையோ ஆய்வாளர்கள் சட்டங்களை ஆய்வு செய்துள்ளார்கள். இருந்தாலும் அவர்களின் ஆய்வை அவர்களுக்குப்பின் வந்தவர்கள் எடுத்து நடக்கவில்லை. ஆனால் நான்கு இமாம்கள் ஆய்வு செய்து உருவாக்கிய சட்டங்களை அக்காலம் உள்ளவர்கள் முதல் இக்காலம் உள்ளவர் அனைவரும் பின்பற்றியுள்ளனர்; பின்பற்றுகின்றனர். இதுவே இவர்களின் ஆய்வுதான் சரியானது என்பதற்கு ஆதாரமாகும்.

சஹீஹான ஹதீஸ் ழயீஃப் ஆனதேன்?

சிலர், இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சில சட்டங்களை ழயீப்—பலவீனமான ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கினார்கள் என்று தவறாக கூறுகின்றார்கள்.

ஹனபீ இமாம் அவர்கள் சட்டங்கள் உருவாக்கக் காரணமான ஹதீஸ்கள் அனைத்தும் ஸஹீஹானதே. ஆனால் பிற்காலத்தில் ஹதீஸ்களை அறிவிப்பதில் இடம் பெற்ற சிலர் தகுதி அற்றவர்கள். எனவே இவர்களால்தான் சில ஹதீஸ்கள் ழயீஃப் ஆனது. மேலும் இந்த(த் தகுதி அற்ற)அறிவிப்பாளர்கள் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் காலத்தில் கிடையாது.

ஹனபீ இமாம் அவர்கள் அனைத்து ஹதீஸ்களையும் ஸஹீஹானதாகவே பெற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் ஹனபீ இமாம் அவர்களுக்கும் மத்தியில் குறைந்த அறிவிப்பாளர்களே. (இருவர், அல்லது மூவர்—சஹாபி, தாபிஃ) உள்ளனர்.

ஹனபீ இமாம் அவர்கள் சஹாபாக்களின் கடைசி காலத்தில் பிறந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே ஹனபீ இமாம் அவர்கள் தாபியீன்களின் முதல் காலத்தில் ஹதீஸ்களை ஸஹீஹானதாகவே பெற்று அதன் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கினார்கள்.

(நூல் ; மிர்காத்)

குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சமுதாயத்திற்கு வழிகாட்டிய இமாம்கள் வாழ்ந்த காலம்

இமாம் அபூஹனீபா நுஃமான் இப்னு தாபித் ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	80,	கி. பி.	699
இறப்பு	,,	150,	,,	767

இமாம் மாலிக் இப்னு அனஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	93	கி. பி.	712
இறப்பு	,,	179	,,	795

இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	150	கி. பி.	767
இறப்பு	,,	204	,,	820

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	164	கி. பி.	780
இறப்பு	,,	241	,,	855

(நூல்: மிர்காத், அஹ்ஸனுல் கஸஸ்)

பொருளடக்கம்

நபிமொழியை சமுதாயத்திற்கு தந்துதவிய மாமேதைகளின் காலம்

ஹழ்ரத் முஹம்மது இப்னு இஸ்மாயீல் புகாரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹஜ்ரீ	194	கி. பி.	810
இறப்பு	,,	256	,,	870

ஹழ்ரத் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ் ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	204		
இறப்பு	,,	261	கி. பி.	875

ஹழ்ரத் அபூதாவூது சுலைமான் இப்னு அஷ்அத் ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	202		
இறப்பு	,,	275	கி. பி.	889

ஹழ்ரத் முஹம்மது இப்னு ஈஸா திர்மிதீ ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	209	கி. பி.	824
இறப்பு	,,	279	,,	892

ஹழ்ரத் அபூஅப்துர்ரஹ்மான் அஹ்மது இப்னு ஷுஐப் நஸயீ ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	215		
இறப்பு	,,	303	கி. பி.	915

(88 ஆண்டு காலம் வாழ்ந்தார்கள்)

ஹழ்ரத் முஹம்மது இப்னு யஜீது இப்னு மாஜா ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு		209	
இறப்பு	ஹிஜ்ரீ	273	கி. பி. 887

(64 ஆண்டு காலம் வாழ்ந்தார்கள்)

ஹழ்ரத் அபூ முஹம்மது அப்துல்லாஹ் இப்னு அப்துர் ரஹ்மான் தாரமீ ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பிறப்பு	ஹிஜ்ரீ	181	
இறப்பு	,,	255	கி. பி. 869

ஹழ்ரத் அபுல்ஹஸன் அலிஇப்னு உமர் தாரகுத்னீ ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	305	
இறப்பு	,,	385	கி. பி. 995

ஹழ்ரத் அபூபக்ர் அஹ்மது இப்னு ஹுஸைன் பைஹகீ ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	384	
இறப்பு	,,	458	கி. பி. 1066

ஹழ்ரத் அஹ்மது இப்னு முஹம்மது தஹாவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி

பிறப்பு	ஹிஜ்ரீ	229
இறப்பு	,,	321

பொருளடக்கம்

நான்கு மத்ஹபுகளை மட்டும் பின்பற்றும் நிலை ஏற்பட்டதேன்?

முதல் நூற்றாண்டில் அனைத்து மனிதர்களிடமும் உயர்ந்த நற்குணங்கள் இருந்தது. அனைத்து பிரச்சினைகளின் விளக்கங்களையும் அறிந்து இருந்தார்கள். அப்படி ஏதாவது ஒன்று தெரியாவிட்டால் அதை தெரிந்து கொள்ள முற்படுவார்கள். ஆகையால் அக்காலத்தில் தக்லீத் ஷக்ஸீ—குறிப்பிட்டவரின் மூலம் (இஸ்லாத்தை) பின்பற்றுவது தேவையில்லாமல் இருந்தது.

இரண்டாம் நூற்றாண்டில் உலமாக்கள் இருவகையினராக வாழ்ந்தார்கள்.

1. நபிமொழி அடிப்படையில் பிக்ஹு, மற்ற சட்டங்களையும் போதிப்பதிலே தங்களின் முழு நேரத்தையும் செலவழிப்பார்கள். நபிமொழிகளையும் அறிவிப்பார்கள். உதாரணமாக: இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2. நபிமொழிகளையே போதித்துக் கொண்டு இருப்பார்கள். பிக்ஹு சட்டங்களையும் கூறுவார்கள். உதாரணமாக: இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

இரண்டாம் நூற்றாண்டில் உலமாக்கள் மேல் குறிப்பிட்ட முறையில் இருவகையிலும் சிறந்து விளங்கியதால் மக்களும் அவ்விருவகையிலும் வாழ்ந்தனர். இம்முறையில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் ஆய்வின் மூலம் வெளியான சட்டங்களை பின்பற்றும் மக்கள் அதிகமாயினர். இப்படியே மூன்றாம் நூற்றாண்டிலும் நீடித்தது.

பொருளடக்கம்

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் கல்வி கற்றார்கள். பின்பு ஈராக் சென்று அங்குள்ள ஹனபீ உலமாக்களிடம் கல்வி கற்றார்கள். தாங்கள் கற்றவைகளில் ஆய்வு செய்து பல மஸாயில்—சட்டங்களை உருவாக்கினார்கள். இவர்களின் சட்டங்களையும் சில மக்கள் பின்பற்றினர்.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடமும் ஹனபீ உலமாக்களிடமும் கல்வி கற்று அதன்படி ஆய்வு செய்து மஸாயில்—சட்டங்களை உருவாக்கினார்கள். இவர்கள் உருவாக்கிய சட்டங்களையும் சில மக்கள் பின்பற்றினர்.

இக்காலத்தில் பலர் தாங்களாகவே ஆய்வு செய்து சட்டங்களைக் கூறக்கூடிய "முஜ்தஹித்" ஆனார்கள், இப்படியிருக்க காலப்போக்கில் பொதுமக்களில் சிலர் தங்களுக்குச் சாதகமானதை மட்டும் பின்பற்றினர். ஆக ஒவ்வொருவரும் தங்களின் மன இச்சைப்படி மார்க்கத்தைப் பின்பற்ற ஆரம்பித்தனர். இதைக் கண்டு கவலையடைந்த நான்காம் நூற்றாண்டின் உண்மையான உலமாக்கள் கவலையுடன் மஷ்வரா—ஆலோசனை செய்து, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தஉலமாக்களின் ஆய்வின்படி உருவான சட்டங்களின்படியே அனைவரும் அதைப் பின்பற்றி வாழ வேண்டும்என்றுமுடிவு செய்தனர். இரண்டாம் நூற்றாண்டில் ஹனபீ,ஷாபியீ-மாலிக்-ஹன்பலி இதன் நான்கு இமாம்களும் உருவாக்கிய மத்ஹபுகள் மட்டுமே குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சரியாக ஆய்வு செய்து உருவாக்கப்பட்டு மிகத் தெளிவான முறையில் அனைத்து அம்சங்களிலும் தெளிவான சட்டங்கள் கூறப்பட்டுள்ளதால் இந்த நான்கு வழி

பொருளடக்கம்

களையே அனைவரும் பின்பற்றி மற்றவைகளை ஒதுக்கிவிட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

ஆகவே, நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த உலமாக்களின் ஏகோபித்த முடிவின்படி இந்த நான்கு மத்ஹபுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும் என்று மக்களுக்குப் போதித்தனர். மக்களும் அதை ஏற்று செயல்பட்டனர்.

(நூல் : பதாவா மஹ்மூதிய்யா)

ஹழ்ரத் ஷைகு அப்துல் ஹக் தஹலவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ''ஷரஹ் ஷிப்Fருஸ் ஸஆதத்'' என்ற நூலிலும்,ஹழ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் முஹத்திஸ் தஹ்லவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ''இன்சாப்F'' என்ற நூலிலும் கூறியுள்ளார்கள்; மூன்றாம் நூற்றாண்டில் ஒவ்வொருவரும் தங்களின் மனோ இச்சைப்படி மார்க்கத்தைப் பின்பற்றியதால் ஈமானை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது ஈமானை பாதுகாக்க நான்கு மத்ஹபுகளை மட்டும் பின்பற்ற வேண்டும் என்ற அவசிய நிலை ஏற்பட்டது.

இப்னு தைமிய்யா அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவன் மத்ஹபின் மூலம் இஸ்லாத்தை பின்பற்றாமல் தன் இஸ்டப்படி ஒரு ஹதீஸையோ, ஒரு இமாமையோ பின்பற்றுவது கூடாது. அது தீமையின் பக்கம் சேர்த்து வைக்கக்கூடிய பாபமானதாகும்.

தக்லீத் மிக அவசியம்

தக்லீத் என்றால் மார்க்க அறிஞர்களில் தகுதியுள்ளவரின் கூற்றை ஆதாரம் கேட்காமல் பின்பற்றுவதற்குக் கூறப்படும். நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களை ஆதாரம் கேட்காமல் ஒப்புக் கொள்பவு

பொருளடக்கம்

ருக்கு முகல்லித் — பின்பற்றக் கூடியவர் என்று கூறப்படும். நூல் : தப்ஸீர்குர்துபீ)

ஓர் ஆலிம் - அறிஞர் தனக்குத் தெரியாத ஒன்றை அது பற்றி தெரிந்த ஆலிமிடம் கேட்டு தெரிந்து கொள்வது கடமையாகும். அவ்வாறின்றி மற்ற ஆலிமிடம் அது பற்றி கேட்காமல் சிந்தித்துக் கொண்டே இருப்பாரேயானால் அதன்படி அமல் செய்யும் நேரம் சென்று விடலாம்; அல்லது அதுபற்றி தீர்ப்பு கூறும் காலம் சென்று விடலாம்.

ஆகவே தனக்குத் தெரியாததை தெரிந்தவரிடம் கேட்டு பின்பற்றுவதே சரியானதாகும், என்று ஹழ்ரத் காழி அபூபக்கர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் மார்க்கத்தில் தெளிவு பெற்றவர்களும் கூறுகின்றனர்.

குர் ஆனில் தக்லீத்...

وَإِذَا جَآءَهُمْ أَمْرٌ مِّنَ الْأَمْنِ أَوِ الْخَوْفِ
أَذَاعُوا بِهِۦ ۖ وَلَوْ رَدُّوهُ إِلَى الرَّسُولِ وَإِلَىٰٓ أُولِي
الْأَمْرِ مِنْهُمْ لَعَلِمَهُ الَّذِينَ يَسْتَنۢبِطُونَهُۥ مِنْهُمْ ۗ

பயத்தையோ அல்லது(பொது ஜனப்)பாதுகாப்பையோ பற்றிய யதொரு செய்தி அவர்களுக்கு எட்டினால் (உடனே) அவர்கள் அதனை (வெளியில்) பிரஸ்தா (பிக்க ஆரம்)பித்து விடுகின்றனர். (அவ்வாறு செய்யாமல்) அதனை (அல்லாஹுதஆலாவுடைய) தூதரிடமும் அவர்களுடைய அதிகாரிகளிடமும் (மட்டும்) தெரிவித்தால் அதிலிருந்து ஊகிக்கக் கூடிய அவர்கள் (அதன்) உண்மையை நன்கறிந்து (தக்க நடவடிக்கைகளை எடுத்துக்) கொள்வார்கள். (4-83)

பொருளடக்கம்

அல்லாஹுதஆலா இந்த வசனத்தில்; தன் ரஸூலுக்கு அடுத்தபடியாக ஆய்வு செய்யும் ஆற்றலுடையவர்களை பின்பற்றுமாறு கூறுகின்றான்.

ஹழ்ரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், ஹழ்ரத் முஜாஹித் ரஹ்மதுல்லாஹி அலைஹிமா ஆகியஇவ்விருவரும் அல்லாஹுதஆலா கூறிய "உலுல் அம்ரு" என்பதற்கு குர்ஆனை அறிந்து அமல்செய்யக் கூடியவர்கள்; மார்க்க அறிவு-ஞானமுடையவர்கள், என்று விளக்கம் கூறுகின்றார்கள். (தப்ஸீர் குர்துபீ)

ஹழ்ரத் ழஹ்ஹாக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் "உலுல் அம்ரு" என்பதற்கு புFகஹாக்கள், மார்க்க உலமாக்கள் என்று கூறுகின்றார்கள்.

وَمَا كَانَ الْمُؤْمِنُونَ لِيَنْفِرُوا كَافَّةً ۚ فَلَوْلَا نَفَرَ مِنْ كُلِّ فِرْقَةٍ مِّنْهُمْ طَائِفَةٌ لِّيَتَفَقَّهُوا فِي الدِّينِ وَلِيُنْذِرُوا قَوْمَهُمْ إِذَا رَجَعُوا إِلَيْهِمْ لَعَلَّهُمْ يَحْذَرُونَ ۝

(உங்கள் விரோதிகள், உங்களை அழித்துவிடும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பதினால்) விசுவாசிகள் யாவருமே (தங்கள் ஊரை விட்டு) வெளிப்பட்டு விடுவது எப்பொழுதுமே தகாது. மார்க்க விஷயங்களை அறிந்து கொள்ள(க் கருதி னாலும் அதற்காக) அவர்களில் ஒவ்வொரு கூட்டத்திலிருந்து சிலர் மட்டும் புறப்பட்டால் போதாதா?

பொருளடக்கம்

(அவர்கள் மார்க்க விஷயங்களைக் கற்றுத்) தங்கள் மக்களிடம் திரும்பி வந்து அவர்களுக்கு (த் தாங்கள் கற்றதைக் கூறி) அச்சமூட்டி எச்சரிக்கை செய் வார்கள். (ஊரிலிருப்போர்) எச்சரிக்கையாக இருந்து (தங்கள் மக்களைக் காத்துக்)கொள்வார்கள். (9,122)

இவ்வசனம்: பிக்ஹு போன்ற சட்டங்களை அனைவ ராலும் ஒரே நேரத்தில் கற்க இயலாது. ஏனெனில் இக் கல்வியை விளங்கும் ஆற்றலும் சிலருக்கு மட்டுமே உண்டு. ஆகையால் இதைக் கற்றவர்கள் சொல்லும்போது அதை அறிந்திராதவர் ஏற்று நடக்க வேண்டும் என்பதை அறிவிக் கின்றது.

சூரத்துல் பாத்திஹாவில் தக்லீத்

மனிதன் அல்லாஹுதஆலாவை அடைய ஹிதாயத் தையே நோக்கமாகக் கொண்டு வாழ வேண்டும். அதை அல்லாஹ்விடம் அனுதினமும் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இதன் முறையை அல்லாஹுதஆலா நமக்குக் கற்றுத் தருகிறான்; தொழுகையிலும் மற்ற நேரங்களிலும் அவசியமாகவும் சிறப்பாகவும் ஓதக் கூடிய சூரத்துல் பாத்தி ஹாவில்; (யாஅல்லாஹ் நீ யாரின் மீது அருள் புரிந்தாயோ அத்தகையவர்களின் (ஹிதாயத்தை) நேர்வழியை எங்க ளுக்கும் காட்டுவாயாக!

மற்றொரு இறைவசனம் இவ்வசனத்திற்கு விளக்கமாக அமைகிறது: எவர்கள் அல்லாஹுதஆலாவுக்கும், அவனு டைய தூதருக்கும் வழிப்பட்டார்களோ அவர்கள் அல்லாஹு தஆலாவின் அருளைப் பெற்ற நபிமார்கள் சத்தியவான்கள் (அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதான) தியாகிகள், நல்லொழுக்கமுடையவர்கள் ஆகியோர் களுடன் (மறுமையில்) வசிப்பார்கள், (4-69)

பொருளடக்கம்

முன் சென்ற நல்லோர்களின் வழியே நேர் வழியாகும் நேர்வழி நாடுவோர் அவர்கள் சென்ற வழியை நாடி செயல் படுத்துங்கள் என்பதை மேற்கூறிய இறை வசனம் கூறுகிறது. இதற்கு ஆதாரமாக மற்றொரு இறை வசனம் (31-15) அமைகிறது.

(எவ்விஷயத்திலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியை நீ பின் பற்றி நடந்து வா. (31-15)

அல்லாஹுதஆலாவுக்காகவே வாழ்ந்த நல்லோர்களின் வழியை பின் பற்றி நடக்க வேண்டும் என்பதை இவ்வசனம் அறிவிக்கிறது.

மேலும், அல்லாஹுதஆலா கூறுகின்றான்; நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த வசனம் குறிப்பிட்ட ஒன்றுக்காக இறங்கினாலும் அதன் வாக்கியம் பொதுவானதாகும். இதுவே ''உஸுலுல் பிக்ஹின் முறையுமாகும்.

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மர்பூFஆன ஹதீஸை அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; தீன் விஷயங்களை அறிந்தவர் அதை மற்றவருக்கு கூறாமல் இருப்பது சரியல்ல, அது போன்று அதை அறியாதவர் அறிந்தவரிடம் சென்று அறியாமல் இருப்பதும் சரியல்ல, ஏனென்றால் அறியாதவர் அறிந்தவரிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்று அல்லாஹு தஆலா கூறுகின் றான்.

மேலும் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எனது வழிமுறைகளையும், நேர்வழி பெற்ற என் சஹாபாக்களின் வழி முறைகளையும் பின்பற்றி நடந்துக் கொள்ளுங்கள். (மிஷ்காத்)

பொருளடக்கம்

இந்த ஹதீஸின் மூலம் நபியவர்கள் தனது உம்மத்தை சஹாபாக்களையும் தக்லீத்-பின்பற்றும்படி கூறுகின்றார்கள். ஹழ்ரத் ஸஹ்லு இப்னு அப்துல்லாஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் அறிவிக்கின்றார்கள்; மக்கள், உலமாக்களையும் (தீன் வழி நடக்கும்) அரசர்களையும் கண்ணியப்படுத்தும் காலமெல்லாம் நற்காரியங்களிலே இருப்பார்கள். இவ்வாறு இருக்கும் போது அல்லாஹுதஆலா அவர்களின் இம்மை. மறுமையை சிறந்ததாக ஆக்குகின்றான்.

ஆனால்(மக்கள்)அவ்விருவரையும் மரியாதைக் குறைவாக கருதினால் அவர்களின் தீன், துன்யா இரண்டும் கெட்டு விடுகிறது.

(நூல் : தப்ஸீர் குர்துபீ-பக்261)

அறிவு மிகுந்தவர்களைப் பின்பற்றா ததின் விளைவு!

ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் : ஒரு தடவை நாங்கள் யுத்தத்திற்காக பயணம் மேற்கொண்ட போது எங்களில் ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. மேலும் அவர் கட்டாயக் குளிப்பு குளிக்க வேண்டிய நிலையில் இருந்தார். அவர் அங்குள்ள மற்றவர்களிடம், எனக்கு ஏற்பட்டதற்காக நான் தயம்மும் செய்ய அனுமதி உண்டா? என்று வினவிய போது; தயம்மும் அனுமதி இல்லை. கண்டிப்பாக தண்ணீர் வைத்துக் குளிக்க வேண்டும், என்று கூறி விட்டனர். ஆகையால் அவர் குளித்தார். (தலையில் தண்ணீர்பட்டு) அதனால் மரணமடைந்து விட்டார்.

பொருளடக்கம்

ஊர் திரும்பியபின் சஹாபாக்கள் நடந்தவைகளை நபி யவர்களிடம் கூற "அவர்கள் அவரை கொன்றுவிட் டார்கள், அல்லாஹுதஆலா அவர்களை கொலை செய்வா னாக! அவர்கள், தங்களுக்குத் தெரியாததை தெரிந்தவர் களிடம் கேட்டு அறிந்திருக்க வேண்டாமா! என்று கூறினார் கள்.

இந்த நபி மொழியில், அறியாதவர் அறிந்தவரை அணுகி விளக்கம் பெற்று அதைப் பின்பற்றுவது மிகமிக அவசியம் என்பதை அறிவிக்கிறது.

ஆகவே, உலமாக்களிடம் மஸாயில் - சட்டங்களை கேட்டு அதன்படி செயல்படுத்துவதற்குப் பெயர்தான் "தக்லீத்" என்று கூறப்படும்

அல்லாஹுதஆலா கூறுகின்றான்; விசுவாசிகளே! உங்க ளுக்குள் யாதொரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால் அதனை அல்லாஹுதஆலாவிடமும் (அவனுடைய) தூதரிட மும் ஒப்படைத்து விடுங்கள். (4.56)

பிரச்சினையை குர்ஆன், ஹதீஸின் பக்கம் ஒப்படைத்து எவ்வாறு தீர்வு காண்பது என்று உலமாக்களைத்தவிர மற்றவர் அறியமாட்டார்.

ஒரு விஷயத்தை அறியாதவர், உலமாக்களிடம் அது பற்றி அறிந்து. அவர்களின் தீர்ப்பை ஏற்று நடப்பது கடமை என்று இவ்வசனம் அறிவிக்கிறது.

(நூல் : தப்ஸீர் குர்துபீ)

தக்லீது கூடாது என்போரின் தவறான விளக்கம்.

1. மேலும், அல்லாஹுதஆலா அருளிய (இவ்வேதத்)தைப் பின்பற்றுங்கள் என அவர்களுக்குக்கூறப்பட்டால்(அவர்கள்)

பொருளடக்கம்

அவ்வறென்று. எதன் மீது எங்களுடைய மூதாதைகள் (இருந்து அவர்கள் எதனைச் செய்து கொண்டு) இருக்க நாங்கள் கண்டோமோ அதனையே நாங்கள் பின் பற்று வோம். எனக்கூறுகின்றனர். அவர்களுடைய மூதாதை கள் ஒன்றையுமே அறியாதவர்களாகவும், நேர்வழி பெறா தவர்களாகவும் இருந்தாலுமா (அவர்களைப் பின் பற்று வார்கள்.) (2.170)

அல்லாஹுதஆலா இவ்வசனத்தில் மிகத் தெளிவாக; காபிர்கள், ஈமான் கொள்ளாமல் ஏகத்துவத்தை ஏற்க மறுத்த; நேர்வழியில் இல்லாத தங்களின் முன்னோர்களை பின்பற்றுவதையே கண்டித்துக் கூறுகின்றான்.

ஆனால்,நான்கு இமாம்கள் நேர்வழியில் உள்ளவர்களே என்பதை அனைவருமே ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆகவே தக்லீதை மறுப்பவர்கள் இவ்வசனத்திற்கு தங்கள் மனோ இச்சைப்படி தவறான விளக்கம் கூறுகின்றனர்.

2. இவர்கள் அல்லாஹுதஆலாவையன்றி தங்கள் பாதிரிகளையும் சந்நியாசிகளையும், மர்யமுடைய மகன் மஸீஹையும் (தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டுள் ளனர். (9.31)

மத்ஹபைப்பின்பற்றியோர் யாரும் அல்லாஹுதஆலாவை மறுத்து இமாம்களை தெய்வங்களாக கருதவில்லை; எண்ணிக்கூட பார்க்கவில்லை.

ஆகவே தக்லீதை மறுப்பவர்கள், தங்களின் மனோ இச்சைப்படி இவ்வசனத்திற்கு தவறான விளக்கம் கூறுகின் றனர்.

3. அவர்கள் எங்கள் மூதாதையர் இவைகளைப் பூஜித்துக் கொண்டிருக்க நாங்கள் கண்டோம். ஆகையால்

பொருளடக்கம்

நாங்களும் அவைகளை பூஜிக்கின்றோம்). என்று கூறினார்கள், (21-53)

இமாம்களைப் பின் பற்றியோர் இமாம்களை பூஜிக்கவும் இல்லை. அவர்கள் யாரையும் பூஜிக்கவும் இல்லை. அதுபோன்று, தக்லீதை மறுப்பவர்கள் கூறக் கூடிய தவறான விளக்கம் போன்று இமாம்கள் வசனத்தில் கூறப்பட்ட மூதாதையாரும் அல்ல. தக்லீதை மறுப்பவர்களின் கூற்றான "இமாம்கள் நேர்வழியில் உள்ளனர்" என்பதே ஆதாரமாகும்.

ஆகவே இவ்வசனம் கல்லை தெய்வமாக வணங்கியவர்கள் நபியைப்பார்த்து கூறியதாகும். அடுத்த வசனம் இதை மிகத் தெளிவாக கூறுகின்றது, நிச்சயமாக நீங்களும் உங்கள் மூதாதையாரும் தெளிவான வழிக்கேட்டில் இருந்திருக்கின்றனர். என்று (நபி) கூறினார்.

4, (கல்லை தெய்வமாக வணங்காதீர்கள் என்று ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் கூட்டத்தினருக்குக் கூறிய போது அதற்கு அவர்கள்) இல்லை. எங்கள் மூதாதைகள் இவ்வாறே (கல் வணக்கம்) செய்து கொண்டிருக்க நாங்கள் கண்டோம். (ஆகவே நாங்களும் (கல் வணக்கம் செய்கிறோம்) என்றார்கள். (26-74

இமாம்களின் விளக்கப்படி குர்ஆன் ஹதீஸை பின்பற்று)வோர் யாரும் கல்லை வணங்கவில்லையே.

இமாம்களைப் பின்பற்றுவதை மறுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வசத்திற்கு தக்லீதை மறுப்போர் தவறான விளக்கம் கூறுகின்றனர்.

5, அவர்களுடைய முகங்களைப் புரட்டிப் புரட்டி நெருப்பில் பொசுக்கப்படும் நாளில் 'எங்களுடைய கேடே! நாங்கள் அல்லாஹுதஆலாவுக்கு வழிப்பட்டிருக்க வேண்டாமா!

பொருளடக்கம்

(அவனுடைய தூதருக்கும் வழிப்பட்டிருக்க வேண்டாமா? என்று கதறுவார்கள். அன்றி' எங்களுடைய இறைவனே! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும் எங்கள் பெரியோர்களுக்குமே வழிப்பட்டோம், அவர்கள் எங்களை தப்பான வழியில் செலுத்திவிட்டார்கள். (ஆகவே) எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு இரு மடங்கு வேதனையைக் கொடுத்து அவர்கள் மீது மகத்தான சாபத்தை இடு என்று கூறுவார்கள். (33—66, 67, 68)

தக்லீதை மறுப்பவர்கள் மேற்கூறிய வசனத்திற்கு பொய் விளக்கம் கூறுகின்றனர்.

இவ்வசனம், தானும் நேர்வழி பெறாமல் பிறரையும் நேர்வழி பெறவிடாமல் தடுத்த தலைவர்களைப் பின்பற்றியோர் அவ்வாறு கூறுவர், இதற்கு ஆதாரமாக அல்லாஹுதஆலா மற்றொரு இடத்தில் :

(அல்லாஹ் அவர்களை நோக்கி) ஜின்களிலும், மனிதர்களிலும் உங்களுக்கு முன்னர் சென்றுவிட்ட (உங்களைப் போன்ற பாபிகளான) கூட்டத்தினர்களுடன் நீங்களும் சேர்ந்து நரகத்திற்குச் சென்றுவிடுங்கள்'' என்று கூறுவான், அவர்களில் ஒவ்வொரு சமுதாயத்தினரும் (நரகத்திற்குச்) சென்ற பொழுது (முன்னர் அங்கு வந்துள்ள) தங்கள் இனத்தாரை முனிந்து சபிப்பார்கள். (இவ்வாறு) இவர்கள் யாவரும் நரகத்தை அடைந்த பின்னர் (அவர்களில்) பின்னவர்கள் முன்னவர்களைச் சுட்டிக்காட்டி, எங்கள் இறைவனே! இவர்கள் தாம் எங்களை வழி கெடுத்தவர்கள், ஆகவே அவர்களுக்கு (எங்களை விட) இரு மடங்கு நரக வேதனை கொடுப்பாயாக! என்று கூறுவார்கள். அதற்கு அவன் (அல்லாஹ்) உங்களில் யாவருக்குமே இரு மடங்கு (வேதனை) உண்டு, எனினும் நீங்கள் அறிய மாட்டீர்கள் என்று கூறுவான், (7.38)

பொருளடக்கம்

தக்லீதை மறுப்போர் இவ் (33, 66, 67, 68) வசனங்களுக்கு மனம் போன போக்கில் விளக்கம் கூறுகின்றனர். ஏனென்றால் அவர்கள், நாங்கள் இமாம்களை இகழவில்லை' என்று கூறுகின்றனர். ஆனால் இமாம்களைப் பின்பற்றியோரைக் குறை கூறுவதற்காக காபிர்களையும் முஷ்ரிக்களையும் விளக்கும் வசனங்களை ஆதாரங்களாக காட்டுகின்றனர். இவ்வசனங்களின் பொருளைப் பார்த்தால் அல்லாஹ் யாரைப் பற்றி கூறுகின்றான்,என்பதுதெளிவாகப் புரியும். மேலும் மத்ஹபை மறுப்பவர்கள் எவ்வாறு புழுகுகின்றனர் என்பதும் புரியும்.

காபிர்கள். அல்லாஹுதஆலாவையும் அவன் அனுப்பிய தூதர்களையும் ஏற்க மறுத்து தங்கள் முன்னோர்கள் (உருவ வணக்கம்) செய்ததை நியாயப்படுத்தி பேசினார்கள். அல்லாஹுதஆலா இவர்களின் இக்கொள்கையை கண்டித்து பல வசனங்களை இறக்கினான்.

இவ்வசனங்களில் கண்டிக்கப்பட்டவர்கள் காபிர்கள்; சிலை வணக்கம் புரிந்தோர் என்று தெளிவாகவே உள்ளது.

மேலும் பின்பற்றப்பட்டவர்களுக்கும் வேதனை உண்டு என்றும் கூறுகின்றான். ஆனால் தக்லீதை மறுப்போர், தங்களின் கொள்கைக்கேற்ப இவ்வசனங்களுக்கு தவறான விளக்கம் கூறி குழப்பம் விளைவிக்கின்றனர்.

சஹாபாக்களின் தக்லீத்

தக்லீத் ஷக்ஸீ - குறிப்பிட்ட ஒருவரின் கூற்றை பின்பற்றுதல்

தக்லீதை மறுப்போர்,குறிப்பிட்டயாரையும் பின்பற்றக் கூடாது. ஏனென்றால் சஹாபாக்கள் குறிப்பாக யாரையும்

பொருளடக்கம்

பின்பற்றவில்லை; பொதுவாகவே அறிந்து வாழ்ந்தார்கள் என்று பொய் கூறுகின்றனர். ஆனால் சஹாபாக்கள் தங்களுக்கிடையில் தெரியாதவைகளில் குறிப்பிட்ட ஒருவரிடம் விளக்கம் பெற்று அவரின் கூற்றை பின்பற்றியுள்ளனர்.

உதாரணமாக: ஹழ்ரத் அபூமூஸா அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூபா நகர அமீராக இருக்கும் போது; அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு இறந்தவர் பற்றி வினவப்பட்டது, அவர் சுவர்க்கத்தில் இருப்பார் என்று கூறினார்கள். அந்த சபையில் அமர்ந்திருந்த ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் எழுந்து மீண்டும் கேள்வியை கேளுங்கள். அமீர் அதை விளங்காமல் பதில் கூறியிருக்கலாம் என்று கூறினார்கள். ஆகையால் மீண்டும் அதே போன்று கேள்வி கூறப்பட்டது. அதே பதிலை கூறினார்கள்.

ஆனால் ஹழ்ரத் இப்னுமஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள்; போரிட்டு இறந்தவர் சத்தியத்திற்காக போரிட்டு இறந்தாலே சொர்க்கத்தில் இருப்பார் என்று நான் கூறுகிறேன் என்று கூறியதும் ஹழ்ரத் அபூமூஸா அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அவர்கள் (இப்னுமஸ்ஊத்) சொன்னதே சரியானது; மேலும் இந்த அறிவுக்கடல் உங்களிடம் இருக்கும் காலமெல்லாம் என்னிடம் எதுவும் கேட்க வேண்டாம் என்றும் கூறினார்கள்.

இதிலிருந்து: உத்தம சஹாபாக்கள் குறிப்பாக ஒருவரின் கருத்தை ஏற்று தக்லீது—பின்பற்றியுள்ளனர் என்பதை தெளிவாக அறியமுடிகிறது. மேலும் ஒருவரின் கூற்று சரியாக இருக்கும் போது அவரையே பின்பற்ற வேண்டும் என்பதும் மிகத் தெளிவாக அறிய முடிகிறது,

ஹஜ்

ஹழ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் ஹஜ் நிறைவேற்ற வந்தபோது அவரின்ஒட்டகங்கள் காணாமல் போய்விட்டது. அவைகளை தேடும் பணியில் ஈடுபட்டதால் ஹஜ்ஜின் காலம் முடிந்து விட்டது. இதனால் பெரிதும் கவலை அடைந்தார்கள். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் நீங்கள் கவலைப்பட வேண்டாம், இஹ்ராம் கட்டி உம்ராச் செய்யுங்கள். அடுத்த ஆண்டு ஹஜ் செய்யுங்கள், என்று கூறியதும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த சம்பவத்தில்: ஹழ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் தங்களைவிட அதிகமான விளக்கம் பெற்ற ஹழ்ரத் உமர்ரழியல்லாஹுஅன்ஹுஅவர்களிடம் எவ்வித ஆதாரத்தையும் கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். இதற்குத் தான் தக்லீத் பின்பற்றுதல் என்று கூறப்படும்.

(நூல் : இஜ்திஹாத் அவர் தக்லீத்)

வட்டி

ஹழ்ரத் உபைதுல்லாஹ் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; நான், வியாபாரியிடம் தவணை அடிப்படையில் விலை நிர்ணம் செய்யப்பட்டு பேரிச்சம் பழம் விற்றேன். நான் திடீரென கூபா செல்ல அவசியம் ஏற்பட்டதால் பணம் கேட்டேன். வியாபாரி, இப்பொழுது பணம் தேவை என்றால் முதல் குறிக்கப்பட்ட தொகையை குறைக்க வேண்டும் என்று கூறினார்.

உடனே நான் ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் ரழியல்லாஹுஅன்ஹு அவர்களிடம் சென்று இந்தவிபரத்தைக்

பொருளடக்கம்

கூறிய போது, வியாபாரி கூறுகின்றபடி நீங்கள் செயல் படவோ, அந்தப் பணத்தைப் பெற்று நீங்கள் சாப்பிடவோ, பிறருக்கு உண்ணக் கொடுக்கவோ நான் கூறமாட்டேன் என்று கூறினார்கள்.

(நூல்: முஅத்தா)

முன்பு நிர்ணயிக்கப்பட்ட விலையை பணம் கேட்டதால் குறைப்பது, பணத்திற்குப்பணம் குறைப்பதாகும். ஆக இது வட்டியாகும் என்று கூறப்பட்ட விளக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இஹ்ராம் ஆடை

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் தல்ஹா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹஜ்ஜின் போது நிறமுடைய ஆடையை இஹ்ராம் கட்டியிருப்பதைக் கண்டதும் அதை அணியாதீர்கள் என்று ஆட்சேபம் தெரிவித் தார்கள்.

ஹழ்ரத் தல்ஹா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இதில் நறுமணத்தின் வாடை இல்லை என்று கூற, ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: (சஹாபாக்கள்) கூட்டத்தினரே! உங்களை ஜனங்களெல் லாம் பின்பற்றுகின்றனர். அவர்களில் ஒரு (ஜாஹில்) அறியா தவர் இதை பார்த்தால் "தல்ஹா இப்னு உபைதுல்லாஹ்" அவர்கள் இஹ்ராமில் சாயம் பூசப்பட்ட (தவறான எண்ணத் தில் நறுமணமுள்ள) ஆடையை அணியக் கூடியவராக இருந் தார் என்று கூறுவார். ஆகையால் (சஹாபாக்கள்) கூட்டத் தினரே! இது போன்ற சாயம் பூசப்பட்ட ஆடையை அணியாதீர்கள் என்று கூறினார்கள்.

(நூல் ; திர்மிதீ)

பொருளடக்கம்

மேற் கூறப்பட்ட நிகழ்ச்சியில்! உத்த சஹாபாக்கள் ஒருவர் மற்றவரின் (சொல்) விளக்கத்தைப் பின் பற்றியது போன்று அவர்களில் ஒருவரின் செயலையும் மற்றவர்கள் பின் பற்றியுள்ளனர் என்று ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வார்த்தை மிகத் தெளிவாகக் கூறு கிறது. அதாவது நீங்கள் நறுமணம் உள்ள ஆடையையே அணிந்தீர்கள் என்று தவறாக விளங்கி, அவர்கள் நறுமண முள்ள ஆடையை பயன்படுத்தி விடுவார்கள். ஆகையால் சந்தேகத்தை உண்டு பண்ணக் கூடிய இதை அணியாதீர்கள், என்று கூறினார்கள்.

சஹாபாக்கள் அனைவரும் எல்லா ஹதீஸ்களையும் அறிந்திருந்தனரா?

சஹாபாக்கள் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அனைத்து நடைமுறைகளையும் கவனித்து மனனம் செய்து பாதுகாத்து வந்தார்கள். ஆனாலும் சில விஷயங்கள் சிலருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆகையால் சஹாபாக்கள் தாங்கள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் இருந்தாலும் ஏதாவது பிரச்சினையில் நபிமொழி தெரியா விட்டால் அதுபற்றி மற்ற சஹாபாக்களிடம் கேட்டு தெரிந்து கொள்வார்கள். இது அவர்களின் உயர்ந்த பண்பாகவும் இருந்தது. உதாரணமாக :

பாட்டிக்கு சொத்து எவ்வளவு?

ஜத்தத்—பாட்டிக்கு சொத்தில் பங்கு உண்டா? என்ற பிரச்சினைக்கு ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு

பொருளடக்கம்

அவர்கள் இது சம்பந்தமாக நான் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் விளக்கம் பெற்றதில்லை என்று கூறினார்கள். அன்று ளுஹர் தொழுகை முடிந்ததும் சஹாபாக்களிடம், உங்களில் யாராவது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஜத்தத்—பாட்டிக்கு சொத்தில் எவ்வளவு பங்கு உண்டு? என்று செவியுற்றதுண்டா? என்று வினவ, ஹழ்ரத் முஹீரா இப்னு ஷுஃபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நான் செவியுற்றுள்ளேன், என்று கூறினார்கள். என்ன கூறினார்கள்? என்று கேட்டபோது 6ல் ஒரு பங்கு கொடுத்தார்கள் என்று கூறினார்கள்.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் (முஹீரா) உங்களைத் தவிர வேறு யாராவது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இது சம்பந்தமாக செவியுற்றதுண்டா? என்று வினவ; ஹழ்ரத் முஹம்மது இப்னு சல்மா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹழ்ரத் முஹீரா அவர்கள் கூறியது உண்மைதான் என்று கூறினார்கள். இவ்விளக்கம் இரு சஹாபாக்கள் மூலம் அறிந்த உடன் பாட்டிக்கு 6ல் ஒரு பங்கு கொடுத்தார்கள்.

...குளிப்பு கடமையா? இல்லையா?

சஹாபாக்களில்: முஹாஜிரீன்களும் அன்சாரீகளும், ஒரு மனிதன் தன் மனைவியுடன் உடலுறவு கொண்டு இந்திரியம் வெளியாகாத சமயத்தில் குளிப்பது அவசியமா? இல்லையா? என்பதில் மாறுபட்டனர்.

ஒரு சமயம் ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்: உடலுறவு கொண்டு இந்திரியம் வெளியாகாவிட்டால் "குளிப்பு கடமை இல்லை" என்று தீர்ப்பளித்தார்கள். அதை ஒருவர்" கலீபா உமர் ரழியல்

பொருளடக்கம்

லாஹு அன்ஹு அவர்களிடம் கூறினார். கலீபா, அவர்களை அழைத்துவர உத்தரவிட்டார்கள். நீங்கள் உங்கள் அறிவின்படி தீர்ப்பு கூறினீர்களா? என்று கேட்க, இல்லை. எனது தகப்பனார் உடன் பிறந்த சகோதரர்கள் மூலமாக செவியுற்றேன் என்று கூறினார்கள். அவர்களில் சிலர் அந்நேரம் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பக்கத்தில் இருந்தனர். அவர்களிடம் கேட்டபோது நாங்கள் அவ்வாறு தான் செயலாற்றுகிறோம் என்று கூறினார்கள்.

ஹழ்ரத் உபை இப்னு கஃப், ஹழ்ரத் அபூ அய்யூப் அன்சாரீ, ஹழ்ரத் ரிபாஅத் இப்னு ராபிஃ ரழியல்லாஹு அன்ஹும். இவர்களே குளிப்பு கடமையாகாது என்று கூறினார்கள்.

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் சஹாபாக்களை அழைத்து ஆலோசனை கலந்தார்கள். முஹாஜிரீன் சஹாபாக்கள் "குளிப்பு கடமை" என்றும், அன்சாரீ சஹாபாக்கள் "குளிப்பு கடமை இல்லை" என்றும் கூறினார்கள். அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் ஆளனுப்பி விளக்கம் கேட்க, பெண் குறியில் ஆண் குறி நுளைந்து விட்டாலே குளிப்பு கடமையாகும் என்று கூறினார்கள். எனவே, அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் விளக்கத்திற்குப்பின் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் உடலுறவு கொண்டு இந்திரியம் வெளியாகாவிட்டாலும் குளிப்பு கடமையாகும். இதற்கு மாற்றமாக நடப்பவர்களை நான் தண்டிப்பேன் என்று கூறினார்கள். (நூல் : தஹாவீ)

இந்த ஹதீஸிலிருந்து இரண்டு விஷயங்கள் விளங்கலாம்.

1) ஒருசில சஹாபாக்களுக்குத் தெரிந்த விஷயம் மற்றவர்களுக்குத் தெரியவில்லை.

பொருளடக்கம்

2) இவ்விஷயத்தில் சஹாபாக்களின் ஏகோபித்த கருத்து (குளிப்பு கடமை) ஏற்பட்டுள்ளது. இதற்கு "இஜ்மாஉ" என்று கூறப்படும்.

சஹாபாக்களின் ஆய்வு,ஹதீஸுக்கு ஏற்பவே இருந்தது

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களிடம்; உடலுறவு கொள்ளாமலும், மஹர் குறிப்பிடாமலும் கணவன் இறந்த பெண்ணைப் பற்றி, எவ்வளவு மஹர் கொடுக்க வேண்டும். கணவன் சொத்தில் பங்கு எவ்வளவு? என்று வினவப்பட்டது. இத்தகைய பெண்ணுக்கு நபியவர்கள் என்ன கூறினார்கள் என்பதை நான் அறியேன், என்று கூறினார்கள். ஒரு மாத காலமாக இப்பிரச்சினை தீராமல், அது சம்பந்தமாக நன்கு ஆய்வு செய்து, அப்பெண்ணைப் போன்ற பெண்ணுக்கு எவ்வளவு மஹர் கொடுக்கப்பட்டதோ அந்த அளவு கூட்டாமல் குறைக்காமல் இப்பெண்ணுக்கு கொடுக்க வேண்டும். மேலும் கணவன் சொத்தின் பங்கு உண்டு, இத்தா இருக்க வேண்டும், எனவும் தீர்ப்புக் கூறினார்கள். உடனே ஹழ்ரத் மஃகல் இப்னு யஸார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதுபோன்ற பெண்ணுக்கு இப்படித்தான் தீர்ப்பளித்தார்கள் என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்தார்கள். இஸ்லாத்திற்குப்பின் இதுபோன்ற சந்தோஷம் அடைந்ததில்லை.

விளங்குவதில் வித்தியாசம்

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் பிக்ஹு சட்டங்கள் கோர்வை செய்யப்

பொருளடக்கம்

பட்டிருக்கவில்லை. மேலும் பிக்ஹு சம்பந்தமாக எந்த சர்ச்சையும் தோன்றவில்லை. ஏனென்றால் நபீஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளு செய்வார்கள். அதைப்பார்த்த ஸஹாபாக்கள் அப்படியே செய்வார்கள். ஆனால் ஒளுவில் இது பர்ளு; இது பர்ளு அல்ல; இது முஸ்தஹப், என்ற வித்தியாசமின்றி அனைத்தையும் செய்து வந்தனர்.

அதுபோன்று நபியவர்கள் தொழுதார்கள்: ஸஹாபாக் களும் நபியவர்கள் தொழுதது போன்று தொழுதார்கள். நபியவர்கள் ஹஜ்ஜில் தவாபின் போது "ரமல்" செய் தார்கள். அதைப்பார்த்த ஸஹாபாக்களும் "ரமல்" செய் தார்கள். இதுபோன்று அனைத்து நடைமுறைகளிலும் நபியவர்களைப் பின்பற்றினார்கள். ஆகையால் அந்நேரம் ஒளுவின் பர்ளு 6? அல்லது 4? தொடராக ஒளு செய்ய வேண்டுமா? எதை விட்டால் ஒளு முடியும்? என்ற எப்பிரச் சினையும் ஏற்படவில்லை.

ஆனால் நபியவர்களின் காலத்திற்குப்பின் நபியவர்கள் கூறிய, செய்தவைகளில் எது கட்டாயக் கடமை? அல்லது அதை நிறைவேற்றுவது சிறப்புக்குறியதா? என்ற பிரச் சினை எழுந்தது. ஆகையால் ஸஹபாக்களில் நன்கு தேர்ச்சி யடைந்த சுமார் 130 ஸஹாபாக்கள் தாங்கள் நபியவர்களின் செயல், சொல்லில் விளங்கிக் கொண்டதைக் கூறினார்கள்.

உதாரணமாக. நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஜ்ஜுக்கு சென்றபோது ஒரு இடத்தில் இறங் கினார்கள். இதை ஹழ்ரத்அபூஹுரைரா, ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் இதுவும் ஹஜ் ஜுடைய வணக்கங்களில் சம்பந்தப்பட்டது. ஆகவே நபியவர்கள் இறங்கிய அதே இடத்தில் இறங்குவது சுன்னத் என்று கூறுகின்றனர். ஆனால் ஹழ்ரத் ஆயிஷா, ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர்

பொருளடக்கம்

நபியவர்கள் அவ்விடத்தில் தற்செயலாகவே இறங்கினார்கள். ஆகவே அது ஹஜ்ஜின் வணக்கங்களில் உள்ளவை அல்ல என்று கூறுகின்றனர்.

மேலும், தவாப் செய்யும் போது "ரமல்" செய்வது சுன்னத் என்று மிகுதமானோர் கூறுகின்றனர். ஆனால் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில காரணங்களுக்காக ரமல் செய்தார்கள். அதாவது, நபியவர்களும் சஹபாக்களும் மதீனா சென்றதினால் பசி பட்டினியால் வலுவிழந்துவிட்டார்கள் என்று மக்கா காபிர்கள் ஏளனமாக பேசிக்கொண்டு கஃபாவை சுற்றி அமர்ந்து கொண்டு வேடிக்கை பார்த்தனர். அவர்களுக்காக தங்களின் வீரத்தை எடுத்துக்காட்டவே நபியவர்கள் ரமல் செய்தார்கள். ஆகவே அது சுன்னத் அல்ல என்று கூறுகின்றார்கள்.

ஹழ்ரத் அபூசயீது குத்ரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்ாள் அறிவிக்கின்றார்கள்; நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் (மரணமடைவதற்கு 3நாள் அல்லது 5 நாட்களுக்கு முன் மிம்பர்மீது அமர்ந்து) உபதேசம் செய்தார்கள்; நிச்சயமாக அல்லாஹு தஆலா ஓர் அடியானுக்கு இவ்வுலகத்தில் உள்ளவைக்கும் தன்னிடத்தில் உள்ளவைகளுக்குமிடத்தில் எது தேவை என்று இஸ்டம் கொடுத்தான். அவர் அல்லாஹு தஆலாவிடத்துள்ளதை தேர்ந்தெடுத்துக் கொண்டார், என்று கூறியபோது ஹழ்ரத் அபூபக்கர் ஸித்தீக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அழுதார்கள். இவர்களின் அழுகை எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றால் நபியவர்கள், அல்லாஹு தஆலா இஸ்டம் கொடுக்கப்பட்ட ஓர் அடியானைக் கூறுகின்றார்கள்! (இதற்காக ஏன் அழ வேண்டும்?) இஸ்டம் கொடுக்கப்பட்ட "அந்த அடியார்" நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்வம்

அவர்களே! இதை எங்கள் எல்லோரையும்விட அபூபக்கர் நன்கு அறிந்து கொண்டார்கள்.

(நூல் : புகாரீ)

நபியவர்களின் இந்த உபதேசத்தில் முற்றிலும் நபியவர்களின் மரணத்தைக் குறிக்காத ஒன்றின் மூலம் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மட்டும் "நபியவர்களின் மரணமே" அதன் பொருள் என்று விளங்கிக் கொண்டார்கள் என்றால் ஒன்றை விளங்கிக் கொள்வதில் சஹாபாக்கள் அனைவரும் ஒரே மாதிரியாக இல்லை என்பதை அறியலாம்.

மேலும்பெரும் பெரும்சஹாபாக்களுக்குக்கூட இவ்விளக்கம் அறிந்து கொள்ள முடியவில்லை என்று கூறும்போது அரபியின் அரிச்சுவடியே தெரியாதோர் குர்ஆன், ஹதீஸைப் பார்த்து எவ்வாறு அமல் செய்ய முடியும்?

சஹாபா உலமாக்கள்

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உபதேசத்தைக் கேட்கின்ற முனாபிக்கீன்கள் அதை விளங்குகின்ற ஆற்றல் இல்லாத காரணத்தால் நபியவர்களைவிட்டு வெளியேறியபின் அறிவு—ஞானம் கொடுக்கப்பட்ட சஹாபாக்களிடம், இந்நேரம் (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ன சொன்னார்கள் என்று கேட்பார்கள். (47—16)

இவ்வசனத்தில், அல்லாஹு தஆலா "ஊத்துல்இல்ம" என்ற கலிமாவை கூறுகின்றான். இதற்கு சஹாபாக்களில் அறிவு-ஞானம் கொடுக்கப்பட்ட உலமாக்கள் என்பது பொருளாகும். எனவே இத்தகைய வகையினர் சஹாபாக்

பொருளடக்கம்

களில் இருந்துள்ளார்கள் என்பதை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்,குறிப்பிட்ட சில சஹாபாக்களுக்காக பிரத்தியோகமாக துஆச் செய்துள்ளார்கள்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களை தங்களின் நெஞ்சுடன் அணைத்து துஆச் செய்தார்கள்; யாஅல்லாஹ்! நீ அவர்களை தீனில் பகீஹாக— அறிஞராக ஆக்குவாயாக, தஃவீல்- குர்ஆனுக்கு விளக்கம் கூறும் ஆற்றலையும் கொடுப்பாயாக!

(நூல் : புகாரீ, முஸ்லிம்)

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், சஹாபாக்கள் சபையில் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். இதைக் கண்ட சில சஹாபாக்கள் இவரைப் போன்று எங்களுக்கு பிள்ளைகள் இருக்கின்றார்களே! என்று கூறியபோது நபியவர்களிடம் அவர்களுக்குரிய நெருக்கத்தை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருநாள் சஹாபாக்கள் சபையில் சில சஹாபாக்களிடம், (நபியே! உங்களுக்கு) அல்லாஹு தஆலாவின் உதவியும் (மக்காவின்)வெற்றியும் கிடைத்தது என்ற சூராவைப்பற்றிய இதன் விளக்கமென்ன? என்று வினவியபோது, அல்லாஹு தஆலா தனது நபிக்கு (ஒரு நாட்டை) வெற்றி பெற்றால் பாவமன்னிப்பு கோரும்படி கூறுகின்றான், என்று கூறினார்கள். சிலர் மௌனமாக இருந்தனர்.

பொருளடக்கம்

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களைப் பார்த்து நீங்கள் இதற்கு என்ன விளக்கம் கூறுகின்றீர்கள்? என்று கேட்டபோது, அவ்வாறு அல்ல, அல்லாஹு தஆலா தனது நபியின் வாழ்வு முடிவு பெறப் போகிறது என்று அவர்களுக்கு அறிவித்தான். (நபியே! உங்களுக்கு) "அல்லாஹு தஆலா உதவியும் வெற்றியும் வந்துவிட்டது" இது உங்களின் மரணம் நெருங்கிவிட்டது என்பதற்கு அடையாளமாகும். எனவே உமது இறைவனைப் புகழ்ந்து அவனுடைய (அருளையும்) மன்னிப்பையும் கோருவீராக! நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை அங்கீகரித்து மன்னிப்புக் கோருதலையும் அங்கீகரிப்பவனாக இருக்கின்றான், என்று (இப்னு அப்பாஸ் அவர்கள்) கூறியதும் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நீங்கள் அறிந்(தஇவ் விளக்கத்)தை நான் அறியவில்லையே என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ, வகையரா)

அன்றும் குறை கூறினர்

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அதிகமான முறையில் நபிமொழிகளை அறிவித்ததை சிலர் குறை கூறினர். அபூஹுரைரா அதிகமான நபிமொழியை அறிவிக்கின்றாரே! என்றனர். இதைக் கேட்டதும் மனம் சஞ்சலமடைந்தார்கள். ஒரு இறை வசனத்தைக்கூறி அல்லாஹு தஆலா இப்படி கூறாமலிருந் தால் நான் நபிமொழிகளை அறிவித்து இருக்க மாட்டேன்! என்று கூறினார்கள்.

நேர்வழியையும் தெளிவான அத்தாட்சிகளையும் நாம் அருளிய அவற்றை மனிதர்களுக்காக வேதத்தில் தெளிவு படுத்தி (க் கூறி)யபின்னும் எவர்கள் (அவற்றை) மறைக்

கின்றார்களோ அவர்களை நிச்சயமாக அல்லாஹுதஆலா வும் சபிக்கின்றான்: (மற்றும்) சபிப்போரும் அவர்களைச் சபிக்கின்றனர்.

ஆயினும், அவர்களில் எவர்கள் வருந்தி, மிகவும் இரக்கம் கொண்டு (தங்களின் வேதங்களில் மறைந்தவற்றை) சீர்திருத்தி (அவற்றை மனிதர்களுக்கு)த் தெளிவாக எடுத் துரைக்கின்றனரோ அவர்களை நான் மன்னித்துவிடுவேன், நானோ மிக்க மன்னிப்புடையவன்; அளவற்ற அன்புடை யவன். (2-159, 160)

(நூல் : புகாரீ)

ஹழ்ரத் இமாம் புகாரீ, இமாம் பைஹகீ ரஹ்மதுல் லாஹி அலைஹிமா ஆகிய இருவரும் தங்கள் நூல்களில்: ஹழ்ரத் முஹம்மது இப்னு இமாரத் இப்னு ஹஜ்ம் ரஹ்ம துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவிக்கின்றார்கள்; அன்னார், பெரிய சஹாபாக்கள் பத்துச் சொச்சம் பேர் இருக்கின்ற சபையில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள். நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூலம் கேட்ட ஹதீஸை அறிவித்தார்கள். அவர்களில் யாரும் உடனே அதை (ஹதீஸ் என்று) அறியாதவர்களாக இருந் தார்கள். பின்பு தங்களுக்கிடையில் கலந்தாலோசித்தபின் நபிமொழிதான் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

மேலும் ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிமொழியை அறிவித்தார்கள். அப்பொழுதும் அந்த 10 சொச்சம் சஹாபாக்கள் முன்பு போன்றே தாமதமாக நபிமொழி என்ற முடிவுக்கு வந்தார்கள். இதைப் பார்த்த நான் நிச்சயமாக அபூஹு ரைரா தான் சஹாபாக்களில் நபிமொழியை அதிகமாக மனனம் செய்தவர் என்று அறிந்து கொண்டேன்.

ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹுமா, அவர்கள், ஹழ்ரத் அபூஹுரைரா, ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து; எங்களில் நீங்கள்தான் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் எந்நேரமும் இருந்தீர்கள். மேலும் நீங்கள்தான் நபீஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழியை அதிகமாக அறிந்தவர்கள்,என்று கூறினார்கள்.

(நூல் : பத்ஹுல்பாரீ ஷரஹ்புகாரீ)

130 சஹாபாக்களின் தீர்ப்பு

இப்னு கய்யும் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் "இஃலாஉல் முகினீன்" என்ற தங்களின் நூலில் கூறுகின் றார்கள்; நான், நபித்தோழர்கள் ஆண், பெண் ஆகிய 130 சொச்சம் பேரிடம் மார்க்கத்தீர்ப்புகளை பெற்றுக் கொண் டேன்.

பல ஆயிரக்கணக்கான சஹாபாக்களில் 130 சொச்சம் பேர் மட்டுமே மார்க்கத்தீர்ப்பு வழங்கும் ஆற்றல் பெற்ற வர்கள் என்று கூறினால் இந்த 130 சஹாபாக்கள் கூறக் கூடிய சட்டங்களை பல ஆயிரக்கணக்கான நபித்தோழர்கள் பின்பற்றினார்கள் என்பதை அறிவுடையோர் அறிந்து கொள்வர்.

தீர்ப்பு வழங்கிய பிரபலமான நபித்தோழர்கள்

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் குர்ஆன், ஹதீஸில் நன்கு தேர்ச்சியடைந்து மார்க்கத்தீர்ப்பு வழங்கிய பிரபலமான நபித்தோழர்கள்:

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு
,, உமர் ,,
,, உத்மான் ,,
,, அலீ ,,
,, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ,,
,, அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ப் ,,
,, உபை இப்னு கஃப் ,,
,, முஆது இப்னு ஜபல் ,,
,, அம்மார் இப்னுயாஸிர் ,,
,, ஹுதைபதுல் யமானி ,,
,, ஜைது இப்னு தாபித் ,,
,, அபுத் தர்தாயீ ,,
,, அபூமூஸா அஷ்அரீ ,,
,, ஸல்மான் பார்ஸீ ,,

இஜ்திஹாத்-ஆய்வு செய்தல்

"முஜ்தஹித்" என்றால் குர்ஆன், ஹதீஸ் இஜ்மாஉ அடிப்படையில் ஆய்வு செய்பவருக்கு கூறப்படும்.

"முஜ்தஹித்" என்று கூறப்படுபவருக்கு ஐந்து தகுதிகள் இருக்க வேண்டும்: 1, குர்ஆன்; இதை முழுமையாக விளங்கி இருக்க வேண்டும். அதில் மாற்றியது. மாற்றப்பட்டது. முஜ்மல், முபஸ்ஸல், குறிப்பானது, பொதுவானது, முதஷாபிஹ், மக்ரூஹ், ஹராம், முபாஹ் முஸ்தஹப், உஜூப் இவைகள் அனைத்தையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

2. ஹதீஸ், (சுன்னத் ரஸூல்) இதில் குறைந்தபட்சம், (அஹ்காம்) சட்டங்கள் பற்றிய அனைத்து ஹதீஸ்களையும்

மேற்கூறப்பட்டவைகளுடன் ஸஹீஹ், ழயீஃப், முஸ்னத், முர்ஸல், முதாபகா போன்றவைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

3. இல்மு லுஹத்;
அரபு பாஷையின் முழுமையான விளக்கத்தையும் அறிந்திருக்க வேண்டும், எனவே அரபு பாஷையின் முழு விளக்கத்தையும் அறிய முடியவில்லையென்றால் ஹதீஸ்களின் முழுக் கருத்தையும் விளங்கிக் கொள்ள முடியாது.

4. சஹாபாக்கள், தாபியீன்கள் ஒருமித்துக் கூறிய (இஜ்மாஉ) கருத்துகளை முழுமையாக விளங்கி இருக்க வேண்டும். மிகுதமாக அவர்கள் (அஹ்காம்) சட்டங்களில் அளித்த தீர்ப்புகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

5. கியாஸ்; குர்ஆன், ஹதீஸ்களிலிருந்து சட்டங்களை கிரகிக்கக்கூடிய நுட்பமான விளக்கத்தை அறிந்திருக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவைகளில் ஒன்றை அறியாமலிருந்தாலும், அல்லது அனைத்தையும் அறிந்திருந்து மனோ இச்சையின்படி நடப்பவராக இருந்தால், பித்அத்துகளை செய்பவராக, மிகப்பெரிய பாவங்களை விட்டும் விலகாதவராக, சிறிய பாவங்களில் நிரந்தரமாக ஈடுபடக்கூடியவராக, தக்வா—இறையச்சத்திற்கு மாற்றமாக நடப்பவராகவும் இருந்தால், அவர் மிகச் சிறந்த அறிஞராக இருந்தாலும் முஜ்தஹிதாக இருப்பதற்குரிய தகுதியை இழந்தவராவார்.

எனவே, மேலே கூறப்பட்ட 5 விதமான தகுதிகள் பரிபூரணமாக அமையப் பெற்ற முஜ்தஹிதையே தக்லீத்—பின்பற்ற வேண்டும்,

"நுஸ்ஸமுதவாதிரா"வை அறியாதவர் அதை அறிந்தவரைக் கொண்டு தக்லீத்—பின்பற்றுவது மிக அவசிய மாகும்.

(நூல் : ஜவாஹிருல் பிக்ஹு, பக் 123)

இஜ்திஹாத்-ஆய்வு செய்ய அனைவராலும் முடியுமா?

ஹழ்ரத் அன்வர் ஷா கஷ்மீரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கல்வியில் மிகச்சிறந்த அறிஞர். அவர்கள் ஒரு விஷயத்திற்கு பதிலளிக்கும்போது மடைதிறந்த வெள்ளம் போன்று பதில் கூறுவார்கள். அன்னார் "நடமாடும் பல்கலைக்கழகம்" என்று சிறப்புப் பெயர் பெற்றவர்கள். இவர்களைப் போன்ற அறிஞர் இவர்களுக்கு பின் தோன்றவில்லை என்று கூறப்படுவதுண்டு. இத்தகைய அறிஞர் கூறுகின்றார்கள்: என்னிடம் எந்த கேள்வியைக் கேட்டாலும் அதற்கு என்னால் பதில் கூறமுடியும். ஆனால் பிக்ஹில் என்னால் அவ்வாறு தெளிவாக பதில்கூறமுடியாது. எனவே நான் பிக்ஹில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹிஅவர்களைப் பின் பற்றக்கூடிய—முகல்லிதாக இருக்கிறேன். ஏனென்றால் பிக்ஹு போன்ற கஷ்டமானது வேறெதுவுமில்லை.

அறிவில் அனைவராலும் பாராட்டப்பட்ட மிகச் சிறந்த அறிஞரே என்னால் பிக்ஹில் இஜ்திஹாத் செய்ய இயலவில்லை என்று கூறும்போது சாதாரணமானவர் களால் இது முடியுமா? இம்மகானின் கூற்றையும் இன்று திடீரென தோன்றிய; குழப்பம் விளைவிப்போரின் கூற்று களையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

அறிவு-ஞானமுடையவர்கள்

என் இறைவனே! என்னுடைய கல்வி ஞானத்தை பின்னும்) அதிகப்படுத்து" என்று (நபியே!) நீங்கள் பிரார்த்

தனை செய்வீர்களாக! நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். உலகத்தின் எதைப்பற்றியும் கேட்கும் மாறு வேண்டப்படவில்லை. ஆனால் இல்மு—அறிவு "அதிகமாக" வேண்டும்படி அல்லாஹு தஆலா கூறுகின்றான்.

ஹழ்ரத் மக்ஹூல் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்; உங்களில் ஒருவரைவிட எனக்கு எவ்வளவு சிறப்பு இருக்கிறதோ அதுபோன்று வணக்க சாலியைவிட ஆலிமின் சிறப்பு இருக்கிறது என்று கூறி, நிச்சயமாக அல்லாஹுதஆலாவுடைய அடியார்களில் அவனுக்குப் பயப்படுவதெல்லாம் (அறிவுடைய) கல்விமான் தாம். என்ற வசனத்தை ஓதிக்காட்டினார்கள்.

(நூல் : தாரமீ)

அல்லாஹு தஆலா, உங்களிலுள்ள விசுவாசிகளுக்கும், இன்னும் கல்வி ஞானம் உடையோருக்கும் "பதவிகளை" உயர்த்துவான் (58-11)

இவ்வசனத்திற்கு; அல்லாஹுதஆலா, ஆலிமான—அறிவு—ஞானம்பெற்ற முஃமினை இவை இல்லாத முஃமினை விட உயர்த்துவான். ஏனென்றால் "பதவிகளை உயர்த்துவான்" என்ற பதம் அதை உணர்த்துகிறது. என்று தப்ஸீர் விரிவுரையாளர்கள் கூறுகின்றனர்.

(நூல் : பத்ஹுல்பாரீ)

நாம் நாடியோருக்கு அந்தஸ்தை வழங்குவோம் (6-83) என்ற ஆயத்திற்கு, ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; நாம் நாடியோருக்கு இல்மு—அறிவை வழங்குவோம் என்று அல்லாஹு தஆலா கூறுகின்றான்.

பொருளடக்கம்

எனவே, குர்ஆன், ஹதீஸ்களில்; முஃமின்களில் கல்வி—ஞானம் கொடுக்கப்பட்டவர்கள் என்று ஒரு வகையினர் உள்ளனர் என்று கூறப்பட்டிருப்பதை அறியும்போது, அனைவரும் அவரவர் குர்ஆன் ஹதீஸைப் பார்த்து அமல் செய்யுங்கள் என்று கூறுவது எப்படி பொருத்தமாகும்?

நபியவர்களே இஜ்திஹாதிற்கு அங்கீகாரம் வழங்கினார்கள்

திர்மிதீ, அபூதாவூது கிரந்தங்களில் அறிவிக்கப்படுகிறது. நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹழ்ரத் முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை யமன் நாட்டிற்கு ஆளுநராக அனுப்பியபோது;

நபீ : நீங்கள் எதனைக் கொண்டு தீர்ப்பளிப்பீர்கள்!

முஆத்: அல்லாஹு தஆலாவின் வேதமான குர்ஆன் மூலம்.

நபீ : அதில் விடை காணாவிட்டால்!

முஆத்: அல்லாஹு தஆலா தூதரின் பொன்மொழி, மூலம்.

நபீ : அதிலும் விடை காணாவிட்டால்!

முஆத்: எனது ஆய்வின் மூலம்.

நபீ : அனைத்துப் புகழும் அல்லாஹு தஆலாவுக்கே உரியது. அவன், அவனுடைய தூதர் எதை பொருந்திக்கொள்வாரோ அதை அவனுடைய தூதருடைய தூதருக்கு (முஆத்) அளித்து தவ்பீக்—அருள் புரிந்தான், என்று கூறினார்கள்.

பொருளடக்கம்

ஹழ்ரத்முஆது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் என் ஆய்வின் மூலம்'' என்று கூறியதின் கருத்து: குர்ஆன், நபிமொழிகளை நன்கு ஆய்வு செய்து தீர்ப்பளிப்பேன், என்பதாகும். இவ்வாறு ஆய்வு செய்து தீர்ப்பளிப்பது என்பது அனைவராலும் முடியாது. குர்ஆன், நபிமொழி, கியாஸ் போன்றவைகளை நன்கு அறிந்த அறிஞர்களாலேயே முடியும். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தேர்வு செய்து அனுப்பப்படும் ஆளுநர் சாதாரணமானவராகவா இருப்பார்!

அஸர் தொழுகையில் ஆய்வு

ஹழ்ரத் இப்னு உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அஹ்ஜாப் நாளில், உங்களில் யாரும் "பனீ குரைழா'' சென்றடையாமல் அஸர் தொழ வேண்டாம், என்று கூறினார்கள். (செல்லும் போது) வழியில் அஸர் நேரம் வந்து விட்டது. சிலர், நாங்கள் அந்த (பனீ குரைழா) இடம் சென்று தான் அஸர் தொழுவோம் என்றனர். (மற்ற) சிலர் நாங்கள் இங்கே அஸர் தொழுவோம். அதனால் எங்கள் மீது எந்த மறுப்பும் வராது, என்றனர். இதை நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறப்பட்டபோது (இரு பிரிவினரில்) யாரையும் குறை செய்ததாக கோபப்படவில்லை.

(நூல் : புகாரீ)

இந்த நபிமொழியில்; உத்தம சஹாபாக்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒரு சொல்லுக்கு தங்களின் ஆய்வினால் இரு பிரிவாக செயல்பட்டனர். ஒரு பிரிவினர் நபியவர்களின் உத்தரவின் வெளிப்படையானதை பின்பற்றி வழியில் அஸர் தொழாமல் இருந்துவிட்டனர். ஆனால் மற்ற சிலர்,

பொருளடக்கம்

பனீ குறைழா போய் சேரும் வரை அஸர் நேரம் இருக்காது. ஆகையால் அஸர் நேரம் தவறி விடுமே என்று பயந்து வழியிலே அஸர் தொழுதுவிட்டனர். பின்பு, சஹாபாக்கள் இரு பிரிவாக செயல்பட்டதை நபியவர்களிடம் கூறிய போது யாரின் மீதும் குற்றம் செய்ததாக கோபப்படவில்லை. ஆகவே இந்த நபி மொழியில் சஹாபாக்களின் உயர்ந்த நோக்கமும்,ஆய்வும் உள்ளதால் இதை அறிந்த நபியவர்கள் யாரையும் தவறு செய்ததாக குறை கூறவில்லை.

(நூல் : புகாரீ, 109, இஜ்திஹாத் அவ்ர் தக்லீத் 49)

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு (மரணமடைய காரணமான) பிணி கடினமானபோது, ஒரு ஏட்டை கொண்டு வாருங்கள் (எனக்குப்) பின் நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காக சிலதை எழுதவேண்டும் என்று கூறினார்கள். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வேதனை கடினமாகுவதால் அவ்வாறு கூறுகின்றார்கள்; (ஆகையால் எழுத ஏடு கொடுக்க வேண்டாம்) அல்லாஹு தஆலாவின் வேதம் (நம்மிடம் உள்ளது அது) போதும். என்று கூறவும் சஹாபாக்கள் மத்தியில் பிரச்சினை ஏற்பட்டது.

(நூல் : புகாரீ)

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் ஆழிய சிந்தனையினால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உத்தரவிற்கு மாற்றமாக செயல்பட்டதை நபியவர்கள் மறுக்கவில்லை. ஏனெனில் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்நிகழ்ச்சிக்குப் பின் சில தினங்கள் உயிரோடு இருந்துள்ளார்கள். அப்பொழுது தாங்கள் முந்தி எழுதுவதற்கு ஏடு கேட்டபோது மறுக்கப்பட்டதை மீண்டும் கேட்கவில்லை.

ஹழ்ரத் கந்தாபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுதுவதற்கு ஏடு கொடுக்க தடுக்காமல் (கொடுத்து) இருந்தால் உலமாக்களின் சிறப்பும், இஜ்திஹாத்-ஆய்வு செய்யும் முறையும் இல்லாமலாகி இருக்கும்.

ஹழ்ரத் இப்னு ஜவ்ரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; எழுதுவதற்கு ஏடு கொடுக்கப் பட்டு நபியவர்கள் ஏதாவது எழுதியிருந்தாலும் இஜ்திஹாத்-ஆய்வு இல்லாமல் ஆகி இருக்காது. ஏனெனில் புதிய புதிய பிரச்சினைகள் ஏற்படும் போது அவைகளுக்கு ஒரே கருத்தில் மட்டுப்படுத்தி விளக்கம் கூறி விடமுடியாது. எனவே, நபியவர்களிடம் ஏடு கொடுக்கப்பட்டு ஏதாவது எழுதியிருந்தால் அதை முனாபிக்-நயவஞ்சகர்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி விடுவார்கள் என்று பயந்து தான் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுது வதற்கு ஏடு கொடுக்க மறுத்தார்கள்.

(நூல் : பத்ஹுல் பாரீ)

ஆகவே, மேற்குறிப்பிட்ட ஹதீஸில் உண்டான நிகழ்ச் சியில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னிலையில்; இஜ்திஹாத்-ஆய்வு நடந்துள்ளது என்ப தற்கு மிகத் தெளிவான ஆதாரமாகும்.

(நூல் : பத்ஹுல் பாரீ, ஷரஹ் புகாரீ)

ஹழ்ரத் தாரிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஒரு சஹாபிக்கு பெருந்தொடக்கு ஏற்பட்டது. அதனால் அவர் தொழவில்லை நபீ ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அதை கூறிய போது, நீங்கள் செய்தது சரிதான் என்று கூறினார்கள். மற்றொரு சஹாபிக்கு அவ்வாறே ஏற்பட்டது. ஆனால் அவர் தயம்மும் செய்து தொழுதார். இவரும் நபியவர்

பொருளடக்கம்

களிடம், தனக்கு பெருந்தொடக்கு ஏற்பட்டது. தண்ணீர் இல்லாததால் (நான் ஆய்வு செய்து) தயம்மும் செய்து தொழுதேன் என்ற கூற, நீங்கள் செய்தது சரிதான் என்று கூறினார்கள்.

இந்த ஹதீஸில் ஒரு சஹாபி தான் அறிந்தபடி தண்ணீர் இல்லாததால் தொழாததையும், மற்றொரு சஹாபி அவராகவே ஆய்வு செய்து தொழுததையும் நபியவர்கள் ஆமோதித்துள்ளார்கள்.

(நூல் : இஜ்திஹாத் அவர் தக்லீத் பக் 48)

ழாஹிர்-வெளிப்படையான ஹதீஸுக்கு மாற்றமான ஆய்வையும் நபியவர்கள் ஆமோதித்தார்கள்

ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள், ஒரு மனிதர் "உம்முல் வலத்" என்ற பெண்ணைக் கொண்டு (ஜினா செய்ததாக) குற்றம் சாட்டப்பட்டார். நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அம்மனிதரின் தலையை கொய்து விடும்படி கூறினார்கள். ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அம்மனிதரை கொலை செய்ய சென்ற போது, அவர் கிணற்றுக்குள் தண்ணீரை தன் உடலில் ஊற்றிக் கொண்டிருந்தார். அவரை வெளியே வருமாறு கூற, அவர் தன் கையை நீட்டினார். அவரின் கரத்தைப் பிடித்து வெளியே கொண்டு வந்தார்கள். அவர் ஆண்குறி இல்லாதவராக கண்டதும் அவரை கொலை செய்யாமல், நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அவரின் தன்மையைக் கூறினார்கள். நபியவர்கள் நீங்கள் செய்தது சரிதான் என்று கூறினார்கள்.

பொருளடக்கம்

இந்த ஹதீஸில்; விபச்சாரக் குற்றம் சாட்டப்பட்டவர் அதற்குக் காரணமான உறுப்பு இல்லாததால் நபியவர் களின் உத்தரவிற்கு மாற்றமாக ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் அறிவின் மூலம் ஆய்வு செய்து அவரை கொலை செய்யாமல் திரும்பியதை நபியவர்கள் சரிதான் என்றார்கள்.

(நூல் : முஸ்லிம்)

ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக் கின்றார்கள்: ஓர் அடிமைப்பெண் விபச்சாரம் செய்த குற்றத்திற்காக அவரை தண்டிக்கும்படி நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் தண்டனையை நிறைவேற்ற அவரிடம் சென்றபோது அவர் கற்பமுடையவராக இருப்பதை அறிந்தேன். ஆகை யால் தண்டனையை நிறைவேற்றாமல் திரும்பிவிட்டேன். நபியவர்கள் வினவியதற்கு அவர் கற்பமுண்டாகி இருப்ப தால் தண்டனையை நிறைவேற்றாமல் வந்து விட்டேன் என்று கூறியபோது நீங்கள் செய்தது சரிதான், என்று கூறி னார்கள்.

இந்த ஹதீஸில்: ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் ஆய்வின்படி நடந்து கொண்டதை நபிய வர்கள் ஆமோதித்தார்கள்.

கியாஸ்

குர்ஆன், ஹதீஸில் சொல்லப்பட்டவைகளுக்கு "நஸ்" என்று கூறப்படும். அதில் தெளிவாக சொல்லப்படாத விஷயமாக இருந்தால் அவை போன்றவைகளுக்கு நஸ்ஸில் என்ன சட்டம் பயன்படுத்தப்பட்டதோ அதைஇவைகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்கு கியாஸ் என்று கூறப்படும்.

அதாவது குர்ஆன், ஹதீஸில் தெளிவாக கூறப்படாதவைகளுக்கு அதுபோன்று நிகரானவைகளுக்கு குர்ஆன் ஹதீஸில் என்ன சட்டம் கூறப்பட்டதோ அதை இவைகளுக்கு பயன்படுத்தப்படும்.

குர்ஆனில் கூறப்பட்டுள்ள கியாஸ்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓا۟ أَنفِقُوا۟ مِن طَيِّبَٰتِ مَا كَسَبْتُمْ
وَمِمَّآ أَخْرَجْنَا لَكُم مِّنَ ٱلْأَرْضِ ۖ وَلَا تَيَمَّمُوا۟
ٱلْخَبِيثَ مِنْهُ تُنفِقُونَ وَلَسْتُم بِـَٔاخِذِيهِ إِلَّآ أَن
تُغْمِضُوا۟ فِيهِ ۚ وَٱعْلَمُوٓا۟ أَنَّ ٱللَّهَ غَنِىٌّ حَمِيدٌ ﴿٢٦٧﴾

விசுவாசிகளே! நீங்கள் (தர்மம் செய்யக் கருதினால்) சம்பாதித்தவைகளிலிருந்தும் நாம் உங்களுக்குப் பூமியிலிருந்து வெளிப்படுத்திய (தானியம், கனிவர்க்கம் முதலியவைகளிலிருந்துப் நல்லவைகளையே (தானமாகச்) செலவு செய்யுங்கள். அவைகளில் கெட்டவைகளைக் கொடுக்க விரும்பாதீர்கள். ஏனென்றால் கெட்டுப் போனவைகளை உங்களுக்கு ஒருவர் கொடுத்தால்) அவைகளை நீங்கள் (வெறுப்புடன்) கண் மூடியவர்களாக அன்றி எடுக்க மாட்டீர்களே! (ஆகவே நீங்கள் விரும்பாத பொருள்களைப் பிறருக்கும் கொடுக்க வேண்டாம்) நிச்சயமாக அல்லாஹு தஆலா, நிதிபரனும் மிக்க புகழுடையயோனுமாக இருக்கின்றான் என்பதையும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.
(2.267)

அல்லாஹு தஆலா இவ்வசனத்தில்: மனிதன் தனக்கு கெட்டுப் போன பொருளை எப்படி விரும்பமாட்டானோ

அதுபோன்று அதை மற்றவருக்கும் தர்மமாகவும் கொடுக்கக் கூடாது என்று கூறுகின்றான். இதுவே கியாஸ் முறையாகும்.

(நூல் : ஹகீகத் பிக்ஹு, பக் 168)

ஹதீஸில் கூறப்பட்ட கியாஸ்

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஜுஹைனிய்யா கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பெண்மணி, நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்; என் தாயார் ஹஜ் செய்ய நேர்ச்சை செய்திருந்தார்கள், (அந்த) ஹஜ் செய்யாமலே இறந்து விட்டார்கள். என் தாயாருக்குப் பகரமாக நான் அதை (ஹஜ்ஜை) செய்யலாமா? என்று கேட்டபோது, ஆம். அவருக்குப் பகரமாக ஹஜ்ஜு செய்யுங்கள், உங்கள் தாயார் கடன்பட்டிருந்தால் அதை நீங்கள் நிறவேற்றுவீர்களே! அல்லாஹு தஆலாவுக்குறியதை நிறைவேற்றுங்கள்) அதை நிறைவேற்றுவதற்கு அல்லாஹு தஆலா மிகவும் தகுதியானவன் என்று கூறினார்கள்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேர்ச்சையின் கடமையை நிறைவேற்றுவதற்கு கடனை கியாஸ் அடிப்படையில் கூறுகின்றார்கள்.

(நூல் : ஹகீகத் பிக்ஹு.பக்.168)

ஒட்டக நிறத்தின் மூலம் கியாஸ்

ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு கிராம சஹாபி நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்.

கிராம சஹாபி (யாரஸூலல்லாஹ்!) என் மனைவி கரு நிறமுடைய குழந்தை பெற்றுள்ளார்; ஆகையால் அது என் (மூலம் உண்டான) குழந்தையாக இல்லை என்று மறுக்கிறேன்!

பொருளடக்கம்

நபீ : உங்களிடம் ஒட்டகம் உள்ளதா?

கிராம சஹாபி : ஆம்!

நபீ : அவைகளின் நிறம் என்ன?

கிராம சஹாபி : சிவப்பு!

நபீ : அவைகளில் சாம்பல் நிறமுள்ளவை உண்டா?

கிராம சஹாபி : நிச்சயமாக அவைகளில் சாம்பல் நிறமுடையவையும் உண்டு.

நபீ : எப்படி அவைகளுக்கு அந்த நிறம் வந்தது?

கிராம சஹாபி : அது அதன் பூர்வீகம் அதை வெளியில் கொண்டு வந்து இருக்கலாம். அது (காளையின் மூலம்) கழற்றிய வியர்வை.

நபீ : அப்படியானால் இதுவும் பூர்வீக வமிஷத்தின் தொடர்பாக இருக்கலாம் என்று கூறி, அவர் தன் குழந்தை இல்லை என்று கூறியதை ஏற்க மறுத்து விட்டார்கள்.

நூல் : புகாரீ—முஸ்லிம்

இந்த ஹதீஸில்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு சஹாபியின் கூற்றை "ஒட்டகத்தின் நிறத்தை ஒப்பிட்டு (குழந்தை)மனிதனுக்கு தீர்ப்புச் செய்தார்கள்.

(நூல் : ஹகீகத் பிக்ஹு)

சஹாபாக்களின் கியாஸ்

ஹழ்ரத் அம்ருப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்;

தாதுத்ஸலாஸிலில் நடந்த யுத்தத்திற்குச் சென்றபோது கடினமான குளிர் இரவில் எனக்குப் பெருந்துடக்கு ஏற்பட்டு விட்டது. குளித்தால் என் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று

கருதி தயம்மும் செய்து என் தோழர்களுக்கு சுப்ஹு தொழ வைத்தேன். (யுத்தம் முடிந்து) திரும்பியபின் நபீஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (மற்ற நபித் தோழர்கள்) என்விஷயத்தை முறையிட்டார்கள்.

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யா அம்ரு! நீங்கள் பெருந்துடக்குள்ளவராக உங்கள் தோழர் களுக்கு தொழ வைத்தீர்களா? என்று கேட்டார்கள், யா ரஸூலல்லாஹ்! அல்லாஹு தஆலா கூறிய உங்களில் ஒருவருக்கொருவர் (சண்டையிட்டு) உங்களின் ஆத்மாக் களை கொல்ல வேண்டாம். நிச்சயமாக, அல்லாஹ் உங்கள் மீது மிக்க அன்புடையோனாக இருக்கின்றான் (4-29) என்ற வசனத்தை எண்ணிப்பார்த்தேன். ஆகையால் (கடும்குளிரில் குளிப்பதால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்று பயந்து) தயம்மும் செய்து தொழுதேன் என்று கூறினேன். நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிரித்துவிட்டு வேறு எதுவும் சொல்லவில்லை.

(நூல் : ஹகீகத் பிக்ஹு, பக் 154)

இந்த நிகழ்ச்சியில்; தண்ணீர் இருந்து அதை பயன் படுத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று பயந்தால் தயம்மும் செய்யலாமா? என்று குர்ஆன் ஹதீஸ் மூலம் அறியப்படவில்லை. ஆகையால் ஹழ்ரத் அம்ருப்னு ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்அல்லாஹு தஆலா கூறிய (உங்களின் ஆத்மாக்களை கொல்ல வேண்டாம் 4-29) ஆயத் தின் மூலம் ''கியாஸ்'' அடிப்படையில் (தங்களுக்கு ஆபத்து ஏற்படாமலிருக்க) தயம்மும் செய்ததை நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முகமலர்ச்சியுடன் ஆமோதித் துள்ளார்கள்.

பொருளடக்கம்

அல்லாஹுதஆலாவின் அருள்

இஸ்லாம், 1. ரிவாயத், 2. திராயத் என்ற இவ்விரண்டின் மீதே தெளிவாக்கப்பட்டுள்ளது.

1. ரிவாயத் என்றால் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிகளை அறிவிப்பாளர்களுடன் சரியான முறையில் மனனம் செய்து அறிவிப்பது.

இத்தகுதியை பெற்றவர்களுக்கு "முஹத்திஸீன்"- "நபிமொழி அறிவிப்பாளர்கள்" என்று கூறப்படும். இவர்கள், இந்த உம்மத்திற்கு நபிமொழிகளை அறிவித்துக் கொடுப்பதில் தங்களின் வாழ்நாளை முழுமையாக அற்பணித்தார்கள்.

2. திராயத் என்றால் நபிமொழிகளிலிருந்து பிக்ஹு, இன்னும் மற்ற அனைத்து சட்டங்களையும் தெளிவு படுத்துதல்.

இத்தகுதியை பெற்றவர்களுக்கு "புகஹாக்கள்" மார்க்க அறிஞர்கள் என்று கூறப்படும். இவர்கள் பிக்ஹு மற்றும் மார்க்கச் சட்டங்களை தெளிவுபடுத்திக் கூறுவதில் தங்களின் வாழ்நாளை முழுமையாக அற்பணித்தார்கள்.

அல்லாஹு தஆலா இவ்விரு சாரரையும் இதற்காகவே படைத்து;இந்த உம்மத்திற்கு மிகப் பெரிய அருள் புரிந்தான். இவர்களுக்குப்பின் இவர்களைப் போன்றவர்கள் உலகில் யாருமில்லை என்பதே இதற்கு ஆதாரமாகும்.

1 முஹத்திஸீன், 2. புகஹாக்கள் இவ்விருசாராரின் மீது இந்த உம்மத் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது. ஏனெனில் இவர்களின் மூலம்தான் இஸ்லாம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஃபுகஹாக்களின் சிறப்பு

அல்லாஹு தஆலா கூறுகின்றான்; ஒவ்வொரு கல்வி மானுக்கும் மேலானதொரு கல்விமான் (இருந்தே) இருக்கிறான். (ஆனால், நாமோ யாவரையும் விட மேலான கல்வி மான்) (12-76)

ஒரு பெண்மணி (ஹதீஸ்களை அறிவிக்கக்கூடிய) முஹத்திஸீன்களிடம், (மாதத்) தீட்டு உடைய பெண் "மய்யித்" குளிப்பாட்டலாமா? என்று வினவினார். அவர்களால் அதற்குப் பதில் கூறமுடியாமல் (பள்ளியின்) மற்றொரு இடத்தில் அமர்ந்திருந்த புகஹாக் (பிக்ஹு சட்டங்களை உருவாக்கக்கூடிய அறிஞர்)களிடம் சென்று வினவுங்கள் என்று கூறினார்கள்.

புகஹாக்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்த அறிஞர் ஹழ்ரத் அபூதவ்ர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மாதத்தீட்டு உடைய பெண் மய்யித் குளிப்பாட்டலாம் என்று கூறினார்கள்.

இதைச் செவியுற்ற முஹத்தீஸீன்கள், ஹழ்ரத் அபூதவ்ர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம்; நீங்கள் இந்த பதிலை எதன் அடிப்படையில் கூறினீர்கள்? என்று வினவியபோது?

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் "முஸல்லா பாய்" எடுத்துக் கேட்டார்கள். நான் (மாதத்) தீட்டுடையவராக இருக்கிறேன் என்றேன், உனக்கு ஏற்பட்ட தீட்டு உன்கையில் இல்லையே! என்று கூறினார்கள். (நூல் : முஸ்லிம்) நீங்கள் எங்களுக்கு

அறிவித்துத் தந்த இந்த ஹதீஸிலிருந்தே அந்த பதிலை கூறினேன், என்றார்கள்.

தீட்டால் கரங்கள் அசுத்தமாகுவதில்லை. தொழுவதற்கு பயன்படக்கூடிய முஸல்லாபாயை தீட்டுடையவர் எடுக்கலாம் என்று தெளிவான ஹதீஸ் இருக்கின்ற காரணத்தால் இந்த நபிமொழியை ஆய்வு செய்த புகஹாக்கள்; தீட்டுடைய பெண் மய்யித் குளிப்பாட்டலாம் என்று கூறினார்கள்.

இச்சம்பவத்திலிருந்து முஹத்திஸீன்கள் நபிமொழிகளை அறிவிப்பதில் மிகத் தேர்ந்தவர்கள். ஆனால் அதிலுள்ள பிக்ஹு சட்டங்களை புகஹாக்களாலயே அறிய முடிகிறது.

(நூல் : ஹகீதத் பிக்ஹு)

ஹழ்ரத் அஃமஷ் : ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் பிக்ஹு சட்டங்களைப்பற்றி வினவும்போது சரியான பதில் கூறுவார்கள். இப்பதிலை எதிலிருந்து கூறுகின்றீர்கள்? என்று கேட்டதற்கு; நீங்கள்தான் எங்களுக்கு ஹழ்ரத் நக்யி மூலம் இந்த ஹதீஸ்....ஹழ்ரத் ஷுஃபா மூலம் இந்த ஹதீஸ்...அறிவித்து தந்தீர்களே! அதன் அடிப்படையில் தான், என்றுகூறியபோது, ஹழ்ரத் அஃமஷ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; புகஹாக்கள் கூட்டத்தினர்களே! நாங்கள் பறவைகள், நீங்கள் வேட்டையாடுபவர்கள் என்று கூறினார்கள். மற்றொரு தடவை; நாங்கள் மருந்து(க்கடை) உடையவர்கள். நீங்கள் மருந்துகள் எதற்கு உரியது என்று தெளிவுபடுத்தக் கூடிய வைத்தியர்கள், என்று கூறினார்கள்.

(நூல் : பதாவா ஹதீதிய்யா, ஹகீகத் பிக்ஹு)

இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் சகோதரியின் இரண்டு மகனார்களிடம், நீங்கள்

இருவரும் ஹதீஸ்களை தேடி அறிந்து கொள்வதில் மிகவும் பிரியமுள்ளவர்களாக காண்கின்றேன்! என்று கூறியபோது அவ்விருவரும் ஆம்! என்றனர் நீங்கள் இருவரும் ஹதீஸ் மூலம் பிரயோஜனமடையவும், அல்லாஹு தஆலா அதன் மூலம் மற்றவர்களுக்குபிரயோஜனமடைய வைக்க வேண்டும் என்று நீங்கள் பிரியப்படுவீர்களேயானால் இதை குறைத்துக் கொண்டு பிக்ஹு சட்டங்களை தெளிவாக அறிந்து கொள் வதில் சிறந்து விளங்குங்கள் என்று கூறினார்கள்.

இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், ஹதீஸுக்கு சரியான விளக்கம் புகஹாக்கள் மூலம்தான் அறிய முடியும் என்று கூறினார்கள்.

(நூல் : பதாவா ஹதீதிய்யா)

ஹழ்ரத் இப்னு அப்துல்பிர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; ஹழ்ரத்அஃமஷ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹஜ் செய்வதற்காகச் சென்றார்கள். "ஹீரத்" என்ற இடம் வந்தபோது, ஹழ்ரத் அலீ இப்னு மஷ்ஹத் ரஹ்மதுல்லாஹ அலைஹி அவர்களிடம் "நீங்கள் அபூஹனீபா (ரஹ்மதுல்லாஹ அலைஹி) அவர்களிடம் சென்று ஹஜ்ஜில் நாம் செய்யவேண்டிய (அமல்) கடமை களைப்பற்றிஎழுதி வாங்கி வாருங்கள்" என்றுகூறினார்கள்.

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; பிக்ஹுவை மனனம் செய்தவரின் (விலை) தகுதி மிக உயர்ந்தது. ஹதீஸை கற்றவரின் ஆதாரம் மிக வலுவுள்ளது.

(நூல் : பதாவா ஹதீதிய்யா)

நம்பிக்கையாளர்களே மத்ஹபைப் பின்பற்றுவார்கள்

இந்த உம்மத் ஷரீஅத்தை விளங்கிக் கொள்வதில் முன் உண்டான நல்லோர்கள் மீது முழு நம்பிக்கைவைத்துள்ளது. தாபியீன்கள் சஹாபாக்கள் மீது முழு நம்பிக்கை வைத்து அவர்களின் கூற்றை நம்பினார்கள். தாபியீன்களுக்குப் பின் னுள்ள தபஉத்தாபியீன், தாபியீன்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள். இதுபோன்று ஒவ்வொரு காலத்திலும் உண்டான உலமாக்கள் அவர்களுக்கு முன் வாழ்ந்த உல மாக்கள் மீது நம்பிக்கை கொண்டு அவர்களின் நடைமுறை களை பின்பற்றினார்கள்,

இதை மனிதனின் அறிவு சரி என்றே ஏற்றுக்கொள் கிறது. ஏனென்றால் ஷரீஅத் 1, நக்ல் –முன்னோர்களில் நம்பிக்கையுள்ளோர்கள் மூலம் அறிவிக்கப்படுதல். 2, இஸ் தின்பாத்- ஆய்வு செய்தல். இவ்விரண்டின் மூலம் தான் அறிந்து கொள்ளப்பட்டது.

நான்கு இமாம்களே தகுதியானவர்கள்

1. இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி.
2. இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி.
3. இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ் ஷாபியீ ரஹ்ம துல்லாஹி அலைஹி.
4. இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி.

பொருளடக்கம்

குர்ஆன், ஹதீஸை ஆய்வு செய்யக்கூடிய உலமாக்கள் அதிகமானோர் இருந்தாலும் கூட இன்று உலகம் பூராவும் நான்கு மத்ஹபுகளை மட்டுமே முஸ்லிம்கள் பின்பற்றுகின்றனர். இது அல்லாஹு தஆலாவின் நாட்டம் என்று கூட கூறலாம்.

மேலும் இந்த நான்கு இமாம்கள் மட்டுமே பின்பற்றப்படுவதற்குத் தகுதியானவர்கள், ஏனென்றால் அவர்கள் குர்ஆன். ஹதீஸ், சஹாபாக்களின் தீர்ப்புகள் அடிப்படையில் தீர்க்கமான முறையில் ஆராய்ந்து அதிகமான சட்டங்களை உருவாக்கினார்கள்: அதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். என் பக்கம் திரும்பக் கூடியவர்களின் வழியை நீ பின்பற்றி நடந்து கொள் (31—15) என்ற இறைவசனத்தின் அடிப்படையில் வாழ்ந்தார்கள். ஆகையால் தான், இந்த நான்கு இமாம்கள் காலத்தில் வாழ்ந்த உலமாக்களும், பின்னுள்ள உலமாக்களும் இந்த இமாம்களைச் சிறப்பித்துக் கூறுகின்றார்கள்; இவர்கள் உருவாக்கிய சட்டங்களே சரியானவை என்றும் கூறுகின்றனர்.

மேலும் பல நூறு ஆண்டு காலமாக தொடராக அனைத்து இஸ்லாமிய மக்களும் உலமாக்களும் இந்த நான்கு இமாம்கள்-மத்ஹபுகள் அடிப்படையிலே தான் ஷரீஅத்தை பின்பற்றுகின்றனர். ஆகையால் கண்டிப்பாக இந்த நான்கு மத்ஹபுகளை பின்பற்றுவதாலே நேர்வழி அடைய முடியும்.

இமாம்களுக்கு முந்தைய நிலைமை

நான்கு இமாம்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது தக்லீத் அவசியமில்லாதிருந்தது. ஏனெனில்

பொருளடக்கம்

அவர்கள் நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், இன்னும் சஹாபாக்களின் பொற்காலத்தில் வாழ்ந்தார்கள். அனைவரும் மார்க்கத்தின் அனைத்து சட்டதிட்டங்களையும் அறிந்து இருந்தனர். ஏதாவது ஒன்று தெரியாவிட்டால் அதைத் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவார்கள்.

ஆனால் இவர்களின் காலத்திற்குப்பின் நிலைமை மாறியது. மார்க்கத்தை அறிய முற்படுவோரின் எண்ணிக்கை குறைந்தது. காலம் செல்லச் செல்ல மார்க்கத்தின் அவசியமானவைகளையே அறியாத அறிவிலியானார்கள். ஆகையால் தான் தக்லீத் அவசியமாக்கப்பட்டது.

நான்கு இமாம்களையும் பின்பற்றினால் என்ன?

மஸாயில்கள்-சட்டங்கள் இருவகைப்படும்,

1, முத்த பFக் அலைஹி. அதாவது நான்கு இமாம்களும் ஒத்துக்கூரியவை. 2, இக்திலாஃப் : நான்கு இமாம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு உள்ளவை.

முதல் வகையில் யாரையும் பின்பற்றலாம். இரண்டாவது வகையில் யாருக்கு எந்த இமாமின் கூற்று சரி என்று படுகிறதோ அதில் அவர்களைப் பின்பற்ற வேண்டும். ஆனால் ஒரே நேரத்தில் நான்கு இமாம்களையும் பின்பற்றுவது கூடாது. அதனால் ஷைத்தானிய்யத்தனமான எண்ணம் ஏற்படுமே தவிர அல்லாஹு தஆலாவுக்காக அமல் செய்கிறோம் என்ற தன்மை உண்டாகாது. எனவே நான்கு இமாம்களில் ஒருவரின் கூற்றுப்படியே இஸ்லாத்தைப் பின்பற்ற வேண்டும்.

ஒரே நேரத்தில் இரண்டு இமாம் களைப் பின்பற்றுவதன் ஆபத்து

ஒரே நேரத்தில் இரண்டு இமாம்களைப் பின்பற்றுவதி னால் மனோ இச்சையைப் பின்பற்றும் நிலை ஏற்படும்.

உதாரணமாக : தொழக்கூடிய ஒருவருக்கு இரத்தம் வெளியானால் நான் ஷாபியீ மத்ஹபு, ஆகையால் என் ஒளு முறியவில்லை என்று கூறுவார். ஆனால் அவர் ஒரு பெண்ணைத் தொட்டு விட்டால் நான் ஹனபீ மத்ஹபு ஆகையால் என் ஒளு முறியவில்லை என்று கூறுவார்.

இப்னு தைமிய்யா அவர்கள் கூறுகின்றார்கள்; ஒரே நேரத்தில், கூடும்—கூடாது என்று கூறக்கூடிய இருமத்ஹபு களைப் பின்பற்றுவது ஏகோபித்த முடிவின்படி கூடாது.

பக்கத்து வீட்டின் உரிமை

ஒரு மனிதன் இரண்டு மத்ஹபுகளை பின்பற்றுவதி னால் ஏற்படும் அநியாயம். உதாரணமாக: பக்கத்து வீட்டு உரிமை உண்டு என்று வாதிடுபவன் அந்த வீடு விற்கப்படும் போது நான் ஹனபீ மத்ஹபு ஆகையால் எனக்கே விற்க வேண்டும் என்று கூறுகின்றான். ஆனால் இவன் விற்கும் போது நான் ஷாபியீ மத்ஹபு என்று கூறி பக்கத்து வீட்டுக் காரனுக்கு அந்த உரிமையை மறுத்து, அடுத்தவனுக்கு விற்கிறான் ஆகையால் இந்தச் செயல் ஏகோபித்த முடிவின் படி கூடாது.

திருமணம்

ஒரு மனிதன் இரண்டு மத்ஹபுகளை பின்பற்றுவதி னால் ஏற்படும் மோசடி. உதாரணமாக: "பாலிக் வலி"

கொண்டு நடந்த திருமணம். இவ்வாறு திருமணம் செய்த ஒருவன் நான் ஹனபீ, மத்ஹப். ஆகையால் என் திருமணம் கூடும் என்றான். பின்பு இவன் மனைவியை (3) முத்தலாக் விட்டுவிட்டான். பின்பு அவளை தன் மனைவியாக்க நாடு கிறான். நான் ஷாபியீ மத்ஹப். இப்பொழுதுதான் அவளை திருமணம் செய்யப் போகிறேன். ஏனென்றால் "பாலிக் வலீ" கொண்டு நடந்த (என் முதல்) திருமணம் திருமணமே அல்ல. ஆகையால், நான் தலாக் என்று கூறியதும் தலாக் அல்ல என்று கூறுகின்றான்.

எச்சரிக்கை

மார்க்கத்தை அவரவர் எப்படியும் பின்பற்றலாம் என்று கூறுவோர் மேற்கூறிய 1, ஆபத்தான, 2, அநியாய மான, 3, மோசடியான வழிகளையே நாடுகின்றனர்.

இமாம்களுக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதேன்?

நான்கு இமாம்களும் இஸ்லாத்தின் அசலான சட்டங்கள் மீது கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. ஏனென்றால் இவைகள் உறுதியான ஆதாரங்களைக் கொண்டு உறுதி படுத்தப்பட்டுள்ளதால் நான்கு இமாம்களும் ஒரே கருத்தைக் கொண்டனர். ஆனால் சில சட்டங்களில் உறுதியான ஆதாரம் இல்லாததால் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. மேலும் சிறு சிறு சட்டங்களில் கருத்து வேறுபாடு ஏற்படுவதை தவிர்க்கவும் முடியாது; இவைகளில் மிக இலகுவான முறையில் கருத்து மாற்றம் ஏற்பட்டு விடும். இப்பிரச்சினை எக்காரணம் கொண்டும் அசல் சட்டங் களுக்கு முரணாக இருக்காது.

நான்கு இமாம்கள் சிறுசிறு சட்டங்களில் ஒவ்வொரு வரும் தங்களின் தீர்க்கமான ஆய்வின்படி குர்ஆன், ஹதீஸ்,

பொருளடக்கம்

சஹாபாக்களின் தீர்ப்புகளின் அடிப்படையில் தங்களுக்கு எது சரி என்று பட்டதோ அதை உறுதிபடுத்திக் கூறினார்கள். அவர்களின் முயற்சி சரியாக இருந்தால் அதனால் அவர்களுக்கு இரு நன்மைகள் உண்டு. தவறாக இருந்தால் ஒரு நன்மை உண்டு.

மேலும் சிறு சட்டங்களில் கருத்துவேறுபாடு இந்த உம்மத்திற்கு அருட்கொடையாகும். இந்த உம்மத் இது போன்ற சட்டங்களில் தங்களுக்கு இலகுவானதை பின்பற்ற முடியும். மேலும் நிர்ப்பந்தமான நேரத்தில் மற்ற இமாம் கூறிய கருத்தையும் பின்பற்ற முடியும். இந்த சிறு சிறு சட்டங்களும் ஒரே மாதிரியாக இருந்தால் இந்த உம்மத் அவைகளை ஏற்று நடப்பதற்கு மிகச் சிரமத்திற்கு உட்பட்டிருக்கும்.

(அல்லாஹுூம் மஃபிFர் அஇம்மதல் முஸ்லிமீன்.
அல்லாஹுூம் மஜ்அல் குபூரஹுூம் ரவ்ழதம்
மிர் ரியாழில் ஜினான்)

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் யார்?

குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉஸ் ஸஹாபா—சஹாபாக்களின் ஒருமித்த கருத்து, இவர்களுக்குப்பின் உலமாக்கள் எந்த இமாம்களின் கூற்று சரியானவை—ஆதாரமானவை என்று தேர்ந்தெடுத்தார்களோ அவர்களின் வழிமுறைகளையும் ஆதாரமாகக் கொள்பவருக்கே "அஹ்ல சுன்னத் வல் ஜமாஅத்" என்று கூறப்படும்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹுூ அன்ஹுூ அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹுூ அலைஹி வஸல்லம் அவர்கள், பனீ இஸ்ராயீல் 72 கூட்டமாக பிரிந்தனர், எனது உம்மத்தினர் 73 கூட்டமாக பிரிவர். இவர்களில் ஒரு கூட்டத்தினரே சுவர்க்கத்திற்குறியவர்கள், மற்ற அனைத்து பிரிவினரும் நரகத்திற்குறியவர்கள்.

பொருளடக்கம்

என்று கூறியபோது யா ரஸூலல்லாஹ்! சுவர்க்கத்திற்குரிய அக்கூட்டத்தினர் யார்? என்று அருமை சஹாபாக்கள் வினவிய போது "மா அன அலைஹி வ அஸ்ஹாபீ"— நானும் எனது சஹாபாக்களும்எதன்மீது இருக்கின்றோமோ அக்கூட்டத்தினர், என்று கூறினார்கள்.

மிஷ்காத் : பக் 30.

மா அன அலைஹி வ அஸ்ஹாபீ, நானும் என் சஹாபாக்களும் எதன்மீது இருக்கின்றோமோ அதனை பின் பற்றுபவர்களே வெற்றியடைந்த—சுவர்க்கத் திற் குச் செல்லக்கூடியவர்கள், என்று நபியவர்கள் கூறியிருக்கும் போது சஹாபாக்களை மறுப்பவர்கள்; அவர்களின் மீது அவதூறு கூறுபவர்கள்;அவர்களின் கூற்றை மறுப்பவர்கள் யார் என்று தெளிவாக அறியப்பட்டுள்ளது. இவர்களின் நிலை மிகவும் பரிதாபமாகத் தான் முடியும். இவர்களில் முன்னோர்களின் பரிதாபமான முடிவுகள் சரித்திர நூல் களின் வரையப்பட்டுள்ளது.

அஹ்ல ஹதீஸ் கூட்டத்தினரின் பொய்

குர்ஆன், ஹதீஸையே பின்பற்ற வேண்டும். என்று ஒரு கூட்டம் அஹ்ல ஹதீஸ் என்ற பெயரில் குழப்பம் விளைவிக் கிறது. இவர்கள் எங்கே குர்ஆன், ஹதீஸைப் பின்பற்று கின்றனர்? நாங்கள் அஹ்ல ஹதீஸ் என்று யாரெல்லாம் கூறுகின்றார்களோ அவர்களை இவர்கள் பின்பற்றுகின் றனர். எவரின் கருத்துகளையும் கேட்கக் கூடாது என்று கூறிய இவர்களுக்குச் சொந்தமான அறிவு—மூளையே கிடையாது. இவர்களுக்கு முன், நாங்கள் அஹ்ல ஹதீஸ் என்ற பெயரில் உலாவிய கூட்டத்தையும் முன்பு இவை

அஹ்ல ஹதீஸ் அடிப்படையில் எழுதப்பட நூல்கள் என்று உள்ளவைகளையும் இவர்கள் பின்பற்றுகிறார்கள்.

உதாரணமாக :- இறை இல்லங்கள் இறைவனின் வீடுகள் என்று குர்ஆன் கூறுகிறது. ஆனால் இந்த அஹ்ல ஹதீஸ் என்ற பொய்யர்கள் தொழுகையின் நேரம் வந்து விட்டால் எது அஹ்ல ஹதீஸ் பள்ளி என்று அங்குள்ள இவர்களைப் போன்ற குருடர்களால் கூறப்படுகிறதோ அங்குதான் செல்வார்கள். இது தக்லீத்—ஒருவரை பின் பற்றுவது இல்லையா? இவர்கள் முகல்லிதீன்கள்-மற்றவரை பின்பற்றுபவர்கள்! இவர்களின் தவறான கொள்கைக்கு;நாங்கள் யாரையும் பின்பற்றவில்லை என்ற அண்டப்புழுகு—மிகப் பெரிய எடுத்துக் காட்டாகும்.

நாங்கள் ஹதீஸை பின் பற்றுபவர்கள் என்று கூறும் இக்கூட்டம் "என் தோழர்களை பின்பற்றுங்கள்" என்ற ஹதீஸை மறுப்பார்கள். மேலும் சஹாபாக்களின் செயலை ஆதாரமாகக் கொள்ளமாட்டார்கள். ஆனால் இதை அவர்கள் பகிரங்கமாக சொன்னால் மக்கள்! தங்களை "காபிர்" என்று கூறிவிடுவார்களே! என்று பயந்து அதை வெளியில் சொல்லாமல் இருக்கின்றனர்.

தக்லீதை மறுப்பவனின் முடிவு பரிதாபமே!

பிரபலமாக அஹ்லஹதீஸாக(ஆரம்பத்தில்)விளங்கியமௌலானா முஹம்மது ஹுஸைன் பட்டாளவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் 25 ஆண்டுகால அனுபவத்தைக் கூறுகின்றார்கள்; யார் அறிவு—விளக்கமின்றி "நான் முஜ்தஹித்" என்று கூறுவானேயானால்; அல்லது இமாம்கள் கூறிய வழிகளின் மூலம் இஸ்லாத்தைப் பின் பற்றாமல் தன் மனம் போன போக்கில் குர்ஆன் ஹதீஸுக்கு விளக்கம் கூறுவானேயானால் அவன் கடைசியில் இஸ்லாத்திற்கே

சலாம் கூறிவிடுவான். (அதாவது காபிராகி விடுவான்)

(நூல் : இஷாஅதுஸ் ஸுன்னா, பக் 4. பாகம் 1)

முன்னோர்களில் சில அறிஞர்களின் முடிவு மிக பரிதாபமான ஆனதற்கு; அவர்கள் தக்லீதை —மத்ஹபுகளை பின்பற்றுவதை விட்டு விட்டு ஷரீஅத்திற்கு தங்கள் மனம் போன போக்கில் விளக்கம் கூறியதே காரணமாகும்.

உண்மையை ஏற்றுக்கொள்ளும் அஹ்ல ஹதீஸ்களில் சிலர்

மௌலானா அப்துல் மத்தீன் மய்மன் (ஜூனாகட்) அவர்கள் 1982ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் தேதி வெளியிட்டுள்ள தமது "ஹதீதெ கைர்-வ-ஷர்" என்ற நூலின் 17ஆம் பக்கத்தில்:மௌலானா ஹக்கானீ அவர்கள் அஹ்ல ஹதீஸ்கள்மீது எழுப்பியஆறாவது குற்றச்சாட்டுக்கு இப்படி விடையளிக்கிறார்; உஸூலுக்கு மாற்றமில்லாமல் மிகவும் அழகான முறையில் அஹ்ல ஹதீஸ்கள் பிக்ஹுவை ஏற்றுக் கொள்கின்றார்கள். இது எங்கள் அஹ்ல ஹதீஸ் மத்ரஸாவுக்கு வருபவர்களுக்குத் தெரியும்.

இந்த வாசகத்தை நான் (அப்துல் மத்தீன் மய்மன்) எழுதும் போது எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர் மௌலானா அபுல் பயான் ஹம்மாது சாஹிப் (உஸ்தாது பேராசிரியர் ஜாமிஆ தாருஸ்ஸலாம் உமராபாத்) அவர்கள் என்னுடன் அமர்ந்திருந்தார். அன்னார் கூறினார், "அஹ்ல ஹதீஸ்கள் பிக்ஹு (பிக்ஹு சட்டங்களை) ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல; அதைப் படிக்கிறார்கள்; படித்தும் கொடுக்கிறார்கள், என்று கூறினார்.

அஹ்ல ஹதீஸ்களாகிய நாங்கள் குர்ஆன், ஹதீஸுக் குப்பின் தேவை ஏற்படும்போது சங்கைக்குறிய புகஹாக்

பொருளடக்கம்

களின் பத்வா—தீர்ப்புகளின் படியும் அமல் செய்கிறோம்; முஜ்தஹிதீன் (ஆய்வாளர்)களின் ஆய்வையும், அவர்கள் செய்த "இஸ்தின்பாத்" தையும் ஏற்றுக் கொள்கிறோம்.

எனவே அஹ்ல ஹதீஸ் என்ற பெயரில் உள்ள சில நல்லவர்கள் பிக்ஹுவை ஏற்றுக் கொள்வதின் மூலம் தக்லீத்—(பிறரைப்) பின் பற்றுபவர்கள் தான் என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

பிரச்சினைகளின் துவக்கம்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணத்தின் போது முஸ்லிம்கள் இஸ்லாம் மார்க்கத்தின் ஒரேகட்டமைப்பின் கீழ்இருந்தார்கள்.நபியவர்கள்மரணித்த வுடன் கருத்து வேறுபாடு ஆரம்பமானது. ஒரு கூட்டம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணிக்க வில்லை; அல்லாஹு தஆலா ஈஸா நபியை தன் பக்கம் உயர்த்திக் கொண்டது போல் இவர்களையும் தன் பக்கம் உயர்த்திக் கொண்டான், என்றனர்.

இக்கட்டான இவ்வேளையில் ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அல்லாஹு தஆலாவின் 3—144 வசனத்தை ஓதிக்காட்டினார்கள். மேலும் எவர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வணங்கக்கூடியவராக இருந்தால் நிச்சயமாக அவர்கள் இறந்து விட்டார்கள். எவர் அவர்களின் ரப்பை (அல்லாஹ்வை) வணங்கக்கூடியவராக இருந்தால் அவன் உயிருடன் இருக்கின்றான். அவன் மரணிப்பதில்லை. என்பதை உணர்ந்து கொள்ளட்டும், என்று கூறியதும் குழப்பம் நீங்கி அனைவரும் நபியவர்கள் மரணித்து விட்டார்கள். என்று ஏற்றுக் கொண்டனர்.

பின்பு; நபியவர்களை எங்கு நல்லடக்கம் செய்வது என்ற பிரச்சினை ஏற்பட்டது. மக்காவாசிகள், தங்களின் ஊரில் நல்லடக்கம் செய்யவேண்டும். ஏனெனில் அது அவர்களின் பிறந்த ஊர். அங்கு இருக்கும்போதுதான் நபியாக அனுப்பப்பட்டார்கள். அதுவே கிப்லாவாகவும் இருக்கிறது. அங்கேதான் அவர்களின் குரைஷி குலத்தார் இருக்கிறார்கள். மேலும் அவர்களின் பாட்டனார் ஹழ்ரத் நபீ இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கப்ரும் அங்கேதான் உள்ளது. இவ்வாறு கூறி வாதிட்டனர்.

மதீனாவாசிகள்; எங்கள் ஊரில்தான் நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றனர். ஏனெனில் அது அவர்கள் ஹிஜ்ரத் செய்த ஊர்; அவர்களுக்கு உதவி செய்த அன்சாரீகள் வாழும் ஊர். இவ்வாறு கூறி வாதிட்டனர்.

சிலர்; பைத்துல் முகத்தஸ் கொண்டு சென்று அவர்களின் பாட்டனார் நபீ இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கருகில் நல்லடக்கம் செய்ய வேண்டும் என்றனர்.

பிரச்சினை தீராமல் நடந்து கொண்டிருக்கும் போது ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "நிச்சயமாக நபிமார்கள் மரணித்த இடத்திலே நல்லடக்கம் செய்யப்படுவார்கள்" என்ற ஹதீஸை அறிவித்ததும் பிரச்சினை முடிந்தது. நபியவர்கள் மரணித்த இடமான அன்னை ஆயிஷா ரழியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் வீட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அடுத்து தலைமைப் பிரச்சினை ஏற்பட்டது; அன்சாரீகள் அப்பதவி எங்களுக்கே உரியது என்று கூறி ஹழ்ரத் ஸஃது இப்னு உபாதா கஜ்ரஜீ ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் பைஅத் கொடுக்கத் தயாரானார்கள்.

பொருளடக்கம்

தலைமைப்பதவி மக்காவாசிகளான குரைஷிகளுக்கே!உரியது என்று குரைஷிகள் கூறினர்.

"தலைமைப் பதவி குரைஷிகளுக்கே" என்ற நபிமொழி அறிவிக்கப்பட்டதும் அனைவரும் குரைஷிகளின் தலைமையை ஏற்றனர்.

பின்பு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விட்டுச் சென்ற சொத்துப் பிரச்சினை ஏற்பட்டது.

ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்; நபிமார்கள் வாரிஸாக ஆக்கப்பட மாட்டார்கள் என்ற நபி மொழியை அறிவித்ததும் அப்பிரச்சினை விலகியது.

ஜகாத் மறுத்த கூட்டம்

அடுத்து ஜகாத் கொடுக்க மாட்டோம் என்று ஒரு கூட்டம் கிளம்பியது. ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ஜகாத்தை மறுப்போர் மீது போர் தொடுக்க வேண்டும், என்ற முடிவை அனைத்து சஹாபாக்களும் ஏற்றனர்.

அடுத்து மதம் மாறிய ஒருவருக்காக பிரச்சினை உருவானது. மதம் மாறியவர் பயந்து ஷாம் நாட்டுக்கு ஓடினார். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சியின் போதுமீண்டும்இஸ்லாத்தைத்தழுவினார்.ஹழ்ரத் சஃது இப்னு அபீ வகாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் இணைந்து "காதிஸிய்யா" சண்டையில் போரிட்டு, அதற்குப் பின் நடந்த சண்டையில் ஷஹீதானார்.

அடுத்து, தான் நபீ என்று வாதிட்ட முஸைலமதுல் கத்தாப் என்பவனை கொலை செய்யும் பிரச்சினை ஏற்பட்டது. ஆனால் அல்லாஹ்வே இவன் விஷயத்தில் பொறுப்பேற்றது போன்று ஒரு நிகழ்ச்சியில் மாண்டு போனான்.

மேலும் மதம் மாறியவர்களை கொலை செய்யும் பிரச்சினை ஏற்பட்டது. இவர்களின் விஷயத்திலும் அல்லாஹு தஆலா பொறுப்பேற்றுக் கொண்டான்.

அடுத்து ரோம் நாடு, இன்னும் அரபு அல்லாத நாட்டின் மீது தற்காப்புப் போர் தொடுக்கும் நிலை ஏற்பட்டது. உத்தம நபித் தோழர்கள் தூய்மையான இஸ்லாம் மார்க்கத்தின் மீது ஒற்றுமையாக இருந்ததால்,அதனால் அவர்கள் பல நாடுகளை வெற்றி கொண்டார்கள்.

சஹாபாக்கள் சில சட்டங்களில் உட்பிரிவில் கருத்து வேறுபாடு கொண்டார்கள். ஆனால் ஏகத்துவத்தின் அசல் சட்டங்களின் மீது அசையாத, ஒரே அடிப்படையில் ஒற்றுமையாக இருந்தார்கள். ஹழ்ரத் அபூபக்கர், ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா, இவர்களின் ஆட்சியிலும், ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு, அன்ஹு அவர்களின் ஆட்சியின் 6 மாதம் வரை இது நீடித்தது.

பின்பு ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை முஸ்லிம்களில் ஒரு கூட்டம் கொலை செய்தது. அதனால் பெருங்குழப்பம் ஏற்பட்டது.

அடுத்து ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் ஆட்சியில் சிப்FபீFன் யுத்தம்.

சஹாபாக்களின் இறுதி காலத்தில் முஸ்லிம்களில் ''கத்ரிய்யா'' என்ற கூட்டம் உருவாகி பெருங்குழப்பம் ஏற்படுத்தியது. அல்லாஹு தஆலாவுக்கு அடியார்கள், படைப்பினங்களின் செயல்களில் எவ்வித ஆற்றலுமில்லை. இன்னும் அல்லாஹு தஆலா வைப்பற்றி அர்த்தமற்ற பல விஷயங்களைக் கூறினர்,

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர், ஹழ்ரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ், ஹழ்ரத் அபூஹுரைரா, ஹழ்ரத்

பொருளடக்கம்

இப்னு அப்பாஸ், ஹழ்ரத் அனஸ், ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அபூ அவ்பாFA, ஹழ்ரத் உத்பா இப்னு ஆமிர் ஜஹ்னீ, (ரழியல்லாஹு தஆலா அன்ஹும்) இவர்களைப் போன்ற நபித் தோழர்கள் "கத்ரிய்யா:" கொள்கையுடைய வர்களுக்கு சலாம் கூறக்கூடாது; அவர்களின் ஜனாஸாத் தொழுகையில் கலந்து கொள்ளக்கூடாது; அவர்கள் நோய் வாய்ப்பட்டால் நலம் விசாரிக்கக்கூடாது, என்று அவர் களை ஒதுக்கி வைத்தனர்.

பின்பு கவாரிஜ் கூட்டத்தின் குழப்பம். இக்கூட்டம் இருபது பிரிவாக பிரிந்து ஒருகூட்டம் மற்ற கூட்டத்தினரை காபிர் என்று கூறியது.

அடுத்து ஹழ்ரத் ஹஸன் பஸரீ ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹி அவர்களின் சபையில் இருவர் "கத்ரிய்யா" கொள்கைக்கு ஆதரவாக செயல்பட்டனர். ஆகையால் அவ்விருவர்களும் இங்கு வரக்கூடாது என்று விரட்டி விட் டார்கள். பஸராவில் ஒரு பள்ளியின் ஓரமாக அவ்விருவரும் தங்கிக் கொண்டனர். இவர்களைப் பின்பற்றியோர் "முஃதஜிலா" என்ற பெயரில் ஒரு பிரிவாக உறுவெடுத் தனர். இந்த உம்மத்திலுள்ள பாவியானவன் முஃமினும் அல்ல, காபிரும் அல்ல என்று அவர்களின் கொள்கை.

ஆகவே, இப்படியாக ஒவ்வொரு காலத்திலும் குழப்ப வாதிகள் தோன்றினர். அப்போதுள்ள நல்லோர்கள் அவர் களை அடக்கி ஒடுக்கினார்கள். இவ்வாறே இறுதிநாள் வரை தத்தம் மனம் போன போக்கில் கறித்திரியும் கூட்டத் தினர் உண்டாவார்கள். அவர்கள் சமுதாய சான்றோர்கள்; ஆன்றோர்களினால் அடக்கி ஒடுக்கப்படுவார்கள்.

இஸ்லாமிய ஆட்சிப் பரப்பு விரிவடைதல்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் பல நாடுகள் வெற்றி பெறத்துவங்கியது. ஹழ்ரத்

பொருளடக்கம்

அபூபக்கர், ஹழ்ரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) இரு கலிஃபாக்களின் ஆட்சி காலத்தில் பல நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டதால் இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்தது.

ஹிஜ்ரீ 17ஆம் ஆண்டு ஷாம், ஈராக் நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டது.

ஹிஜ்ரீ 20ஆம் ஆண்டு மிஸ்ர் நாடு வெற்றிக் கொள்ளப் பட்டது. ஹிஜ்ரீ 21ம் ஆண்டு பாரசீக நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டது. மேற்கு, கிழக்கு நான்கு திசைகளிலு முள்ள பல நாடுகளின் மீது வெற்றி தொடர்ந்தது. அவைகளெல்லாம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டன.

பல நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டு இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து விட்டதால். அங்கெல்லாம் பல சஹா பாக்கள் சென்று விட்டார்கள். செல்ல வேண்டிய அவசிய மும் ஏற்பட்டது. அந்த சஹாபாக்களில் அறிவு ஞானம் படைத்தவர்கள், நபி மொழிகளை மனனம் செய்தவர்கள் குர்ஆன், நபிமொழி அடிப்படையில் ஆய்வு செய்யும் ஆற்றல் பெற்ற அறிஞர் பெருமக்களும் இருந்தனர். இவர்கள் அந்த நாடுகளில் அரபு பிரதேசங்களில் பழக்கத்தில் இல்லாத பல புதிய பிரச்சினைகளை எதிர் கொண்டனர். ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் குணங்கள், நடைமுறை, செயல் முறை மாறுபட்டிருப்பதைக் காணலாம்.

பாரசீக நாட்டில் அவர்களுக்கென்று தனிப்பட்ட பழக் கம் இருந்தது. அதைப் போன்று மிஸ்ரு, ஷாம் நாடுகளில் "ரூமானீ" நாட்டின் பழக்க வழக்கங்கள் இருந்தன. இவை அரபு பிரதேசங்களின் பழக்க வழக்கங்களுக்கு வெகு தொலைவில் இருந்தது. ஆகையால் சஹாபாக்களுக்கு இப்பேற்பட்ட பல பிரச்சினைகளுக்கு குர்ஆன், நபி மொழி மூலம் நேரடி விளக்கம் பெற முடியாததால் குர்ஆன்,

பொருளடக்கம்

நபிமொழி அடிப்படையில் இஜ்திஹாத்- ஆய்வு செய்யும் அவசிய நிலை ஏற்பட்டது. ஆகவே புதிதாக வெற்றி கொள்ளப்பட்ட அனைத்து நாடுகளிலும் உத்தம சஹாபாக்கள் மூலமாகவே இஸ்லாத்தின் விளக்கங்களும் பிக்ஹு சட்டங்களும் பரவியது.

மதீனா அறிஞர்கள்

மதீனாவில் பெரும் அறிவு - ஞானம் படைத்த சஹாபாக்கள்

1. ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்
2. ,, அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ,,
3. ,, ஜைது இப்னு தாபித் ,,
4. ,, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், ,,
5. ,, அப்துல்லாஹ் இப்னு உமர் ,,

இன்னும் இவர்கள் அல்லாத அறிவு ஞானம் பெற்ற பல சஹாபாக்கள் மதீனாவில் வாழ்ந்தார்கள். ஆனாலும் மேற் கூறப்பட்ட சஹாபாக்களில் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர், ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் (ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இவ்விருவர்களின் மாணவர்கள் மூலம் அறிவு-ஞானம் பரவியது

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு தஆலாஅன்ஹுமா அவர்கள் இறையச்சமுடையவராகவும் நபி மொழி கேட்டு அதை அதனுடைய வாக்கியங்கள் பிசகாமல் மனனம் செய்யும் ஆற்றல் பெற்றவர்களாகவும் இருந்தார்கள்,

ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் ரழியல்லாஹு அன்ஹு அறிவு—ஞானத்தில் விசாலமான விளக்கம் பெற்றவர்கள்; குர்ஆன், நபி மொழி அடிப்படையில் ஆய்வு செய்து சட்டங்களை உருவாக்கக்கூடிய திறமையான அறிவுடையவர்கள். கலிபாக்கள் ஹழ்ரத் உமர், ஹழ்ரத் உத்மான் (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் மார்க்கத்தீர்ப்பு சபைகளிலும், குர்ஆன் ஓதக்கூடிய சபைகளிலும் இவ்விரு சஹாபாக்களையே முன்னிறுத்தி தீர்ப்புக் கூறுவார்கள்.

ஹழ்ரத் கபீஸா ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள், ஹழ்ரத் ஜைது இப்னு தாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மதினாவில் கலிபாக்கள் ஹழ்ரத் உமர், ஹழ்ரத் உத்மான், ஹழ்ரத் அலீ (ரழியல்லாஹு) ஆகியோரின் ஆட்சி காலத்தில் தீர்ப்புவழங்குவது கிராஅத் ஓதுவது, சட்டங்கள் சம்பந்தப்பட்டது. இவைகளின் தலைமைப் பொறுப்பாளராக இருந்தார்கள், இவர்களுக்குப்பின் (ஹழ்ரத் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சி பொறுப்பேற்கும் வரை) 5 ஆண்டுகள் அப்பொறுப்பில் இருந்தார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அன்னாரை அதன் மீது அமரவைப்பார்கள். இவ்வாறு உலமாக்களுக்கும் பெரியோர்களுக்கும் மறியாதை செய்ய வேண்டும் என்றும் கூறுவார்கள்.

ஹிஜ்ரீ 45 ஆம் ஆண்டு அல்லாஹு தஆலாவின் நாட்டப்படி மரணமடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

பொருளடக்கம்

தாபியீன் உலமாக்கள்

நபித் தோழர்களைப் பார்த்தவர்களுக்கு "தாபிஃ" என்று கூறப்படும். "தாபிஃ" உடைய பன்மை "தாபியீன்" என்பதாகும்.

சஹாபாக்களிடமிருந்த அறிவு—ஞானம் அவர்களின் காலத்திற்குப்பின் தாபியீன்களிடம் காணப்பட்டது.

அறிவு-ஞானத்தில் சிறந்து விளங்கிய தாபியீன்களில் மதீனாவின் உலமாக்கள்

1, ஹழ்ரத் சயீது இப்னு முஸஸ்யிப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2. ,, உர்வது இப்னுஜுபைர் ,,

3. ,, காஸிம் இப்னு முஹம்மது ,,

4. ,, காரிஜது இப்னு ஜைது ,,

5. ,, அபூபக்கர் இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு ஹாரித் இப்னு ஹிஷாம் ரஹ்மதுல்லாஹி அலைஹிம்

6. ,, சுலைமான் இப்னு யஸார் ரஹ்மதுல்லாலி தஆலா அலைஹி

7. ,, உபைதுல்லாஹ்இப்னு அப்துல்லாஹ்இப்னு உத்பா இப்னுமஸ்ஊத்ரஹ்மதுல்லாஹி தஆலாஅலைஹிம்

8. ,, ஹழ்ரத் சாலிம்இப்னு அப்துல்லாஹ்இப்னு உமர்

பொருளடக்கம்

9. ,, ஹழ்ரத் அபூசல்மா இப்னு அப்துர் ரஹ்மான்.
10. ,, ஹழ்ரத் அடான் இப்னு உத்மான்.
11. ,, ஹழ்ரத் இப்னு ஷிஹாப்
12. ,, ஹழ்ரத் அபூஜினாத்,
13. ,, ஹழ்ரத் ரபீஆ
14. ,, ஹழ்ரத் மாலிக் இப்னு அனஸ். இன்னும் அவர்களின் தோழர்கள்.
15. ,, ஹழ்ரத் அப்துல் அஜீஸ் இப்னு அபூசல்மா
16, , ஹழ்ரத் இப்னு அபூ துவைப் ரஹ்மதுல் லாஹி அலைஹிம்.

இவர்களில்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தீர்ப்பையும், கலீபாக்கள் ஹழ்ரத் அபூபக்கர் ஹழ்ரத் உமர், ஹழ்ரத் உத்மான், ஹழ்ரத் ஜைது இப்னு தாபித்(ரழியல்லாஹு அன்ஹும்)ஆகியோர்களின் மார்க்கத் தீர்ப்புகளை நன்கறிந்தவர் ஹழ்ரத்சயீது இப்னு முஸய்யிப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களாக இருக்கும். மேலும் இவர்கள்ஹழ்ரத் ஜைது ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மாணவராகவும் இருந்ததால் மற்றவர்களின் கருத்துக்களை விட,தங்கள் உஸ்தாதின் கருத்தை சிறப்பித்துக் கூறுவார்கள்.

மேற்கூறப்பட்ட அறிஞர்களிடமிருந்துதான் மதீனா வின் புFகஹாக்கள் (மார்க்க அறிஞர்கள்) அதிகமானோர் சட்டங்களை கையாண்டனர். இவர்களில் ஹழ்ரத் அபூ பக்கர் இப்னு முஹம்மது இப்னு அம்ரு இப்னு ஹஜம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மிகவும் பிரபலமான வர்கள்.இவர்கள், இஸ்லாமிய நூல்களை கோர்வை செய்த உலமாக்களில் முன்னனியில் உள்ளவர்கள்.

பொருளடக்கம்

புனித மக்கா அறிஞர்கள்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு ரமழான் மாதம் மக்காவை வெற்றி கண்டபின் மக்காவின் தங்கள் பிரதிநிதியாக ஹழ்ரத் முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைநியமித்தார்கள். அவர்கள், மக்காவாசிகளுக்கு குர்ஆன் சட்டங்கள், ஹலால் ஹராம், இவைகளைக் கற்றுக் கொடுத்தார்கள். குர்ஆன் ஓதுவது, ஹலால், ஹராம், பிக்ஹு சட்டங்கள் இவைகளை நன்கு அறிந்த சஹாபாக்களில் இவர்களும் ஒருவர். மேலும் அன்னார் மூலம் ஹழ்ரத் உமர், ஹழ்ரத் இப்னு அப்பாஸ், ஹழ்ரத் இப்னு உமர், (ரழியல்லாஹு அன்ஹும்)ஆகியோர் நபி மொழிகளை அறிவித்துள்ளனர்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹழ்ரத் முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை யமன் நாட்டிற்கு கவர்னராக நியமித்தார்கள். ஹழ்ரத் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் மதீனாவில் மார்க்கத்தீர்ப்பு வழங்குவதற்காக நியமிக்கபட்டார்கள். மக்களுக்கு பிக்ஹு சட்டங்கலளைக் கற்றுக் கொடுத்தார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்கள் கடைசி காலத்தில் மக்களுக்கு தப்ஸீர், நபிமொழி பிக்ஹு சட்டங்களை மஸ்ஜிது ஹராமில் வைத்து கற்றுக் கொடுத்தார்கள். மார்க்கக்கல்வியின் அனைத்துத் துறைகளிலும் சிறந்தவராகவும் பிக்ஹு சட்டங்களை நன்கு அறிந்தவராகவும் இருந்தார்கள்.

அன்னார் வழங்கிய மார்க்கத் தீர்ப்புகளை ஹழ்ரத் அபூபக்கர் முஹம்மது இப்னு மூஸா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் 20பகுதிகளாகக் கோர்வை செய்தார்கள்.

பொருளடக்கம்

ஹழ்ரத் முஜாஹித் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் விளக்கமான அறிவாற்றல் பெற்றிருந்தார்கள். ஆதலால் அவர்களுக்கு "பஹ்ர்—கல்வியின் கடல்" என்ற சிறப்புப் பெயர் உண்டு.

ஹழ்ரத் உபைதுல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் இப்னு உத்பா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்; நபிமொழியை நன்கு அறிந்தவர்களில் ஹழ்ரத் அப்துல் லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களைப் போன்று வேறு யாரையும் நான் பார்த்ததில்லை.

மேலும் இவர்கள் மூலம், இவர்களின் மாணவர்களின் மூலம் மக்காவில் அறிவு—ஞானம் பரவியது. தாபியீன்கள் அன்னாரின் மூலம் கல்விக் கற்றுபேரறிஞர்களாகத் திகழ்ந்தவர்களில் மிகவும் சிறப்பிற்குறியவர் இருவர். 1, ஹழ்ரத் அதாஉ இப்னு அபூ ரிபாஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள். இவர்கள் மக்காவின் பேரறிஞராக (பகீஹ்) திகழ்ந்தார்கள்.

2. ஹழ்ரத் தாஊஸ் இப்னு கைஸான் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், யமன் நாட்டின் பேரறிஞராக (பகீஹ்) திகழ்ந்தார்கள்.

இவர்களுக்குப் பின் 3வது தொடரில்; அறிவு—ஞானத்தில் மிகச் சிறந்து விளங்கியவர்களில் ஹழ்ரத் அபூஜுபைர் மக்கி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

4 வது தொடரில்; ஹழ்ரத் அப்துல் மலிக் இப்னு அப்துல் அஜீஸ் இப்னு ஜுரைஜ், ஹழ்ரத் சுப்யான் இப்னு உயைனா ரஹ்மதுல்லாஹி அலைஹிமா, ஆகிய இருவரும் அறிவு ஞானத்தில் சிறந்து விளங்கினார்கள்.

5 வது தொடரில் ஹழ்ரத் முஸ்லிம் இப்னு காலித் ஜன்ஜி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள்.

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் ஆரம்ப காலத்தில் ஹழ்ரத் சுப்Fயான் இப்னு உயைனா, ஹழ்ரத் முஸ்லிம் இப்னு ஜன்ஜி ரஹ்மதுல் லாஹி அலைஹிமா ஆகிய இவ்விருவரின் மூலம் கல்வி கற் றார்கள்

கூ.:பா நகர அறிஞர்கள்

ஹழ்ரத் அமீருல் முஃமினீன் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் கூபா நகரத்தில் முஸ்லிம்கள் குடியிருப்புகள் அமைத்துக் கொண்டார்கள். சஹாபாக்களும் அவ்விடம் சென்று குடியிருந்தார்கள். அவர்களில் குர்ஆன், நபிமொழியின் அடிப்படையில் பிக்ஹு சட்டங்களை அறிந்த அறிஞர்களும் இருந்தனர். அவர்களில் மிகவும் பிரபலமானவர்கள் இருவர் :

1) ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

2) ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள்.

இமாமுல் அஃழம் ஹழ்ரத் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் மத்ஹபிற்கு ஆதாரமாக மிகுதியாக ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழி யல்லாஹு அன்ஹுமா அவர்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நபிமொழிகளை ஆதாரமாகக் கொள்கின் றார்கள். ஏனெனில்,நான்கு கலிபாக்களுக்கு அடுத்தபடியாக இவர்களே மிகச் சிறந்த அறிஞராவார்கள்.

பொருளடக்கம்

ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்பு

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் ஆட்சி காலத்தில் ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்களை கூபா நகர நீதிபதியாக நியமித்து, அந்நகர மக்களுக்கு கடிதம் எழுதினார்கள்: நான் உங்களுக்காக மிகச்சிறந்தவரை அனுப்பியுள்ளேன். அவர் உங்களுக்கு மார்க்கத்தைக் கற்றுத் தருபவராகவும், உங்களுக்கு நன்மை செய்பவராகவும் இருப்பார். உங்களுக்கு அவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பியுள்ளேன்' ஆகையால் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூபா நகரம் சென்று மஸ்ஜிதுக்கு அருகாமையில் தங்களுக்காக ஒரு வீடு கட்டினார்கள். ஹழ்ரத் உத்மான் ரழியல்லாஹு அன்ஹு அவாகள் ஆட்சியின் ஆரம்ப காலம் வரை கூபாவில் நீதிபதியாக பணியாற்றி மதீனா திரும்பினார்கள்.

நபிகளாரின் பாராட்டைப் பெற்றவர்கள்

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு. அவர்களைப்பற்றி கூறினார்கள்: என் உம்மத்துக்காக உம்மு அப்து உடைய மகனார் (அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்) எதை விரும்புகின்றாரோ அதை நானும் பொறுந்திக் கொண்டேன். என் உம்மத்துக்காக உம்மு அப்து உடைய மகனார் எதை வெறுக்கின்றாரோ அதை நானும் வெறுக்கின்றேன்.

மேலும் நபியவர்கள்; அவர் மிகவும் அறிந்தவர் மிகச் சிறந்த முறையில் கற்றுக் கொடுப்பவர், என்று கூறினார்கள் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அன்னாரின்யோசனையைமதிப்பார்கள்.சிக்கலானபிரச்சினை களுக்கு அன்னாரின் யோசனைப்படி தீர்ப்பளிப்பார்கள். இவர்களும் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர் களின் யோசனைப்படி தீர்ப்பளிப்பார்கள்.

ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்காவில் 6வது நபராக இஸ்லாத்தைத் தழுவினார்கள். நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஊரிலும் பயணத்திலும் பணிவிடை செய்வதை வழமையாக கொண்டார்கள். குர்ஆன், நபிமொழிகளை மனனம் செய்வதிலும் அவைகளின் பொருளை விளங்குவ திலும் அதிகமாக ஆவல் கொண்டார்கள். நபியவர்களின் ரகசியத்தை அறிந்தவர்கள்.மேலும் நபியவர்கள்மூலம்சுவர்க் கத்தைக் கொண்டு நன்மாறாயம் கூறப்பட்டார்கள்.

இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் அபிசீனியா நாட்டிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். பத்ரு மற்றும் அனைத்து யுத்தங்க ளிலும் கலந்து கொண்டார்கள். தோற்றத்தில் நபியவர் களைப் போன்று இருப்பார்கள்.

ஹிஜ்ரீ 32ஆம் ஆண்டு,சுமார் 60வது வயதில் மதீனா வில் மரணமானார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) ஹழ்ரத் ஜுபைர் ரழியல்லாஹு. அன்ஹு அவர்கள் ஜனாஸாத் தொழுகை நடத்தினார்கள். ஜன்னத்துல் பகீயில் அவர்களின் விருப்பப்படி இரவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

சிறப்புமிக்க 4 கலீபாக்கள், இன்னும் மற்ற சஹாபாக் களும் அன்னாரின் மூலம் நபிமொழிகளை அறிவித் துள்ளனர்.

பொருளடக்கம்

ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்திற்குப்பின் அன்னாரின் தோழர்கள், புதிதாக தோன்றிய பல பிரச்சினைகளுக்கு குர்ஆன், நபிமொழி அடிப்படையில் நன்கு ஆய்வு செய்து தீர்ப்பளித்தார்கள். அடுத்து தோன்றிய அறிஞர்களும் குர்ஆன், நபிமொழிகளில் விடைகாணாவிட்டால் ஆய்வு செய்து தீர்ப்பளிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். ஆகவே ஈராக் நாட்டின் உலமாக்களிடம் குர்ஆன்-நபிமொழி அடிப் படையில் ஆய்வு செய்யும் பழக்கம் உத்தம சஹாபாக்களின் காலத்திலிருந்து பரவியது.

ஹழ்ரத்அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சி காலத்தில் யுத்தங்கள், குழப்பங்கள் அதிகமாக ஏற்பட்ட தால் அவர்களால் கல்வி—பிக்ஹு சட்டங்களில் முழுமையாக ஈடுபடமுடியவில்லை. சில நபித் தோழர்களும், தாபியீன் களும் அன்னாரின் மூலம் பிக்ஹு சட்டங்களையும் மார்க்கத் தீர்ப்புகளையும் பெற்றுள்ளனர்.

கூஃபாவின் புகழ்மிக்க உலமாக்கள்

கூஃபாவில் ஹழ்ரத் அப்துல்லாஹ்இப்னு மஸ்ஊத், ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹுமா, இன்னும் 120 சஹாபாக்கள் மூலம் மார்க்கத் தீர்ப்பு வழங்குகின்ற ஆற்றல் பெற்ற தாபியீன்கள் :

1) ஹழ்ரத் அல்கமா இப்னு கைஸ் நக்யீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2) ,, ஷுரைஹ் இப்னு ஹாரித் காழீ ,, ,,

3) ,, அப்துல்லாஹ் இப்னு உத்பாஇப்னு மஸ்ஊது காழீ ,, ,,

பொருளடக்கம்

4) ,, அஸ்வது இப்னு நக்யீ ,, ,,

5) ,, அம்ரு இப்னு ஷர்ஜீல் ஹமதானீ ,, ,,

6) ,, மஸ்ரூக் இப்னு அஷ்ஜஃ ,, ,,

7) ,, அப்துர் ரஹ்மான் இப்னு அபூலைலா ,, ,,

இரண்டாவது தொடர் :

இரண்டாவது தொடரில் மிகவும் பிரபலமானவர்கள்:

1) ஹழ்ரத் இப்ராஹீம் நக்யீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2) ,, ஆமிர் ஷஃபீ ,, ,,

3) ,, சயீது இப்னு ஜுபைர் ,, ,,

இவர்களுக்குப்பின் :

1) ஹழ்ரத் ஹம்மாது இப்னு அபூசுலைமான் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2) ,, சுலைமான் அஃமஷ் ,, ,,

இவர்களுக்குப்பின் தோன்றிய அறிஞர்கள் :

1) ஹழ்ரத் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

2) ,, அப்துல்லாஹ்இப்னு ஷப்ரமா ,, ,,

3) ,, சுப்யான் தவ்ரீ ,, ,,

ஹழ்ரத் இப்ராஹீம் அவர்கள்

ஹழ்ரத் இப்ராஹீம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூபாவின் சிறந்த அறிஞர்.இவர்களும் இவர்களின் தோழர்களும் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத்

பொருளடக்கம்

ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா அவர்கள் இன்னும் அன்னாரின் சஹாபாக்களின் பிக்ஹு சட்டங்களை நன்கு அறிந்தவர்கள் என்று உறுதிபடுத்துகின்றனர். இதே கருத்தை இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் கூறுகின்றார்கள்.

ஹழ்ரத் இப்ராஹீம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், ஹழ்ரத் இப்னு மஸ்ஊத், ஹழ்ரத் அலீ, ஹழ்ரத் ஷுரைஹ், ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் அளித்த தீர்ப்புகளையும் இன்னும் கூபாவில் நீதிபதியாக பணியாற்றியோர் அளித்த தீர்ப்புகளையும் ஒன்று சேர்த்து அல்லாஹு தஆலாவின் நாட்டப்படி இவைகளில் இலகுவான சிறந்த வழி எதுவோ அதை கோர்வை செய்து அதன் மூலம் மஸாயில்கள்—சட்டங்களை உருவாக்கினார்கள்.

ஹழ்ரத் சயீத்இப்னு முஸய்யில் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மதீனாவின் சிறந்த அறிஞர். இவர்கள் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தீர்ப்புகளையும் ஹழ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மூலம் அதிகமான நபிமொழிகளையும் மனனம் செய்தவர்கள்.

ஹழ்ரத் இப்ரத், ஹழ்ரத் சயீத்இப்னு முஸய்யிப் ரஹ்மதுல்லாஹி தஆலா அலைஹிமா ஆகிய இவ்விருவரும் ஏதாவது ஒன்றைக்கூறி அதை முன்னோர்களான சஹாபாக்கள் யார் மூலமாக? என்று கூறாவிட்டாலும் உண்மையில் அது தெளிவாக,அல்லது சமிக்ஞை மூலமாக அதிகமான சஹாபாக்கள் மூலமே கூறப்பட்டிருக்கும். ஆகையால் கூபா, மதீனாவைச்சார்ந்த புகஹாக்கள்—மார்க்க அறிஞர்கள் இவ்விருவர்களின் மூலம் சட்டங்களை உருவாக்கினார்கள்.

பொருளடக்கம்

பஸராவில்... நபித் தோழர்கள்

1. ஹழ்ரத் அபூமூஸா அஷ்அரீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

2. அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

பஸரா தாபியீன்களில் அதிகமானோர் மார்க்கத் தீர்ப்பு வழங்கக்கூடியவர்களாகவும், அவர்களைப் பின்பற்றி பலரும் அறிஞர்களாக உருவானார்கள். இவர்களில் மூன்று பேர் மிகச் சிறப்பிற்குறியவர்கள்.

1) ஹழ்ரத் ஹஸன் பஸரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள். அக்கால அறிஞர்களில் இவர்களே மிகச்சிறந்தவர்கள். மேலும் அன்னார் 500 நபித் தோழர்களைக் கண்டதாக ஹழ்ரத் இப்னு கய்யிம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள். அன்னார் வழங்கிய தீர்ப்புகளை உலமாக்கள் 70 பகுதிகளாக கோர்வை செய்தனர்.

கல்வியின் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய அவர்கள் மிக்க பேணுதலுடையவர்களாகவும், வணக்க சாலியாகவும் திகழ்ந்தார்கள். ஹிஜ்ரீ 110 ஆம் ஆண்டு ரஜப் மாதம் மரணமானார்கள் (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.)

2) ஹழ்ரத் முஹம்மது இப்னு சீரீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் குறிப்பிட்டத்தக்கவர்கள்.

இவர்கள் ஹழ்ரத் ஜைது இப்னு தாபித், ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக், ஹழ்ரத் ஷுரைஹ் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகிய சஹாபாக்களின் மாணவர். சஹா

பாக்களின் மூலம் நபிமொழி அறிந்து, நபிமொழி அறிவிப்பாளராகவும், நம்பிக்கைக்குறியவராகவும், பிக்ஹு சட்டங்களில் சிறந்தவராகவும், பல புதிய பிரச்சினைகளுக்கு தீர்ப்புக் கூறக்கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். மேலும் ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக், ஹழ்ரத் இப்னு உமர், ஹழ்ரத் அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகிய சஹாபாக்களின் மூலம் நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள். தாபியீன்களில் பலரும் இவர்கள் (முஹம்மது இப்னு சீரீன்) அவர்கள் மூலம் நபிமொழிகளை அறிவித்துள்ளனர்.

ஹழ்ரத் கல்ப்F இப்னு ஹிஷாம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; ஜனங்கள் ஹழ்ரத் முஹம்மது இப்னு சீரீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் பார்த்தால் அல்லாஹு தஆலாவை நினைப்பார்கள். (இது, ஹதீஸில் கூறப்பட்ட அவ்லியாக்களின் அடையாளமாகும்.)

ஹிஜ்ரீ 110 ஆம் ஆண்டு தங்களின் 77வது வயதில் மரணமடைந்தார்கள் (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

3) ஹழ்ரத் முஸ்லிம் இப்னு யஸார் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்குப் பின் ஹழ்ரத் அய்யூப் ஷகஸ்தானீ, ஹழ்ரத் இப்னு சுலைமான் (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்குப்பின் : ஹழ்ரத் உத்மான் இப்னு சுலைமான் பத்தா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்குப்பின் ஹழ்ரத் ஹம்மாது இப்னு சல்மா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஷாம் நாட்டு உலமாக்கள்

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் ஷாம் நாட்டை வெற்றி கண்டதும் ஹழ்ரத் முஆத், ஹழ்ரத் உபாதா இப்னு ஸாமித், ஹழ்ரத் அபுத்தர்தாயீ (ரழியல் லாஹுு அன்ஹுும்) ஆகிய மூன்று சஹாபாக்களை அந்நகர மக்களுக்கு மார்க்கத்தின் பிக்ஹுு, அனைத்து சட்டங் களையும் கற்றுக் கொடுப்பதற்காக அனுப்பி வைத்தார்கள்.

1. ஹழ்ரத் முஆத் ரழியல்லாஹுு அவர்கள் பாலஸ் தீன மக்களுக்கு இஸ்லாத்தின் சட்டதிட்டங்களைக் கற்றுக் கொடுப்பதற்காக அங்கு தங்கினார்கள்.

2. ஹழ்ரத் உபாதத் இப்னு ஸாமித் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் குர்ஆன் ஷரீபை ஒன்று திரட்டக் கூடியவர்களாகவும், அனைத்து சட்டதிட்டங்களை நன் கறிந்தவர்களாகவும், சத்தியத்திற்காக போராடுபவர்களா கவும் இருந்தார்கள். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்களால் ஷாம்நாட்டின் நீதிபதியாகவும், முஅல்லிமாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

ஹிஜ்ரீ 34 ஆம் ஆண்டு தங்களின் 72 வது வயதில் பாலஸ்தீன் நாட்டில் வபாத் ஆனார்கள். (இன்னாலில் லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) பெரும் சஹா பாக்கள் அன்னாரின் மூலம் நபிமொழிகளை அறிவித் துள்ளனர்.

3. ஹழ்ரத் அபுத்தர்தாயீ ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் கல்வி—பிக்ஹுு சட்டங்களில் மிகவும் சிறந்து விளங்கினார்கள்: சிறந்த சஹாபாக்களில் ஒருவர். திமிஷ்கில் நீதிபதியாக பொறுப்பேற்று பணியாற்றினார்கள். அங்கேயே மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

பொருளடக்கம்

இம்மூவருக்குப் பின்; ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்,ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு ஹனம் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஷாம் நாட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். ஷாம் நாட்டிற்கு அனுப்பபட்ட அனைத்து நபித்தோழர்களும் அதன் நான்கு திசைகளிலு முள்ள ஊர்களில் கல்வி—பிக்ஹு சட்டங்களை பரப்பி னார்கள். இவர்கள் மூலம் அனேக தாபியீன்கள் பிக்ஹு சட்டங்களை எடுத்துக் கொண்டார்கள்.

மேற்கூறப்பட்ட சஹாபாக்கள் மூலம் கல்வியை கற்ற தாபியீன்களில் 1, ஹழ்ரத் அபூஇத்ரீஸ் கவ்லானீ, 2, ஹழ்ரத் ஷர்ஜீல் இப்னு சமத், 3, ஹழ்ரத் கபீஸா இப்னு துவைப் கஜாயீ (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) ஆகியோர் பிரபல மானவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இம்மூவருக்குப்பின் ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு ஜுபைர், ஹழ்ரத் மக்ஹுல், ஹழ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) ஆகியோர் சிறப்பிற்குறிய வர்கள்.

ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் இப்னு உமர் அவ்ஜாயீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், ஷாம் நாட்டின் இமாமாகத் திகழ்ந்தார்கள். அன்னாரின் ''மத்ஹப்'' மேற்குத்திசை நாடுகளிலும், உன்துலிஸியாவிலும் பரவியது. மாலிக்,ஷாபியீ மத்ஹபுகளின் வளர்ச்சியினால் அன்னாரின் மத்ஹப் வலுவடையவில்லை.

எகிப்து நாட்டு உலமாக்கள்

மிஸ்ரு நாட்டிலும் அதிகமான நபித்தோழர்கள் வாழ்ந் தனர். இவர்களில் ஹழ்ரத் அம்ரு இப்னு ஆஸ் ரழியல் லாஹு அன்ஹு அவர்கள் மார்க்கத்தீர்ப்பு வழங்குவதில் மிகவும் பிரபலமாகத் திகழ்ந்தார்கள். தங்களின் தந்தையின்

காலத்தில் மிஸ்ரு சென்றார்கள். அவர்கள் மூலம் அதிகமான மிஸ்ரு வாசிகள்,கல்வி கற்று அறிஞர்களாகத் திகழ்ந்தார்கள். சிலர், அவர்கள் கூறியதை எழுதிக் கொண்டார்கள்.

சஹாபாக்களின் காலத்திற்குப்பின் ஹழ்ரத் யஜீது இப்னு ஹபீப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பிரபல மாகத் திகழ்ந்தார்கள். இவர்கள் மிஸ்ரில் வாழ்ந்த சஹா பாக்கள் சிலர் மூலம் கல்வி கற்றார்கள். இவர்களின் மாண வரான ஹழ்ரத் லைது இப்னு சஃது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மிக பிரபலமானார்கள். இவர்கள் கல்வி யிலும் பிக்ஹு சட்டங்களிலும் பேரறிஞராகத் திகழ்ந் தார்கள். கல்வி கற்பதற்காக புனித மக்கா, ஷாம், பஃதாத் போன்ற பல ஊருக்குப் பயணமானார்கள். 59 தாபியீன் களை சந்தித்து அவர்கள் மூலம் நபி மொழிகளை அறிவிக் கின்றார்கள்.

சில சட்டங்களை எழுதுவதற்காக மதீனா சென்று இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுடன் இருந்தார்கள். இவர்கள் சிறந்த அறிஞராகவும், நம்பிக் கைக்குரியவராகவும் திகழ்ந்ததால் அதிகாரிகளும், நீதிபதி களும் பெரும் விஷயங்களிலெல்லாம் அன்னாருடன் ஆலோசனை செய்வார்கள். அன்னார் உருவாக்கிய மத்ஹபை மிஸ்ரு வாசிகள் சில காலம் பின்பற்றினார்கள். அவர்களுக்குப்பின் மிஸ்ரு நாட்டில் இமாம் மாலிக் ரஹ்ம துல்லாஹி அலைஹி அவர்களின் சஹாபாக்களும், பின்பு இமாம் ஷாபியி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் அன்னாரின் தோழர்களும் பிரபலமானார்கள்.

இதற்குப்பின் பிக்ஹு சட்டங்களை ஒருவரின் மூலம் மட்டும் பின்பற்றக்கூடிய—தக்லீத் முறை உருவானது. அதாவது குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் பல புதிய பிரச்சினைகளுக்கு சஹாபாக்கள் அளித்த தீர்ப்பின் அடிப் படையில் உலமாக்கள் தங்களின் திறமையான அறிவின்

பொருளடக்கம்

மூலம் ஆய்வு செய்து இந்த இந்தபிரச்சினைகளுக்கு இதுதான் தீர்வு என்று தீர்ப்பளித்தார்கள்.

இத்தகைய உலமாக்கள் உருவாக்கிய மத்ஹபுகள் பல இருந்தன. ஆனால் இன்று உலகம் முழுவதும் அந்த உலமாக்களில் 4பேர் மட்டுமே பின்பற்றப்படுகின்றனர். அதாவது உலக முஸ்லிம்கள் அந்த நால்வரும் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கிய சட்டங்களைப் பின் பற்றுகின்றனர். அவர்கள் உருவாக்கிய சட்டங்களைப் பின் பற்றுபவர்களுக்கு அந்த இமாமைச்சார்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

அதாவது ஒரு மனிதனை அவனுடைய குடும்பம், அவனது ஊர், அவனது நாடு இவைகளுடன் இணைத்துக் கூறப்படுவது, போன்று.

இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்களின் ஆய்வின்படி குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கிய வழியை (மத்ஹபை) பின்பற்றுவோருக்கு அந்த இமாமை இணைத்து "ஹனபி" என்று கூறப்படுகிறது.

இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ் ஷாபியீ ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்கள் தங்களின் ஆய்வின்படி குர்ஆன் ஹதீஸ் அடிப்படையில் உருவாக்கிய வழியை (மத்ஹபை) பின்பற்றுவோருக்கு அந்த இமாமை இணைத்து "ஷாபியீ" என்று கூறப்படுகிறது.

ஆகவே, இரு மத்ஹபுகளும் அசல் சட்டங்களில் ஒன்று தான் என்பதை விளங்க வேண்டும்.

சஹாபாக்களின் பொற்காலத்தில் ஹனபீ இமாம்

ஹதீஸ் (நபிமொழி) கலையில் தேர்ச்சி பெற்றவர் (முஹத்திஸ்), ஒரு சஹாபியை சந்திப்பது, அல்லது பார்ப்

பொருளடக்கம்

பதின் மூலம் அவர் "தாபிஈ" ஆவார். ஆகையால் அவர் அந்த சஹாபியுடன் குறிப்பிட்ட காலம் நட்பு கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. இக்கருத்து அனைவராலும் ஆமோதிக்கப்பட்டுள்ளது.

(நூல் : ஷரஹுன் நுக்பா)

இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சஹாபாக்களில் ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்தார்கள் என்று பல இமாம்களின் கூற்று உறுதிப்படுத்துகிறது.

இமாம் அவர்கள் ஹிஜ்ரி 80 ஆம் ஆண்டு பிறந்தார்கள். ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி 93 ஆம் ஆண்டு மரணமானார்கள். இக்குறிப்பு ஆதாரப் பூர்வமான சரித்திர நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கூறப்பட்டுள்ள விளக்கத்தின் அடிப்படையில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சந்தேகமின்றி "தாபிஈ" ஆவார்கள்.

இமாம் அவர்களின் தந்தை "தாபித்" அவர்கள், சிறு குழந்தையாக இருக்கும் போது ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அவருக்காகவும் அவரது சந்ததியினருக்காகவும் பரக்கத்தைக் கொண்டு துஆச் செய்தார்கள்.

அல்லாஹு தஆலா கூறுகின்றான்; முஹாஜிரீன்களிலும் அன்சாரிகளிலும் எவர்கள் (இஸ்லாத்தில்) முதலாவதாக (முந்திக்கொண்டு விசுவாசங்) கொண்டார்களோ அவர்களையும் நற்கருமங்களில் (உண்மையாகவே) அவர்களைப் பின்பற்றியவர்களைப் பற்றியும் அல்லாஹு தஆலா திருப்தியடைகிறான்.

(அல்குர்ஆன் : 9-100)

பொருளடக்கம்

மேற்கூறப்பட்ட இறைவசனத்தில் 'அவர்களைப் பின் பற்றியவர்களைப்பற்றியும்'' என்று கூறப்பட்டவர்களில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களை யும் குறிப்பதாகும்.

(நூல் : இஃலா உஸ்ஸுனன்)

நபிமொழிக் கலையில் சிறந்து விளங்கிய ஹனபீ இமாம்

ஹழ்ரத் யஜீது இப்னு ஹாரூன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நான் 1000 அறிஞர் களைச் சந்தித்துள்ளேன். அவர்களில் அதிகமானவர்களைப் பற்றி எழுதியும் உள்ளேன். ஆனால் அவர்களில் 5 நபர்கள் மட்டுமே மார்க்கச் சட்டங்களில் பேரறிஞர்களாகவும், மிக்க பேணுதலுடையவர்களாகவும் இருந்தார்கள். இந்த 5 நபர்களில் முதன்மையானவர் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹிஅவர்கள்.

(நூல் : ஜாமிஃ பயானுல் இல்மு)

ஹழ்ரத் ஷத்தாது இப்னு ஹகீம் ரஹ்மதுல்லாஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் அபூஹனீபா ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்களைப் போன்று வேறு அறிஞரை நான் பார்த்ததில்லை.

1500 சஹாபாக்கள் வாழ்ந்த கூஃபா நகரம்

ஹழ்ரத் யஹ்யா இப்னு ஆதம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நுஃமான் (ஹனபீ இமாம்) அவர்கள் தங்கள் ஊரிலுள்ள அனைத்து நபிமொழிகளையும் ஒன்று திரட்டினார்கள். அதில் நபீ ஸல்லல்லாஹு அலைஹி

பொருளடக்கம்

வஸல்லம் அவர்கள் மரணித்தவரை உண்டான நபிமொழி களைக் கண்டார்கள். இமாம் அவர்கள் வாழ்ந்த கூபா நகரத்தில் 1500 நபித் தோழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களில் 70 சஹாபாக்கள் பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள். கூபா நகரத்தில் இவ்வளவு சஹாபாக்கள் வாழ்ந்திருக்கும் போது அதைச் சூழ உள்ள ஈராக் போன்ற நகரத்தில் எவ்வளவு சஹாபாக்கள் வாழ்ந்திருப்பார்கள்!

(நூல் : இஃலாஉஸ் ஸுனன்பக் 192)

"துஆ"ச் செய்க

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு தாவூது குரைபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூற தாங்கள் கேட்டதாக ஹழ்ரத் முஹம்மது இப்னு சஃது காதிப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; முஸ்லிம்கள் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னும் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்களுக்காக துஆச் செய்ய வேண்டும். ஏனெனில் இமாம் அவர்களே முதன் முதலாக இந்த உம்மத்துக்காக நபிமொழிகளையும் மார்க்கச் சட்டங்களையும், சேகரித்து உருவாக்கித் தந்தார்கள்.

அனைவரும் ஏற்றுக் கொண்ட பேரறிஞர்

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நான் கூபா நாட்டிற்குச் சென்ற போது, அங்குள்ள உலமாக்களிடம்; உங்களின் ஊரில் மிகப் பெரிய அறிஞர் யார்? என்று கேட்டேன். அவர்கள் அனைவரும் ஒருமித்து, "இமாம் அபூஹனீபா" ரஹ்மதுல்லாஹி அலைஹி, என்று கூறினார்கள். ஹழ்ரத் முஹம்மது இப்னு சல்மா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்; அல்லாஹு தஆலாவின் அறிவு-ஞானம்முதன் முதலாக,

பொருளடக்கம்

நமது நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமும்; அடுத்து அன்னாரின் சஹாபாக்களிடமும், பின்பு தாபியீன்களிடமும் பின்பு இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடமும் அன்னாரின் சஹாக்களிடமும் திரும்பியது.

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு முபாரக் அவர்கள் கூற தாங்கள் கேட்டதாக ஹழ்ரத் முஹம்மது இப்னு முஜாஹிம் (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதர்களிலே மிகவும் அறிவு-ஞானம் உள்ளவர்கள் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் போன்று வேறு ஒருவரை நான் கண்டதில்லை. அல்லாஹு தஆலா; இமாம் அபூஹனீபா, ஹழ்ரத் சுப்Fயான் தவ்ரீ (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) ஆகிய இவர்களின் மூலம் எனக்கு உதவி செய்யாமலிருந்தால் நான் மற்றவர்களைப் போன்று ஆகி இருப்பேன்.

ஃபிக்ஹு கலையின் பிறப்பிடம்

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; மனிதர்கள் அனைவரும் பிக்ஹில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் குடும்பத் தார்களே.

ஹழ்ரத் நழ்ரு இப்னு ஷுமைல் அவர்கள் கூறியதை ஹழ்ரத் சுயூத்தி (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) அவர்கள் கூறுகின்றார்கள்; மனிதர்கள் பிக்ஹு கலையில் தூங்கக் கூடியவர்களாக இருந்தனர். பிக்ஹு சட்டங்களை தெளிவு படுத்தி அவர்களை விழிக்கச் செய்தது இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

ஹழ்ரத் யஹ்யா இப்னு முயீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; மனிதர்களில் ஹழ்ரத்

வகீஃ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களை விட யாரையும் முன்னிலைப்படுத்தியதை நான் பார்த்ததில்லை. அத்தகைய மகான், இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சட்டங்களையே தீர்ப்பளிப்பார்கள். மேலும் இமாம் அவர்களிடமுள்ள நபிமொழிகளையும் மனனம் செய்தார்கள். இமாம் அவர்களிடமுள்ள அனைத்து நபி மொழிகளையும் செவியுற்றார்கள்.

(நூல் : இஃலா உஸ்ஸுனன். பக் 192)

இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் நபிமொழி வல்லுநர்களும், மார்க்கச் சட்ட ஆராய்ச்சியாளர்களும் அன்னாரைச் சூழ்ந்து கொண்டு விளக்கம் பெறுவார்கள். நபிமொழி வல்லுநர்கள் இமாம் அவர்களிடம் நபிமொழியைத்தான் கேட்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த அளவுக்கு இமாம் அவர்களிடம் நபிமொழி நிறைந்து இருந்தது.

மேற்கூறப்பட்ட கூற்றுகளிலிருந்து சந்தேகமின்றி விளங்குவதெல்லாம் பிக்ஹு சட்டங்களை உருவாக்க வேண்டுமானால் நபிமொழியை மனனம் செய்யாமலும், சரித்திரங்கள், சஹாபாக்கள் இன்னும் தாபியீன்கள், அவர்களின் கருத்துக்கள், கருத்து வேறுபாடுகள், மாற்றிய, மாற்றப்பட்ட நபிமொழிகள், இவை போன்றவைகளை அறிந்து கொள்ளாமல் இயலாது. ஆகவே இமாம் அபூ ஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மனிதர்களிலே மிகப் பெரிய அறிஞர் என்று ஏகோபித்த முடிவு ஏற்பட்டதால் இமாம் அவர்கள் நபிமொழிகள் அனைத்தையும் மனனம் செய்திருந்தார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

அறிஞர்களை உருவாக்கிய இமாம்

ஹழ்ரத் சுப்யான் இப்னு உயைனா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; என்னை முதன் முத

பொருளடக்கம்

லாக "முஹத்திஸ்" ஆக ஆக்கியதே இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்தான்.

முஹத்திஸ்; பொருள் : நபிமொழிகளை அறிவிப்பதில் தேர்ந்தவர்.

குறிப்பு : ஹழ்ரத் சுப்யான் இப்னு உயைனா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மிகச்சிறந்த அறிஞர். 1, ரயீஸுல் முஹத்திஸீன் (நபிமொழி அறிவிப்பாளர்களின் தலைவர்) 2, ஷைகுல் இஸ்லாம், (இஸ்லாத்தின் தலைவர்) என்ற சிறப்புப் பெயர்கள் அவர்களுக்கு உண்டு. இத்தகைய சிறப்புகளை பெற்ற இவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுக்கு முன் எங்கள் நிலை,ராஜாளி பறவைக்கு முன் சிட்டுக்குருவிகளைப் போல, ஏனென்றால் இமாம் அவர்கள் உலமாக்களுக்கெல்லாம் தலைவர்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன் பக். 199)

ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு தாவூது கரீபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் அவர்கள் ஸபாFA - மர்வா இரண்டிற்குமிடையில் (ஹாஜிகள்) தொங்கோட்டம் ஓடும்போது (ஹாஜிகளின்) கண்களெல்லாம் அன்னாரையே சூழ்ந்து கொள்ளும்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன், பக் 199)

ஹழ்ரத் இஸ்மாயீல் இப்னு அபூபுகைக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் (ஹனபீ) இமாம் அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொண்டு நடந்து செல்வதை நான் பார்த்தேன். அவ்விருவரும் மஸ்ஜிதை அடைந்தவுடன் இமாம் மாலிக் அவர்கள், இமாம் அபூஹனீபா (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) அவர்களை முதலில் உள்ளே செல்லும்படி (மரியாதைக்காக) கூறினார்கள்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன், பக் 200)

பொருளடக்கம்

நபிமொழிகளை சேகரிப்பதில் ஆர்வம்

ஹழ்ரத் நழ்ர் இப்னு முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் (இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அவர்களின் மாணவர்களில் ஒருவர்.) கூறுகின்றார்கள்: ஒரு நாள் எங்களிடம் ஹழ்ரத் யஹ்யா இப்னு சயீது அன்சாரீ, ஹழ்ரத் ஹிஷாம் இப்னு உர்வா, ஹழ்ரத் சயீது இப்னு அபூஅரூபா (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) ஆகியோர் வந்தனர். அப்பொழுது இமாம் அவர்கள் எங்களிடம் இவர்களிடம், நாம் கேட்பதற்கு நபிமொழி இருக்கின்றதா? என்று கவனியுங்கள், என்று கூறினார்கள்.

புகாரீ இமாமுடைய ஷைகின் பாராட்டு

இமாம் புகாரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் ஷைகு ஹழ்ரத் அலீ இப்னு ஜஃது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; ஒரு மனிதர் ஹழ்ரத் ஜுஹைர் இப்னு முஆவியா அவர்களிடம் கருத்து வேறுபாடு கொண்டார். பின்பு அவரைக் காணவில்லை. சில காலத்திற்குப் பின் அம்மனிதர் வந்த போது, அவரிடம் இவ்வளவு காலம் எங்கே சென்றீர்கள்? என்று கேட்டார்கள். இமாம் அபூ ஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சபைக்கு சென்றிருந்தேன் என்று கூறினார். நீங்கள் கற்றுக்கொண்ட அறிவு மிகவும் நல்லதாகிவிட்டது. நீங்கள் என் சபைக்கு ஒரு மாதம் வருவதைவிட இமாம் அவர்களின் சபையில் அமருவது மிகச் சிறந்தது, என்று கூறினார்கள்.

(நூல் : இஃலா உஸ்ஸுனன், பக் 201)

பொருளடக்கம்

தீராத பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட இமாமின் தோழர்கள்

ஹழ்ரத் பிஷ்ரு இப்னு வலீத் காழீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நாங்கள் சுப்யான் இப்னு உயைனா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் இருந்து கொண்டிருந்தோம். அப்பொழுது சிக்கலான ஒரு சட்டப் பிரச்சினை வந்தது. இங்கே இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் தோழர்கள் யாராவது இருக்கின்றார்களா? என்று கேட்டார்கள். "பிஷ்ரு" அவர்கள் இருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. உடனே அன்னாரிடம் அந்த சிக்கலான பிரச்சினைக்கு தீர்வு கூறுங்கள் என்று கூற, அன்னார் சிறந்த முறையில் தீர்ப் பளித்தார்கள்.

இமாமின் சபையில் அறிஞர்கள்

இமாம் கதீப் பஃதாதீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், ஹழ்ரத் இப்னு கராமத் அவர்கள் மூலம் அறிவிக்கின்றார்கள்; ஒருநாள் நாங்கள் ஹழ்ரத் வகீஃ இப்னு ஜர்ராஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் அமர்ந்திருந்தோம். அந்நேரம் 'ஒரு மனிதர் அபூஹனீபா தவறிழைத்து விட்டார்' என்று கூறினார். உடனே வகீஃ இப்னு ஜர்ராஹ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; அபூஹனீபா அவர்கள் எவ்வாறு தவறிழைத்து இருக்க முடியும்! ஏனெனில் அன்னாரின் சபையில் ஹழ்ரத் அபூயூசுப், ஹழ்ரத் ஜுஃபர், ஹழ்ரத் முஹம்மது (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) போன்றோர் கியாஸ், இஜ்திஹாத்—ஆய்வில் வல்லுநர்கள்; ஹழ்ரத் யஹ்யா இப்னு ஜகரிய்யா இப்னு அபூஜாயிதா ஹழ்ரத் ஹப்ஸ் இப்னு ஹயாஸ், ஹழ்ரத் ஹப்பான் ஹழ்ரத் மன்தில் (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) போன்றோர்

பொருளடக்கம்

நபிமொழிகளை மனனம் செய்வதிலும் அதன் பொருளை விளங்குவதிலும் மிகச் சிறந்தவர்கள்; ஹழ்ரத் காஸிம் இப்னு மிஅன் ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்றோர் அரபு பாஷையிலும், இலக்கண இலக்கியத்திலும் தேர்ந்தவர்கள்; ஹழ்ரத் தாவூது இப்னு நுஸைர் தாயீ, ஹழ்ரத் புFழைல் இப்னு இயாழ், (ரஹ்மதுல்லாஹி அலைஹிம்) போன்றோர் உலக பற்றற்றவர்கள், மிக்க பேணுதலுடையவர்கள், இவ்வாறு பல துறைகளிலுமுள்ள அறிஞர் உலகம் இமாம் அவர்களைச் சூழ்ந்து இருந்தது. எனவே இமாம் அவர்கள் தவறிழைத்து இருக்க முடியாது என்று கூறினார்கள்.

மார்க்கத்தின் பல துறைகளிலும் தேர்ச்சி பெற்ற அறிவு ஜீவிகள் இமாம் அவர்களைச் சூழ்ந்திருக்க இமாம் அவர்கள் தவறிழைத்து இருக்க முடியாது. தவறிழைத்து இருந்தால் அந்த அறிஞர் பெருமக்களே அன்னாரை உண்மையின் பக்கம் திருப்பி இருப்பார்கள்.

ஹழ்ரத் தஹாவீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் அஸத் இப்னு புFராத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மூலம் அறிவிக்கின்றார்கள்; இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மார்க்கச் சட்டங்களைக் கோர்வை செய்வதற்காக அன்னாரின் தோழர்களில் 40 அறிஞர்கள் அதில் ஈடுபட்டனர்.

இத்தகைய அறிவுலக கூட்டம் இமாம். அவர்களிடமிருக்க இமாம் அவர்கள் குறைந்த நபிமொழிகளே பெற்றிருந்தார்கள் என்று கூறுவது விந்தையல்லவா!!!

(நூல் : இஃலாஉஸ் ஸுனன்)

இமாம் அபூயூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி

இவர்கள், இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் தோழர்களில் முதன்மையானவர்கள்

பொருளடக்கம்

ஹிஜ்ரீ 113 ஆம் ஆண்டு பிறந்தார்கள். ஹிஜ்ரீ 182 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜி ஊன்)

இஸ்லாத்தின், முதன் முதலாக தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார்கள். "உஸூலுல் பிFக்ஹு" என்ற சட்டத்தின் அடிப்படையில் இவர்கள் தான் முதன் முதலாக சட்டங்களை உருவாக்கினார்கள்.

இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் சட்டங்களை உலகின் பல பாகங்களுக்கும் பரப்பினார்கள்.

இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நான் நபிமொழியை கற்பதற்காக முதன் முதலாக இமாம் அபூயூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடமே சென்றேன். பின்பு தான் மற்ற அறிஞர்களிடம் நபிமொழி கற்பதற்காக சென்றேன்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன். 208)

ஹழ்ரத் ஆஸிம் இப்னு யூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்:நான் ஹழ்ரத் அபூயூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் அறிவு-ஞானத்தில் உங்களைவிட யாரும் முந்திவிடமுடியாது என்று அனைவரும் ஒருமித்து கூறுகின்றார்களே! என்று கூறியபோது எனது அறிவு ஞானம் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் அறிவு—ஞானத்திற்கு முன் புFராத் நதியின் ஓரமாக ஓடக்கூடிய ஒரு சிறிய ஓடையைப் போன்றது, என்று கூறினார்கள்.

(நூல் : இஃலாஉஸ்ஸுனன்)

இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ரஹ்மதுல்லாஹி அலைஹி

இவர்கள், இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் பிரதான தோழர்களில் ஒருவர். இமாம் அவர்களின் சகவாசத்தில் இருந்து நபிமொழி-பிக்ஹு சட்டங்களைக் கற்றார்கள். ஹஜ்ரீ 132 ஆம் ஆண்டு பிறந்தார்கள். ஹிஜ்ரீ 189 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களை அறிவு-ஞானத்தில் கண்ணியப்படுத்திப் பேசுவார்கள். அது போன்று, இமாம் அஹ்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் அன்னாரைக் கண்ணியப்படுத்திப் பேசுவார்கள்.

இமாம் கஷ்மீரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பFகீஹாக (பிக்ஹு சட்டங்களை உருவாக்குவதில் பேரறிஞராக)ஆனபோது,இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் பற்றியும் அன்னாரின் தகுதிகளைப் பற்றியும் சிறப்பித்துக் கூறினார்கள். மேலும் அவர்களின் பேச்சு வஹீ போன்று இருக்கும் என்றும் கூறினார்கள். மேலும் நான் அன்னாரிடமிருந்து மார்க்க அறிவு-ஞானம் அடங்கிய நூல்களை ஒட்டகம் நிறைய சுமந்து சென்றேன்.

நபிமொழிகளில் மட்டும் தேர்ச்சியடைந்து, பிக்ஹு சட்டங்களை அறியாதோர் இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் அந்தஸ்துகளைப் பற்றி அறிய

பொருளடக்கம்

மாட்டார்கள். எனவே அவர்கள், இமாம் அவர்களைப் பற்றி திருப்தியான வார்த்தை கூறுவதை எதிர்பார்க்க முடியாது. முதன் முதலாக நபிமொழிகளிலிருந்து பிக்ஹு சட்டங்களை உருவாக்கியதால் அன்னாரை சிலர் வெறுத்தனர். இமாம் அவர்களைப் பற்றி அறியாதோர் என்னதான்? கூறினாலும் நான்கு மத்ஹபுகளைச் சார்ந்த எவரும் இமாம் அவர்களின் செயலையோ, அவர்களின் வழி முறைகளையோ பின் பற்றாமலில்லை. அல்லாஹு தஆலா இமாம் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக! ஆமீன்.

நபிமொழி கேட்க மக்களின் கூட்டம்

ஹழ்ரத் கதீப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மூலம் நபிமொழிகளை கூற ஆரம்பித்து விட்டால் அவ்விடம் மனித கூட்டம் நிரம்பி வழியும்; நெருக்கடியால் இடம் போதாமல் ஆகிவிடும்.

ஹழ்ரத் அபூஅபீத் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்; அல்லாஹு தஆலாவுடைய கிதாபை (குர்ஆன்) நன்கு அறிவதில் இமாம் முஹம்மது ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்களைப் போன்று வேறுயாரையும் நான் பார்த்ததில்லை. (நூல்: இஃலாஉஸ் ஸுனன் 210)

இமாமின் உயர்வுக்கு காரணமான இமாம்

ஹழ்ரத் இப்ராஹீம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நான் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் தங்களுக்கு

இந்த அளவு நுட்பமான மார்க்க விளக்கங்களை எங்கிருந்து பெற்றுக் கொண்டீர்கள்! என்று கேட்டபோது "இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன், என்று கூறினார்கள்.

(நூல் : தஃலீகுல் முமஜ்ஜித். பக் 30)

ஹனபீ இமாமின் உதவி

மேற்கூறப்பட்ட மார்க்க மேதைகள் பலரின் கூற்றின் மூலம் தெரிவதெல்லாம் அனைத்து மத்ஹபுகளிலும் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் உதவியைக் காணலாம். அன்னாரின் மாணவர்களில் ஒருவரான இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மூலம் இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பிக்ஹு சட்டங்களைக் கையாண்டார்கள்.

மேலும் அவர்களின் மூலம் நபிமொழிகளையும் அறிவித்துள்ளார்கள். இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஆரம்பத்தில் இமாம் அபூயூசுப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மூலம் நபிமொழிகளைக் கற்று பின்பு இமாம் முஹம்மது ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் நூல்களிலிருந்து நுட்பமான அறிவு விளக்கங்களைப் பெற்றார்கள்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன். பக் 210)

ஹழ்ரத் இப்னு ஹஜர் மக்கீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், சில இமாம்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்; இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுக்கும் அவர்களின் தோழர்கள்,மாணவர்கள் மூலம் வெளியான அறிவு ஞானம் போன்று வேறு பிரபலமான எந்த இமாம்களின் மூலம் வெளியாகவில்லை. உலமாக்களும், பொது ஜனங்களும் ஹனபீ இமாம், அன்னாரின் தோழர்

களின் மூலம், ஒன்றுக்கொன்று ஒப்பான நபிமொழிகளின் விளக்கங்களிலும், ஆய்வு செய்து எடுக்கப்பட்ட சட்டங்கள் மூலம் பிரயோஜனம் அடைந்தது போன்று வேறு யாரின் மூலமும் பிரயோஜனமடைய வில்லை.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன். 199, ரத்துல் முக்தார்)

ஹனபீ மத்ஹபைப் பற்றி சிலரின் தவறான எண்ணங்கள்

தவறான எண்ணங்கள் :

இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், நபிமொழி கோர்வை செய்யப்படுவதற்கு முன்பே கியாஸ் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கினார்கள்! மேலும், அவர்கள் அதிக காலம் வாழ்ந்திருந்தால் பல ஊருக்குப் பயணம் மேற்கொண்டு இன்னும் பல நபிமொழி களை சேகரித்து இருப்பார்கள். ஆதலால் அவர்களின் சட்டங்களில் சில, நபிமொழிக்கு மாற்றமாக உள்ளன, என்று தவறான எண்ணங்களின் அடிப்படையில் கூறுகின்றனர்.

விளக்கம் :

இமாம் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து பல ஊருக்குப் பயணம் மேற்கொண்டு நபிமொழிகள் கிடைக்கப் பெற்றாலும், இமாம் அவர்கள்; சீர்மிகு கலீபாக்கள் 4 சஹாபாக் களின் காலத்தில் கிடைக்கப் பெற்ற நபிமொழிகளை மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். ஏனென்றால் 4 கலீபாக் களின் பொற்காலத்தில் வெளியான அனைத்து நபிமொழி களும் இமாம் அவர்களின் காலத்தில் பெற்றுக் கொள்ளப் பட்டது. ஏனென்றால் இமாம் அவர்களின் பொற்காலத்தில்

பொருளடக்கம்

கல்வி – அறிவு – ஞானம் ஹிஜாஸ் மாகாணம், மதீனா, ஈராக் போன்ற நாடுகளைச் சூழ்ந்திருந்தது.

மேலும் இமாம் அவர்கள் நபிமொழிகளின் அடிப்படையிலே சட்டங்களை உருவாக்கினார்கள். கியாஸைவிட நபிமொழிக்கே முதலிடம் கொடுத்தார்கள். ஹனபீ மத்ஹபின் உலமாக்கள் மற்றவர்களை விட அதிகமாக நபிமொழியை பின்பற்றுபவர்கள். சஹாபாக்கள் முர்ஸலான நபிமொழிகளைப்பின்பற்றினார்கள் என்பது எவ்விதகருத்து வேறுபாடுமின்றி ஏகோபித்த முடிவாகும், ஆகையினால் ஹனபீ இமாம்கள் முர்ஸலான நபிமொழிகளையும் முஸ்னது போன்று பின்பற்றுகின்றனர்.

ஹழ்ரத் தப்ரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள் : ஹிஜ்ரீ 200 ஆண்டு வரை முர்ஸலான நபிமொழிகள் என்றுகூறப்படுபவைகளையாரும் மறுக்காமல் அதை பின்பற்றியுள்ளனர், என்று உலமாக்கள் ஏகோபித்து கூறுகின்றனர்.

ஆகவே, எவர் ஹனபீ உலமாக்கள். நபிமொழிக்கு மாற்றமாக கியாஸ், இன்னும் அறிவின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கினார்கள் என்று கூறினால் அவர்கள் மிகப் பெரிய தவறை கூறியவராவார்கள். ஏனெனில் ஹனபீ உலமாக்கள் ''மவ்கூப் F'' இன்னும் ''ழயீப்F'' என்று கூறப்பட்ட நபிமொழிகளுக்கும் கியாஸை விட அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள்.

மேலும், முர்ஸலான நபிமொழிகளை அதிகமானோர் ஏற்றுக் கொள்கின்றனர். அவர்களில்; இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஹழ்ரத் கதீப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், தங்களின் ''ஜாமிஃ'' என்ற நூலில் கூறுகின்றார்கள்; சில நேரம்

முர்ஸலான நபிமொழிகள் முஸ்னதைவிட வலுவுள்ளதாக இருக்கும். இக்கருத்தை ஹழ்ரத் ஈஸா இப்னு அபான் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும், மாலிக் மத்ஹபைச் சார்ந்த சில அறிஞர்களும் உறுதிபடுத்துகின்றனர்.

முன்னோர்கள் முர்ஸலான, முஸ்னதான நபிமொழிகளுக்கிடையில் எவ்வித குறையும் காணவில்லை.

ஆகவே, மேற்கூறப்பட்ட விளக்கத்திற்குப் பின் சிலர், ஹனபீ உலமாக்கள் சில நபிமொழிக்கு மாற்றமாக சட்டங்களை உருவாக்கினார்கள் என்று கூறுவார்களேயானால் அவர்கள் தவறான கருத்தை(யும் நஸ்டமானதையும்) கூறுபவராவார்கள்.

நபிமொழி அடிப்படையில் ஹனபீ உலமாக்கள் வகுத்த சட்டங்கள்

1) மலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்கவோ பின்னோக்கவோ கூடாது.

ஆதாரம் : நீங்கள் மலம் கழித்தால் கிப்லாவை முன்னோக்காதீர்கள், பின்னோக்காதீர்கள்.

(நூல் : புகாரீ, முஸ்லிம்)

2) பெண்களைத் தொட்டால் ஒளுமுறியாது.

ஆதாரம் : நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் மனைவியரில் சிலரை முத்தமிட்டு ஒளு செய்யாமல் தொழுதார்கள்.

(நூல் : திர்மிதீ)

பொருளடக்கம்

3) மர்மஸ்தானத்தைத் தொடுவதால் ஒளுமுறியாது.

ஆதாரம் : நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், ஒருவர் ஒளு செய்தபின் தன் மர்மஸ் தானத்தைத் தொடுவது பற்றி வினவப் பட்டபோது, அது உன் உறுப்பில் உண்டான ஒரு துண்டு (பகுதி) தானே! என்று கூறினார்கள்.

(நூல் : நஸயீ, திர்மிதீ, அபூதாவூது)

பஜ்ர் தொழுகை

4) நபியவர்கள் கூறினார்கள்; பஜ்ர் தொழுகையை நன்கு விடிந்தபின் (சூரிய உதயத்திற்குமுன்) தொழுங்கள். இவ்வாறு தொழுவதற்கு அதிகமான நற்கூலி உண்டு.

(திர்மிதீ)

மஃரிப் தொழுகை

5) நபியவர்கள் மஃரிப் இரண்டு ரகஅத்தில் சூரத் அஃராப்F ஓதி தொழுதார்கள். (நஸயீ)

இமாமைப் பின்பற்றுவது

6) நபியவர்கள் கூறினார்கள்; இமாம் என்பவர் பின் பற்றப்படுவதற்காக உள்ளவர். அவர் தக்பீர் கூறினால் நீங்களும் தக்பீர் கூறுங்கள்; இமாம் ஓதினால் நீங்கள் மவுன மாக இருங்கள்.

(அபூதாவூது, நஸயீ)

ஜும்ஆ பின் சுன்னத் 4 ரகஅத்,

7) நபியவர்கள் கூறினார்கள்; ஜும்ஆ பர்ளுக்குப் பின் நீங்கள் நான்கு ரகஅத் தொழுது கொள்ளுங்கள்.

(நூல் : முஸ்லிம்)

வித்ரு தொழுகை வாஜிப்

8) நபியவர்கள் கூறினார்கள். எவர் வித்ரு தொழாமல் தூங்கினால் சுப்ஹு (நேரம் வருவதற்குள்) ஆனவுடன் தொழுது கொள்ளவும். (திர்மிதீ)

சலாம் கொடுப்பது பர்ளு அல்ல

9) நபியவர்கள் கூறினார்கள்; உங்களில் ஒருவர் தொழுகையின் கடைசி இருப்பில் அமர்ந்திருக்கும் போது சலாம் கொடுப்பதற்கு முன், தொடக்கு ஏற்பட்டு விட்டால் நிச்சயமாக அவர் தொழுகை கூடும்,

(திர்மிதீ)

கையை உயர்த்துதல்

10) ஹழ்ரத் இப்னு மஸ்ஊது ரழியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறினார்கள், அறிந்து கொள்ளுங்கள்; நான் உங்களுக்கு நபியவர்களின் தொழுகையைப் போன்று தொழுகிறேன் (என்று கூறி) தொழுதார்கள். ஒரு தடவை ஆரம்ப தக்பீரின் போது கையை உயர்த்தியது தவிர மற்ற இடங்களில் கையை உயர்த்தவில்லை.

(திர்மிதி, நஸயீ)

பொருளடக்கம்

பிஸ்மில்லாஹ் சூரத் பாத்திஹாவில் உள்ளவை அல்ல.

11) நிச்சயமாக நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஹழ்ரத் அபூபக்கர், ஹழ்ரத் உமர் (ரழியல்லாஹு அன்ஹுமா) அவர்களும் தொழுகையை அல்ஹம்து லில்லாஹிரப்பில் ஆலமீன் என்று கூறி ஆரம்பித்தார்கள்.

(நூல் : மிர்காத்)

தெளிவு பெற்ற அறிஞர்கள்

ஹழ்ரத் அபூ முதீஃ பல்கீ ரஹ்மதுல்லாஹி அலைஹி என்ற அறிஞர் கூறுகின்றார்கள்; ஒரு நாள் நாங்கள் கூஃபா மஸ்ஜிதில் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களுடன் அமர்ந்திருக்கும்போது; இமாம் சுப்Fயான் தவ்ரீ இமாம் முகாதில் இப்னு ஹய்யான், இமாம் ஹம்மாது இப்னு சல்மா, இமாம் ஜஃபர் சாதிக் ரஹ்மதுல் லாஹி அலைஹிம். இன்னும் சில உலமாக்களும் அங்கு வந்தனர். இவர்கள் இமாம் அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது நீங்கள் தீனில் கியாஸ் அடிப்படையில் சட்டங்களை அதிகமாகக் கூறுகின்றீர்கள்! ஆகையால் உங்கள் மீது எங்களுக்கு அச்சமாக உள்ளது என்று கூறினார்கள்.

இமாம் அவர்கள் (அன்று ஜும்ஆ நாள்) காலையி லிருந்து ஜவால் வரை அவர்கள் கூறியவைகளுக்கு விளக்கம் கூறி, தாங்கள் சட்டங்கள் உருவாக்கும் முறையைக் கூறி னார்கள்; முதலில் குர்ஆனை முற்படுத்துவேன்; அடுத்து நபிமொழி; அடுத்து சஹாபாக்கள் ஏகோபித்து அளித்த தீர்ப்பு. இவைகளின் மூலம் விடைகாண முடியாவிட்டால் தான் கியாஸ் அடிப்படையில் சட்டங்களை உருவாக்குவேன்'

என்று விளக்கமாக கூறியதும் வந்த அனைத்து இமாம்களும் எழுந்து, தங்களின் செயலுக்கு மன்னிப்பு கேட்டவர்களாக இமாம் அவர்களின் கரத்தைப் பிடித்து, நீங்களே உலமாக்களுக்கெல்லாம் தலைவர்; நாங்கள் விபரமின்றி தங்களிடம் நடந்து கொண்டமைக்காக எங்களை மன்னித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

இமாம் அவர்கள், அல்லாஹு தஆலா நமக்கும் உங்களுக்கும் இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் தனது மன்னிப்பை அருள்வானாகவும், என்று துஆச் செய்தார்கள்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன்)

ஹழ்ரத் அப்துல் மஜீது இப்னு அப்துல் அஜீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நாங்கள் இமாம் ஜஃபர்சாதிக் ரஹ்மதுல்லாஹி அலைஹிஅவர்களிடம் இருக்கும் போது, ஒரு இமாம் வந்து சலாம் கூறினார்கள். (பதில்) சலாம் கூறி முஆனகா செய்தார்கள்; தங்களுக்கு ஏதாவது பணிவிடை செய்ய வேண்டுமா? என்று கேட்டார்கள். (வந்த) இமாம் சென்றபின் அங்கு அமர்ந்திருந்தவர்களில்... ரஸூலுல்லாஹ்!அவர்களின் மகனே! அந்த இமாமை நீங்கள் அறிவீர்களா? என்று கேட்க, உன்னைவிட விளக்க மற்றவரை நான் பார்த்ததில்லை! நான், "அவர்களிடம்" பணிவிடை செய்யட்டுமா" என்று கேட்டேன்: ஆனால் நீங்கள், அவரைப் பற்றி எனக்குத் தெரியுமா? என்று கேட்கின்றீர்கள்! அவர்கள் "மிகப் பெரிய பகீஹ்-அறிஞர் இமாம் அபூ ஹனீபா" ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களாக இருக்கும், என்று கூறினார்கள்.

(நூல் : இஃலாஉஸ் ஸுனன்)

இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ்ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி

ஹழ்ரத் இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ் ரஹ்மதுல் லாஹி அலைஹி அவர்கள் ஹிஜ்ரீ 150 ஆம் ஆண்டு பிறந் தார்கள். ஹிஜ்ரீ 204 ஆம் ஆண்டு மிஸ்ரு நாட்டில் வபாத் ஆனார்கள். இமாம் அவர்கள் குழந்தைப் பருவத்தில் மக்காவுக்கு கொண்டு வரப்பட்டார்கள். அங்கே வளர்ந்து 7 வயதாக இருக்கும் போது புனித குர்ஆன் ஷரீபை மனனம் செய்தார்கள். 10 வயதில், இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கோர்வை செய்த "முஅத்தா" என்ற நபிமொழி நூலை மனனம் செய்தார்கள்.

இமாம் கல்வி கற்றவர்களில் மிகவும் பிரபலமானவர் கள் இருவர்: 1, மக்காவின் பிரபலமான முப்தி ஹழ்ரத் முஸ்லிம் இப்னு காலித் (ஜZன்ஜீ) ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள். 2, ஹழ்ரத் சுப்Fயான் இப்னு உயைனா ரஹ்ம துல்லாஹி அலைஹி அவர்கள்.

இமாம் அவர்கள் யதீமானதால் தங்கள் அன்னையிடம் கஸ்டமான வாழ்க்கையில் வாழ்ந்தார்கள். ஆனால் இமாம் அவர்கள் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் அறிவில் சிறந்து விளங்கினார்கள் 15வயதில்மார்க்கத்தீர்ப்பு வழங்கினார்கள்.

தங்களின் சிறு வயதில் உலமாக்களின் சபைக்குச் சென்று அவர்கள் கூறுவதை செவிமடுத்து,எலும்பு போன்ற வைகளில் எழுதி வைத்துக் கொள்வார்கள்.

இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் பற்றி கேள்விப்பட்டதும் அன்னாரிடம் கல்வி கற்பதற்காக மதீனா சென்றார்கள். ஹிஜ்ரீ 195 ஆம் ஆண்டு பஃதாது சென்று அங்கு இரு ஆண்டுகாலம் தங்கியிருந்து ஹனபீமத்

பொருளடக்கம்

பின் உலமாக்களிடம் அனேக விஷயங்களைக் கற்று (QATHEEM கதீம் என்று சொல்லப்படுகின்ற, தங்களின் முதல் நூலைக் கோர்வை செய்தார்கள்) மேலும் பாரீஸ், ஈராக் போன்ற பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். இந்த இரு ஆண்டுகள் (ஹிஜ்ரீ 172 TO 174 வரை) பயணத்தில் அனேக விளக்கங்களைக் கற்றுக் கொண்டார்கள்

பின்பு மக்கா திரும்பிய இமாம் அவர்கள் சில காலம் அங்கேயே தங்கினார்கள். இமாம் அவர்கள் மக்காவில் தங்கி இருக்கும் போது ஹாஜிகள் அன்னாரிடம் பல விளக்கங்களை கற்று தங்களின் நாடுகளில் அவைகளை பரப்பினார்கள். தங்களின் கடைசி காலத்தில் மக்காவி லிருந்து மிஸ்ரு சென்ற இமாம் அவர்கள் அங்கேயே ஹிஜ்ரீ 204 ஆம் ஆண்டு ரஜம் மாதம் வெள்ளிக்கிழமை மரண மடைந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அன்று மாலை அஸருக்குப் பின் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஈராக் நாட்டில் கண்ட விளக்கம்

இமாம் ஷாபியீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஆரம்பத்தில் இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களைப் பின்பற்றினார்கள். ஏனெனில் அவர்களிடமே அனேக விளக்கங்களைப் பெற்றார்கள், பின்பு ஈராக் நாடு சென்று ஹனபீ இமாம் அவர்களின் சட்டங்களையும், அன்னார் சஹாக்களின் சட்டங்களையும் கற்றார்கள். இவைகளின் மூலம் இமாம் அவர்கள் ஹிஜாஸ் மாகாணத்தில் அறியாத பல விஷயங்களை அறிந்து கொண்டார்கள். இதனால் இமாம் அவர்களின் அறிவாற்றலின் விளக்கம் அதிகமானது. இமாம் அவர்கள் ஈராக் பயணத்தின் மூலம் அறிந்து கொண்ட பல விளக்கங்களின் அடிப்படையில் முன்பு உருவாக்கிய QATHEEM சட்ட நூலை மீண்டும் ஆய்வு

செய்து அனேக சட்டங்களில் மாற்றம் செய்தார்கள். மேலும் தங்கள் இமாம் மாலிக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் மத்ஹபிற்கு மாற்றமாகவும் அனேக சட்டங் களை உருவாக்கினார்கள்.

ஹழ்ரத் இப்னு கல்தூம் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; இமாம் ஷாபியீ அவர்கள் இமாம் மாலிக் (ரஹ்மதுல்லாஹி அலைஹிமா) அவர்களுடன் சில காலம் இருந்த பின் ஈராக் சென்றார்கள். அங்கே ஹனபீ இமாம் அவர்களின் சஹாக்களை சந்தித்து அவர் களின் மூலம் அனேக விளக்கங்களைக் கற்றுக் கொண் டார்கள். ஆகையால் ஹிஜாஸ் மாகாணத்தில் அறிந்து கொண்ட நபிமொழி அடிப்படையிலும் ஈராக் நாட்டில் அறிந்து கொண்ட நபிமொழி அடிப்படையிலும் இரு நாடு களின் வழிமுறைகளையும் ஆராய்ந்து தனியாக ஒருவழியை (மத்ஹபை) உருவாக்கினார்கள். இதில் இமாம் மாலிக் அவர்களின் வழிமுறைகளுக்கு மாற்றமானதையும் உருவாக் கினார்கள்.

இமாம் ஷாபியீ அவர்கள் மிஸ்ரு நாட்டில் தங்கி இருந்த போது பல விளக்கங்களை தெரிந்து கொண்டார்கள். அதனால் தாங்கள் முன்பு கூறியவைகளில் சிலதை மாற்றிக் கொண்டார்கள். இதிலிருந்து மிஸ்ரு நாட்டில் பல புதிய ஆதாரங்கள் கண்டு கொள்ளப்பட்டன என்பது புலனாகும். இமாம் ஷாபியீ அவர்கள் மிஸ்ரு பகுதியிலுள்ள தங்களுக்கு முன்னுள்ள உலமாக்களின் மூலம் மிஸ்ரு நாட்டின் நிலை மைக்கேற்ப அளிக்கப்பட்ட தீர்ப்புகளைப் பெற்றுக் கொண் டார்கள். இதுபோன்ற விளக்கங்களை முன்பு அறியாதவர் களாக இருந்தார்கள். ஆகையால் தாங்கள் முன்பு கொண் டிருந்த கொள்கையில் சிலதை ஈராக்கில் கண்ட கொள்கை யின்படி மாற்றிக் கொண்டார்கள்.

பொருளடக்கம்

இமாம் ஷாபியீ அவர்கள் மிஸ்ரு வந்த போது மிஸ்ரு வாசிகள் மிகுதமாக இமாம் ஹனபீ, இமாம் மாலிக் மத்ஹபு களைப் பின்பற்றிக் கொண்டிருந்தனர். மேலும் இமாம் அவர்கள் தங்களின் மத்ஹபையும் அங்கே பரப்பினார்கள். அங்கு தங்கி இருக்கும் போது பல நூல்களை கோர்வை செய்தார்கள் அங்குள்ள ஹழ்ரத் அம்ரு இப்னு ஆஸ் அவர் களின் பெயரால் உள்ள மஸ்ஜிதில் அமர்ந்து தங்களின் மத்ஹபின் சட்டங்களை மக்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள் மேலும் மிஸ்ரு நாட்டில் முதன் முதலாக ''உஸூலுல் பிக்ஹு'' உருவாக்கினார்கள்.

இமாம் ஷாபியீ அவர்களின் மத்ஹபை அன்னாரிட மிருந்து பல உலமாக்கள் கற்றுக் கொண்டார்கள். இமாம் அவர்கள் கோர்வை செய்த பல நூல்களையும் எழுதிக் கொண்டார்கள்.இதன் அடிப்படையிலே வாழ்ந்தனர். அவர் களில் மிகவும் பிரபலமானவர்கள். 1. ஹழ்ரத் முஹம்மது இப்னு அப்துல்லாஹ் இப்னு அப்துல் ஹகம்- அபூஇப்ராஹீம் இஸ்மாயீல் இப்னு யஹ்யா முஜ்னீ.

2. ஹழ்ரத் அஷ்ஹப்.

1. இமாம் மாலிக் அவர்களின் சஹ்ாக்களிலுள்ள ஹழ்ரத் இப்னு காசிம் ரஹ்மதுல்லாஹி அலைஹிம் அவர்கள்.

மாபெரும் கல்விக்கூடம்

மிஸ்ரு நாட்டில் ஷாபியீ உலமாக்களுக்காக ஹழ்ரத் அம்ரு இப்னு ஆஸ் மஸ்ஜிதுக்கு அருகில் மிகப் பெரிய அளவில் அரபி கலாசாலை ஹிஜ்ரீ 566ல் சலாஹுத்தீன் என்பவரால் கட்டப்பட்டது. இதுவே மிஸ்ரில் கட்டப்பட்ட முதல் மத்ரஸா. இமாம் ஷாபியீ அவர்களின் மண்ணறைக்கருகில்

அன்னாரின் மத்ஹபை மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக ஹிஜ்ரீ 574 ஆம் ஆண்டு "மத்ரஸா ஸலாஹிய்யா" என்ற பெயரில் மத்ரஸா கட்டப்பட்டது. தனியான ஊர் போன்று அம்மத்ரஸா காட்சி அளித்தது. அவ்வளவு பிரமாண்டமான கல்விக்கூடம் அது. இதே இடத்தில் ஹிஜ்ரீ 1175 ஆம் ஆண்டு இமாம் ஷாபியீ மஸ்ஜித் என்ற பெயரில் புதிய பள்ளியை மிகப் பெரிய அளவில் நிர்மாணித்தனர்.

ஷாம் நாட்டில் ஷாபியீ மத்ஹபை முதன் முதலாக ஹழ்ரத் அபூஜுர்ஆ முஹம்மது இப்னு உத்மான் திமிஷ்கீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் புகுத்தினார்கள். அவர்கள் ஹஜ்ரீ 301 ஆம் ஆண்டு மரணமானார்கள்! இவர்கள் ஷாம் நாட்டின் நீதிபதியாக பொறுப்பேற்று ஷாபியீ மத்ஹபின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியதால் ஷாபியீ மத்ஹபு பரவியது, மேலும் "முக்தஸர் முஜ்Zனீ" என்ற நூலை மனனம் செய்பவருக்கு 100 தீனார்கள் கொடுப்பார்கள். அவர்களின் காலத்தில் ஷாபியீ உலமாக்கள் அதிகமானார்கள்.

பஃதாதில் ஷாபியீ மத்ஹபின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் மிகவும் பிரபலமானவர்கள்; ஹழ்ரத் ஹஸன் இப்னு முஹம்மது ஜஃபFரானீ, ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் (இவர்கள் ஹஜ்ரீ 260 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள்)

முர்வு என்ற பட்டணத்தில் இமாம் அவர்களின் மத்ஹபை ஹழ்ரத் அஹ்மது இப்னு சியார் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் புகுத்தினார்கள். இவர்களுக்குப்பின் ஹழ்ரத் ஹாபிழ் அப்துல்லாஹ் இப்னு முஹம்மது இப்னு ஈஸா மர்வஜிய்யா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்.

மத்ஹபிற்காக தோட்டங்களை விற்றார்கள்

ஹழ்ரத் இப்னு சியார் அவர்கள் இமாம் ஷாபியீ அவர்களின் நூல்களை முர்வு பட்டணத்திற்கு சுமந்து கொண்டு செல்வதைக் கண்ட மக்கள் ஆச்சரியமடைந்தனர். இமாம் ஷாபியீ அவர்களின் நூல்களை ஹழ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் பல பிரதிகளா எடுக்க முனைந்தபோது அதை செய்யவிடாமல் தடுத்து, தங்களுக்குரிய தோட்டங்களை விற்று அதன் பணத்தை எடுத்துக் கொண்டு மிஸ்ரு சென்று இமாம் ஷாபியீ அவர்களின் நூல்களை பல பிரதிகளாக எடுத்து அவைகளை முர்வு பட்டணத்திற்குக் கொண்டு வந்து மக்களுக்குக் கொடுத்தார்கள். அதன் மூலம் அம்மக்கள் ஷாபியீ மத்ஹபை அறிந்து கொண்டார்கள். இப்பெரியவர் ஹிஜ்ரீ 293 ஆம் ஆண்டு மரணமானார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

தராவீஹ் 20 ரக அத்துகளே

ஹழ்ரத் ஹுதைபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றாள், நபீ ஸல்லல்லா அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; நான் உங்களிடம் எவ்வளவு நாள் இருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. மற்றொரு (அறிவிப்பில் சிறிது காலமே இருப்பேன்) ஆகையால் எனக்குப்பின் அபூபக்கர், இன்னும் உமரை பின் பற்றுங்கள்.

(நூல் : திர்மதீ)

ஹாபிழ் அபூ நஸ்ர் கிஸார் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இன்னும் அதிகமாக கூறுகின்றார்கள்; அவ்விரு

பொருளடக்கம்

வரும் (அபூபக்கர், உமர்) அல்லாஹுத் தஆலாவிடமிருந்து நீட்டப்பட்ட கயிறு. அவ்விருவரையும் பின்பற்றியவர், பிரியாத வலுவுள்ள கயிற்றைப் பற்றிப் பிடித்தவர் போன்றவராவார்.

(நூல் : மிர்காத்)

தராவீஹ் தொழுகை, ஆண்களுக்கும், பெண்களுக்கும் "சுன்னத் முஅக்கதா — கட்டாயமான சுன்னத்தாக இருக்கும். அதை ஜமாஅத்தாக தொழுவது சுன்னத்தாக இருக்கும். தராவீஹை வீட்டில் தொழுபவர் அங்குள்ளவர்களைக் கொண்டு ஜமாஅத்தாக தொழுவது சுன்னத்தாகும். தனியாக தொழுபவர் ஜமாஅத்தின் நன்மையை இருந்தவராவார். நபீஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் செயலைக் கொண்டு இது சுன்னத் என்று உறுதி படுத்தப் பட்டுள்ளது.

புகாரீ, முஸ்லிம் கிரந்தங்களில் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று இரவுகள் பள்ளியில் சஹாபாக்களைக் கொண்டு எட்டு ரத்அத்துகள் தொழுது மீதமுள்ளவைகளை வீட்டில் தொழுது பூரணமாக்கினார்கள்.

வீட்டில் தொழுது பூரணமாக்கிய தொழுகையும் தராவீஹாக இருக்கும் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 3 இரவுகள் சஹாபாக்களைக் கொண்டு தராவீஹ் தொழுதது அத்தொழுகை சுன்னத் என்பதை அறிவிக்கின்றது. தங்கள் உம்மத் மீது கொண்ட பாசத்தாலும்—பயத்தாலும் அதை தொடராக பள்ளியில் தொழ தயங்கி விட்டு விட்டார்கள்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பள்ளியில் தொழுத தொழுகையும் அதன் மீதியை வீட்டில் தொழுத

பொருளடக்கம்

தொழுகையும் தராவீஹ் 20 ரக அத்துகள் என்பதை ஹழ்ரத் உமர்ரழியல்லாஹு அன்ஹு அவர்களின்செயலைக் கொண்டு உறுதிபடுத்தப்பட்டது. இவர்களின் இம்முடிவை அனைத்து நபித் தோழர்களும் ஏற்றனர். அன்னாருக்குப் பின்னுள்ள கலீபாக்கள் யாரும் அதற்கு மாற்றமாக நடக்கவில்லை. ஏனென்றால் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இம்முடிவு நபியவர்களின் செயல்களிலிருந்தே உருவானதால் அனைத்து சஹாபா பெருமக்களும் ஏற்றுக் கொண்டனர்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்; எனது வழிமுறையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நேர்வழி பெற்ற என் சஹாபாக்களின் வழியையும் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; அதை கடவாய்ப் பற்களைக் கொண்டு உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

(நூல் : அபூதாவூது)

ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இம்முடிவை கலிமாச் சொன்ன எவரும் மறுத்ததில்லை. ஏனெனில் சஹாபாக்களின் ஈமானுக்கு யாருடைய ஈமான் ஈடாக முடியும் இத்தகைய உத்த சஹாபாக்கள் ஒருமித்து அனைவரும் ஏற்றுள்ளனர். இதை மறுப்பவர், நபியவர்களின் கூற்றை மறுத்த பெரிய குற்றவாளியாவார்.

ஹழ்ரத் இமாம் அபூஹனீபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தராவீஹை 20 ரக அத்துகள் என்று ஏற்படுத்தியது பற்றி வினவப்பட்டபோது கூறினார்கள்; தராவீஹ் 20 ரக் அத்துகள் கட்டாயமான சுன்னத்தாகும். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இதை

தன் இஷ்டப்படி ஏற்படுத்தவில்லை; அதை புதிதாக உண்டாக்கவுமில்லை. நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமுள்ள அசலான ஒன்றின் மூலமே அதை ஏற்படுத்தினார்கள்.

நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உறுதியான செயலின்படியும் மிகச்சிறந்த சஹாபாக்களின் முடிவின்படியும் ஏற்படுத்தப்பட்ட தராவீஹ் தொழுகை 20 ரக் அத்துகளாக இருக்கும்.

(நூல் : அல்பிக்ஹு அலல் மதாஹிபில் அர்பஆ)

ஹழ்ரத் ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்; நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவில் வெளியாகி பள்ளிக்குச் சென்று தொழுதார்கள். சஹாபாக்களும் அவர்களைப் பின்தொடர்ந்து தொழுதார்கள். அன்று பகலில் ஜனங்கள் (இரவில் தொழுத தொழுகையைப்பற்றி) பேசிக் கொண்டார்கள். அடுத்தநாள் இரவு ஜனங்கள் அதைவிட அதிகமாகக் கூடினார்கள்; நபியவர்கள் தொழுதார்கள். சஹாபாக்களும் அவர்களைப் பின் தொடர்ந்து தொழுதார்கள். அன்று பகலில் ஜனங்கள் (இரவில் தொழுத தொழுகையைப்பற்றி) பேசிக் கொண்டார்கள். மூன்றாவது இரவில் கூட்டம் அதிகமானது. நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் வெளியாகி பள்ளிக்கு வந்து தொழுதார்கள். நபியவர்களுடன் சஹாபாக்களும் தொழுதார்கள். நான்காவது இரவு கூட்டம் அதிகமானதால் பள்ளியில் இடம் போதவில்லை. நபியவர்கள் (அப்பொழுது பள்ளிக்கு வராமல்) சுப்ஹுக்கு வந்தார்கள். தொழுகை முடிந்ததும் ஜனங்களை முன்னோக்கினார்கள்; தஷஹ்ஹுத் கூறினார்கள். அம்மா பஃது கூறியபின், நீங்கள் (ஆர்வத்துடன் இரவில் கூட்டம் கூட்டமாக பள்ளிக்கு வந்து தராவீஹ் தொழுவது பற்றி) எனக்குப் பயமில்லை. அதனால் அது

பொருளடக்கம்

உங்கள் மீது கடமையாக்கப்பட்டு, உங்களால் நிறைவேற்ற முடியாமலாகி விடுமோ என்று பயப்படுகிறேன் என்று கூறினார்கள். இந்நிலையில் நபியவர்கள் மரணமானார்கள்.

ரமழான் இரவில் நின்று வணங்குவது என்ற பாடத்தில் புகாரீ இமாம் இந்த ஹதீஸை கூறுகின்றார்கள். இதற்கு தராவீஹ் தொழுகை தான் என்று உலமாக்கள் ஏகோபித்துக் கூறுகின்றனர். (நூல் : புகாரீ. பக் 269)

இந்த ஹதீஸின் மூலம்; நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தராவீஹ் தொழுகையின் பக்கம் காட்டிய ஆர்வமும் தங்கள் உம்மத்தின் மீதுள்ள முழு கவலையையும்வெளிப்படுத்தியுள்ளார்கள்.தராவீஹ் தொழுகையை தொடர்ந்து தொழுது, அதனால் கடமையாக்கப் பட்டு, தங்கள் உம்மத் அதை நிறைவேற்றாவிட்டால் தண்டிக்கப்பட்டு விடுவார்களே என்ற அச்சமே நபியவர்கள் 4வது நாள் அத்தொழுகையை நிறைவேற்ற பள்ளிக்கு வரவில்லை என்பதை ஹதீஸ் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

நபியவர்களின் மரணத்தின் மூலம் அப்பயம் நீங்கி விட்டபடியால் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபியவர்களின் அந்த ஆவலைப் பூர்த்தி செய்யும் முறையில் தராவீஹை 20 ரக்அத்துகள் என்று அறிவித்து பள்ளியில் ஜமாஅத்தாக தொழும்படி ஏற்பாடு செய்தார்கள்.

மஸ்ஜிது நபவிய்யில் உத்தம சஹாபாக்கள் ஜமாஅத்தாக தராவீஹ் தொழுவதைக் கண்ட ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்; ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தராவீஹ் தொழுகையைக் கொண்டு அல்லாஹு தஆலாவின் இல்லங் (பள்ளி) களை பிரகாச மாக்கியதற்காக அல்லாஹு தஆலா அன்னாரின் கப்ரை

பொருளடக்கம்

பிரகாசமாக்குவானாக! (ஆமீன்) என்று துஆச் செய் தார்கள். (நூல் : புகாரீ ஷரீபின் ஹாஷியா)

ஹழ்ரத் இப்னு தீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்லில் இருந்தே ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் தராவீஹ் 20 ரக அத்துகள் என்று ஏற்படுத்தினார்கள்.

ஹழ்ரத் இப்னு பத்தால் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்; தராவீஹ் தொழுகை சுன்னத் தாகும். ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபீஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செயல் களிலிருந்தே அத்தொழுகை 20 ரக் அத்துகள் என்று ஏற் படுத்தினார்கள். நபியவர்கள், உம்மத் மீது பர்ளாக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் அதை விட்டார்கள்.

(புகாரீ ஷரீபின் ஹாஷியா)

ஷைத்தான் பிரதிநிதிகள்... எச்சரிக்கை!

மௌலானா ஹழ்ரத் சய்யது அல்ஹாஜ் அப்பாஸ் கராரா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் அத்தீனு—வன்நஸீஹத் என்ற நூலில் தராவீஹ் 20 ரக அத்துகள் இல்லை என்று கூறுபவர்களைப்பற்றிக் கூறு கின்றார்கள்;

‘‘ஷைத்தானின் ஊசலாட்டத்தினால் பீடிக்கப்பட்ட வர்களை விட்டு நீ விலகிக் கொள்! அக்குழப்பவாதிகள், தராவீஹ் எட்டு ரக் அத்தை விட அதிகமாக தொழுவது பித்அத் என்றும், அதை ஜமாஅத்தாக தொழுவது பித்அத் என்றும், அது சுன்னத்திற்கு மாற்றமானது என்றும் கூறி,

பொருளடக்கம்

உண்மையான முஸ்லிம்களைச் சந்தேகத்தில் ஆழ்த்த முற்படுகின்றனர். சத்திய சஹாபாக்கள், தாபியீன்கள் ஆகியோர் தராவீஹ் 20 ரக்அத்துகளே என்று உறுதிப் படுத்தி, வாழ்ந்தும், தொழுதும் காட்டி விட்டுச் சென்றிருப் பதை இக்குழப்பவாதிகள் மறைக்கின்றனர். இவர்களை விட்டு கலிமாச்சொன்ன ஒவ்வொரு முஸ்லிமும் விலகிக் கொள்ள வேண்டும்!".

வழிகெட்ட கூட்டம் 6x12=72

குர்ஆன், ஹதீஸை அவரவர் பார்த்து பின்பற்ற வேண்டும். யாருடைய கருத்துகளையும் கேட்கக் கூடாது, 10 நாளில் ஒருவரை ஆலிமாக்கி விடுகிறேன், என்று அகில உலக மகாப் புழுகர்கள்—வழிகெடுப்போர் கூறுவது போன்று, இவர்களின் முன்னோர்களான;

1. ஹரூரிய்யா
2, கத்ரிய்யா (க, அரபு எழுத்துகளில் 21 வது எழுத்து)
3, ஜஹ்மிய்யா (ஹ் 21வது எழுத்து)
4, மர்ஜிஆ.
5, ராபிFழா (ழா, 15வது எழுத்து)
6, ஜப்ரிய்யா

ஆக இந்த ஆறு கூட்டங்களும் தங்களின் மனம் போன போக்கில் ஷரீஅத்திற்கு விளக்கம் கூறி தாங்கள் வழிகெட்டு மற்றவரையும் வழி கெடுத்தனர். இந்த 6 கூட்டம் ஒவ் வொன்றும் அவைகளுக்குள் குழப்பமான கொள்கையால் 12 ஆக பிரிந்தது. அதாவது ஒவ்வொரு கூட்டமும் 12 ஆக (6X12=72) பிரிந்தது. இந்த கூட்டமே வழிகெட்ட கூட்டம். இவர்களைப் பற்றியே நபீ ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் வழிகெட்ட கூட்டம் என்று கூறியுள்ளார்கள். வழி கெட்ட தங்களின் முன்னோர்கள் 6X12=72 ஆக எப்படி ஆனார்களோ அதுபோன்று அவர்களின் வாரிசாக இன்று செயல்படுவோர் ஆரம்பத்தில் ஒன்றாகவே மக்களை வழி கெடுத்தனர். இப்பொழுது பல பிரிவாகப் பிரிந்து மக்களை வழிகெடுக்கின்றனர். குழப்பம் விளைவிப்பதிலும், பல பிரிவாக பிரிவதிலும் இவர்கள் தாம் தாமும் வழி கெட்டு, மற்றவரையும் வழி கெடுத்த தங்களின் முன்னோர்களின் செயலை அப்படியே பின்பற்றுபவர்கள்.

குர்ஆன், ஹதீஸுக்கு அவரவர் விளக்கம் கூறலாம். என்றிருந்த காலத்தில் அவரவர் தன் இஷ்டம்; இச்சைக்குத் தகுந்தபடி விளக்கம் கூறி, எது தங்களுக்கு இலகுவானதோ அதை கூறினர், அதனால் வழி கெட்டனர். உதாரணமாக: “முர்ஜிஆ”என்ற கூட்டம் தன் மனம் போனபோக்கில் குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் கூறியது. அதாவது, கலிமா - ஈமான் மட்டும் கொண்டு விட்டால் எப்பாவத்தை செய்வதாலும் அவன் நரகம் புக மாட்டான். இதற்கு அவர்கள் (67—9) என்ற ஆயத்தைக் காரணம் காட்டுகின்றனர். ஆனால் இவர்களுக்கு நேர்மாற்றமாக, வழிகெட்ட “முஃதஜிZலா” என்ற கூட்டம் இவ்வாறு கூறுகிறது: ஒரு முஸ்லிம் ஒரு பாவத்தைச் செய்தாலே அவன் ஈமானை விட்டு வெளியேறியவனாவான்,என்று கூறி இதற்கு ஆதாரமாக (4. 93) என்ற வசனத்தைக் காரணம் காட்டுகின்றனர். அவரவர் குர்ஆன், ஹதீஸுக்கு விளக்கம் கூறலாம் என்றிருந்ததால் என்னவாகும் என்பதற்கு இது சிறு உதாரணமாகும்.

அவரவர் மனம் போன போக்கில் குர்ஆன் ஹதீஸுக்கு விளக்கம் கூறினால் நிலைமை என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர்கள் சில ஆயத், சில ஹதீஸ்களை மட்டும் எடுத்துக் கொண்டு அதன் பொருளைக்

கூறுவார்கள். மேலெழுந்த வாரியாக சரியென்று தோன்றும். ஆனால் அவை மிக ஆபத்தானவை; ஈமானையே இழக்கச் செய்யக் கூடியவையாகும். வழி கெட்ட கூட்டமும், இன்று அவர்களின் வாரிஸாக செயல்படுவோரும் சரி தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் சலுகைகளை வாரி இறைப்பது போன்று வழி கெட்ட--வழி கெடுக்கக்கூடிய இவர்கள் பல சலுகைகளைக் கூறி: இது வேண்டாம்! அது வேண்டாம்!! இது மட்டும் செய்தால் போதும்!!! என்றெல்லாம் கூறி, மக்களை வழி கெடுப்பதைக் காணலாம். அல்லாஹு தஆலா, இவர்களின் சூழ்ச்சியிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றுவானாகவும் ஆமீன்!

இன்றைய குழப்பவாதிகளின் முன்னோர்

வழி கெட்ட கூட்டத்தினரின் கொள்கைகளை எழுதுவதற்கே அச்சமாக உள்ளது. இருந்தாலும் குழப்பவாதிகளின் சூழ்ச்சியில் அகப்பட்டோர் படைப்பினை பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் எழுதப் படுகிறது! "ஹரூரிய்யா" என்ற கூட்டம் 12 கூட்டமாகப் பிரிந்தது. அவைகளில் சில.. "ஷம்ராகிய்யா" (கி, அரபு எழுத்தில் 7வது எழுத்து) அன்னியப் பெண்களைத் தொடுவதால் எவ்வித குற்றமுமில்லை. ஏனெனில் அவர்கள் சுகம் தரக்கூடிய மலர்கள்.

அக்னசிய்யா (க் 7வது எழுத்து) மனிதனின் மரணத்திற்குப் பின் எவ்வித நன்மை, தீமை அவனை அடையாது.

"ஹிக்மிய்யா" அடுத்தவனுக்குத் தீர்ப்புக் கூறுபவன் காபிராவான்.

"கத்ரிய்யா" (க, அரபு எழுத்துகளில் 21வது எழுத்து, த், 8வது எழுத்து)

‘‘கைஸானிய்யா’’ அல்லாஹ்வினால் நமது செயல் உண்டாகிறதா? அல்லது அவரளர்களிலிருந்தே உண்டாகிறதா? என்பது நமக்குத் தெரியாது. இதற்குப்பின் மனிதன் நற்கூலி வழங்கப்படுவானா? அல்லது வேதனை செய்யப்படுவானா? என்பதையும் நாம் அறியோம்.

‘‘ஷைத்தானிய்யா’’ அல்லாஹு தஆலா ஷைத்தானை படைக்கவில்லை. ‘‘ஷரீகிய்யா’’ குப்ரைத் தவிர எல்லாத் தீமைகளும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டவைகளே!

‘‘ஜப்ரிய்யா’’ பாவம் செய்தவன், அவன் தவ்பா செய்வதின் மூலம் அவனது தவ்பா ஏற்கப்படமாட்டாது.

‘‘நாகிஷிய்யா’’ நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடன்படிக்கையை மீறுபவனின் மீது எவ்வித குற்றமுமில்லை.

‘‘ஜஹ்மிய்யா’’ 12 கூட்டமாக பிரிந்தது. அவைகளில் சில...

‘‘மு அத்தலா’’ (த், த அரபு எழுத்துகளில் 16வது எழுத்து) அல்லாஹு தஆலாவை காண முடியும் என்று வாதிட்டவன் ‘‘காபிர்.’’

‘‘வாரிதிய்யா’’ (தி, அரபு எழுத்துகளில்8 வது எழுத்து) அல்லாஹு தஆலாவை அறிந்தவன் நரகம் புகமாட்டான். அதில் புகுந்தவன் அதிலிருந்து எக்காலமும் வெளியாகவு மாட்டான்.

‘‘ஹர்கிய்யா’’ (கி, அரபு எழுத்துகளில் 21வது எழுத்து) காபிரை நரகம் ஒரு தடவை மட்டுமே கரிக்கும். இரண்

பொருளடக்கம்

டாவது தடவை சூட்டின் வேதனையின்றி நரகில் கரிக்கப் பட்ட நிலையிலே இருப்பான்.

''மக்லூஸிய்யா'' (க், அரபு எழுத்துகளில் 7வது எழுத்து) குர்ஆன்படைக்கப்பட்டது.

''பாFAனிய்யா'' சொர்க்கம், நரகம் அழிந்து விடும். இவர்களில் ஒருசாரார், இவ்விரண்டும் படைக்கப்படவில்லை, என்று கூறுகின்றனர்.

''அப்திய்யா'' (அ, அரபு எழுத்துகளில் 18வது எழுத்து) ரஸூல்மார்களை ஹுகமாஃ—அறிஞர்களே என்று மட்டும் கூறுகின்றனர்.

''கப்ரிய்யா'' (க, 21வது எழுத்து) கப்ர் வேதனை, ஷபாஅத் இவைகளெல்லாம் கிடையாது.

''முர்ஜிஆ'' 12 கூட்டமாகப் பிரிந்தது. அவைகளில் சில

''தாரிகிய்யா'' அல்லாஹு தஆலாவுக்காக அடியார்கள் மீது ஈமானைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆகையால் ஈமான் கொண்டு விட்டால் நாடியதைச் செய்யலாம்.

''ராஜிய்யா'' நன்மையைச் செய்தவன் அல்லாஹு தஆலாவுக்கு வழிபட்டவன் என்றோ,தீமையைச் செய்தவன் அல்லாஹு தஆலாவுக்கு மாறு செய்தவன் என்றோஇல்லை. ஏனெனில் அவனுக்கு அல்லாஹு தஆலாவிடம் என்ன? உண்டு என்பது நமக்குத் தெரியாது.

''சாலிபிய்யா'' நல்லவைகளை செய்வது ஈமானில் உள்ளவை அல்ல.

''பஹீஷிய்யா'' (ஹீ, அரபு எழுத்துகளில் 27வது எழுத்து) ஈமான் என்பது இல்மு—அறிவு. எவர் அசத்தியத்

திலிருந்து சத்தியத்தை அறியவில்லையோ, ஹராமிலிருந்து ஹலால் எது என்று அறியவில்லையோ அவர் ''காபிர்''.

''அமலிய்யா'' (அ. அரபு எழுத்துகளில் 18வது எழுத்து) ஈமான் என்றால் அமல் செய்வது.

''மு ஷப்பஹா'' (ஹா, அரபு எழுத்துகளில் 28வது எழுத்து) அல்லாஹு தஆலாவுக்கு கண், கை உள்ளது என்கின்றனர்.

''ஹஷ்விய்யா'' நபிமொழி அனைத்திற்கும் ஒரே சட்டம்தான். நபிலை விட்டவன் பர்ழை விட்டவன் போலாவான்.

ராபிFழா (ழா, அரபு எழுத்துகளில் 15வது எழுத்து) இக்கூட்டம் 12 ஆக பிரிந்தது. அவைகளில் சில....

''அலவிய்யா'' (அ, அரபு எழுத்துகளில் 18வது எழுத்து! ''நபீ'' பதவி ஹழ்ரத் அலீ அவர்களுக்கு உரியாது! ஹழ்ரத் ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸாம் அவர்கள் தவறிழைத்து விட்டார்,என்று கூறுகின்றனர்.

''அமிரிய்யா'' ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செயல்களில் கூட்டு உண்டு, என்று கூறுகின்றனர்.

''ஷீஆ'' நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களுக்குப் பின் ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களே தலைமைப் பதவிக்கு உரியவர், என்று வஸிய்யத் செய்திருந்தார்கள். ஆனால் இந்த உம்மத் இதற்கு மாறு செய்து விட்டது.

''இஸ்ஹாகிய்யா'' ''நபீ'' என்ற பதவி முற்றுப் பெறவில்லை. உலகம் உள்ளவரை உண்டு!

"நாஊஸிய்யா" இந்த உம்மத்தில் ஹழ்ரத் அலீ ரழியல் லாஹு அன்ஹு அவர்களே மிகச் சிறந்தவர். இவர்களை விட மற்றவரை சிறப்பிப்பவர் காபிராவார்கள்.

"அப்பாஸிய்யா" ஹழ்ரத் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களே மற்றவரைவிட கலீபா பதவிக்குத் தகுதியானவர்கள்.

"ரஜஇய்யா" (இ, அரபு எழுத்துகளில் 18வது எழுத்து) ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அவர் களின் தோழர்களும் உலகிற்கு மீண்டும் வந்து அவர்களின் விரோதிகளை பழி வாங்குவார்கள்.

"லாஇனா" (இ, அரபு எழுத்துகளில் 18வது எழுத்து) இக்கூட்டம் ஹழ்ரத் உத்மான், ஹழ்ரத் தல்ஹா, ஹழ்ரத் ஜுபைர், ஹழ்ரத் முஆவியா, ஹழ்ரத் அபூமூஸா, ஹழ்ரத் ஆயிஷா இன்னும் சில நபித் தோழர்களையும் (ரழியல் லாஹு தஆலா அன்ஹும்) சபிப்பார்கள்.

"முதரப்பிஸா" (ஸா, அரபு எழுத்துகளில் 14வது எழுத்து) ஒவ்வொரு காலத்திலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரின் மூலம் செயல்படுவார்கள். அவரையே இமாம் மஹ்தீ என்றும் கூறுவர்.

"ஜப்ரிய்யா" இக்கூட்டம் 12 ஆக பிரிந்தது. அவை களில் சில.... "முழ்தொரியா" (ழ். அரபு எழுத்துகளில் 15, தொ 16வது எழுத்து), மனிதன் எச்செயலையும் செய்வ தில்லை. அல்லாஹு தஆலாதான் அனைத்தையும் செய் கிறான்.

"மன்னானிய்யா" உன் உள்ளத்தில் எது நல்லவையாக படுகிறதோ அதை செய்.

''கைஸபிய்யா'' அடியான் நன்மை, தண்டனைத் தரக் கூடிய எதையும் அவனால் சம்பாதிக்க முடியாது.

''சாபிகிய்யா'' (கி, அரபு எழுத்துகளில் 21வது எழுத்து) நல்லதை நாடியவன் அதைச் செய்யலாம், செய்யாமலும் இருக்கலாம். நல்லவனுக்கு அவனுடைய தீமை எத்தீங்கும் செய்ய முடியாது. கெட்டவனுக்கு அவனுடைய எந்த நன்மையும் பலன் தராது.

''ஹலபிய்யா'' அல்லாஹுதஆலாவின் பிரியம் என்ற பானத்தைப் பருகியவனுக்கு எந்த சட்டமும் கிடையாது.

''கவ்பிFய்யா'' (க, அரபு எழுத்துகளில் 7வது எழுத்து) அல்லாஹுதஆலாவைப் பிரியப்பட்டவன் அல்லாஹுதஆலாவைப் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் நண்பன் நண்பனைக் கண்டு பயப்படமாட்டான்.

''பிFக்ரிய்யா'' அறிவு—ஞானம் எவ்வளவு ஏற்படுகிறதோ அந்த அளவு அவனுக்குக் கடமைகள் இல்லை.

மேலே கூறப்பட்ட வழி கெட்ட 12 கூட்டத்தினரின் சில கூட்டத்தின் தீய கொள்கைகள். இவைகள், சில ஆயத், சில ஹதீஸின் மேலெழுந்த வாரியாக பொருளை வைத்து இத்தீய கொள்கைகளை உருவாக்கினர். அதாவது மனோ இச்சையைப் பின்பற்றினர். ஆக இவர்கள் அனைவரும் வழி கெட்டவர்கள். நரகத்திற்கு உரிய 72 கூட்டம் இவர்களே என்று நபீ ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பொன்மொழி அறிவிக்கிறது.